PUBLIC LIBRARY
JAFFNA

பக்கங்கள் -20 அறிமுக விலை 20/=

# புதியவன்
## PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

பாதை 01 ஒகஸ்ட 02-ஒகஸ்ட் 09 - 2013 பயணம் 03



சிந்தித்திரு..

பெருவாரியான மக்கள் ஏன் அரசாங்கத்தின் மீது கோபமாக இருக்கிறார்கள் என்று புரியவில்லை. அரசாங்கம்தான் ஒன்றுமே செய்யவில்லையே!

- சோக்கிரட்டீஸ்

தற்போது புதிய பொலிவுடன்
www.putheyavan.com



## விடாக்கண்டனும் கொடாக்கண்டனும்...




" காணி, பூமி அனைத்தையும் விற்று நகைகளை அடைவு வைத்து அவரை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பினேன்... ஆறு மாதமாயிற்று இன்று வரை தகவலில்லை". என்கிறார். கண்ணீரும் கம்பலையுமாகஅந்த இளம் பெண்.

'அப்பா எப்ப வருவார்' எனக் கேட்கும் ஒரே குழந்தைகளுக்கு பதில் கூற அவளுக்கு முடியவில்லை.


புலம் பெயர்ந்து வாழும் உறவுகளிடம் கெஞ்சி, மன்றாடி கடன பெற்று மகனை அவுஸ்திரேலியாகூட்டிச் செல்லும் முகவரிடம் நம்பிக்கையோடு கையளித்த அந்த முதிய தாயின் கலங்கிய கண்களுக்கு மகன் போன இடமோ, இருக்குமிடமோ தெரியவில்லை.

அவுஸ்திரேலியா சகோதரனின் ஆதரவான நம்பிக்கையூட்டும் பதில் என்றைக்கு வரும் எனக் காத்திருக்கும் சகோதரிகளுக்கு யார் ஆறுதல் கூறுவார்?

கரை சேரும் படகுகளில் உள்ளவர்கள் எந்தத் தீவில்ஒதுங்கித் தடுத்து வைக்கப்பட்டிருப்பார்கள்? கரை சேராப் படகு கவிழ்ந்து மூழ்கியதில், அல்லது கவிழ்க்கப்பட்டதில் காணாமல் போனோர் எந்தக் கரையில் சடலமாக ஒதுங்கியிருப்பார்கள்?

தந்தையை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த மனைவி,பிள்ளைகளின் தொடர்பற்றுப் போன பெற்றோர்? என்று அநாதைகளாக, அகதிகளாக, அவமானம்சுமப்பவர்களாகவாழும் வாழ்வை எமக்களித்த விதிப்பயன் தான் என்ன?

முள்ளிவாய்க்கால் கரைதொடங்கி, அவுஸ்திரேலியக் கரை வரை நீளும்துன்பங்களுக்கு முடிவு தான் எது?
கடல் நீரின்உப்புத் தன்மைக்கு தமிழ் மக்களின் கண்ணீர் தான்காரணமோ?






# அக்கரைக் கனவுகளும்.. இக்கரைத் துயரங்களும்..

இளைய தலைமுறையினரின் இதயக்குரல்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட மாகாண சபைத் தேர்தல் யதார்த்தமும் தேவையும்...

செ. வவுனியன்

வட மாகாண சபை தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல்களும் கட்சிகளுக்கிடையிலான வேட்பாளர் தெரிவுத் திருவிழாவும் நிறைவடைந்துள்ள இந்நிலையில் இனி வரப்போகும் காலங்கள் வட புலத்தே இடம்பெறவுள்ள பிரசங்கங்களுக்கு மக்கள் முகம் கொடுத்து அதனூடாக தமது வேட்பாளர் தெரிவினை மேற்கொள்ளுதல் என்ற நிலையில் உள்ளது.

தேர்தலுக்கு மட்டுமே கிராம தரிசனம் செய்வார்கள் என சொல்லப்படும் அரசியலாளர்கள் எல்லோரும் பட்டி தொட்டியெங்கும் உலா வரும் காலமாக இருக்கும் என்பதற்குப்பால் தேர்தல் கால வெட்டுக்குத்துகளும் இடம்பெறும் என்ற ஐயப்பாடு மக்களிடையே நிறையவே உள்ளது.

எவ்வாறான சூழ்நிலை இருந்தாலும் மக்களது தீர்மானிக்கும் சக்தியும் அதனூடாக தமது பிரதேசத்திற்கான தகுதி வாய்ந்த பிரதிநிதியை தெரிவு செய்யும் கடமையும் மக்களிடம் விடப்பட்டேயுள்ளது.

இந் நிலையில் மக்களது மனங்கள் மாற்றலடையும் படி வாக்குறுதிகளும் பல்வேறு உதவித்திட்டங்களும் சலுகைகளும் வழங்கப்பட சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ள போதிலும் யதார்த்தத்தை சிந்திப்பவர்களாக செயற்பட வேண்டிய தருணம்மக்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளது என்பது உண்மை.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களாயினும் சரி பாராளுமன்றமாயினும் சரி, எவர் சிறந்த பணியை முன்னெடுத்தனர் என்பதனையும் எந்த கட்சி தாம் சார்ந்த இனத்தின் உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுத்தது என்பதனையும் நிலைநிறுத்துதல் அவசியமாகி இருந்தது.

வெறுமனே கிடைத்து விட்டதாக கூறப்படும்சில வேறு மாயையான சம்பவங்கயைும் சலுகைகளையும் கொண்டு தம் இனம் சார்ந்த எதிர்கால நிகழ்விற்கு மண் தூவும் பணியை இத் தேர்தலில் மக்கள் கைக்கொண்டு விடுதல் ஆகாது என்பது தற்போதைய கருத்தோட்டமாகும்.

இந்த வகையிலேயே தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இத் தேர்தல் தொடர்பாக எடுத்த முடிவினை ஒரு எடுத்துக்காட்டான விடயமாக கருதிக்கொள்ளலாம்.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர்கள் தமது தரப்பு நிலைப்பாட்டை விளக்குகையில், நடைபெறவுள்ள வட மாகாணசபைத் தேர்தல் முக்கியமானதாகும். ஏனெனில் தமிழ் மக்கள் யுத்தத்திற்கு பின்னரும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் சர்வதேச அழுத்தம் காரணமாக இத் தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தேர்தலை சர்வதேச நாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்திருந்தனர்.

நாம் வட மாகாணசபைத் தேர்தலில் வவுனியாவில் போட்டியிட்டால் 5000க்கு மேற்பட்ட வாக்குகளை எம்மால் பெறமுடியும். ஆனால் தமிழ் மக்கள் ஆட்சியமைக்கும் என எதிர்பார்க்கின்ற கட்சிக்கான வாக்குகள் குறைவடையும். இதனால் வாக்குகள் சிதைவடைந்து வவுனியா மாவட்டத்தில் குறித்த கட்சி பெறுகின்ற ஆசனங்கள் குறைவடையும் பட்சத்தில் எம்மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும்.

இதன் காரணமாக, இத் தேர்தலில் நாம் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளோம். வாக்குகள் சிதைவடைவதால் மக்கள் விரும்புகின்ற கட்சி தோல்வியடையக் கூடாது என்பதற்காகவே நாம் போட்டியிடவில்லை எனவும் தெரிவித்திருந்தனர். இவ்வாறான எதிர்கால சிந்தனை மேலோங்கிய செயற்பாடுகளை சில அரசுக்கு முண்டு கொடுக்கும் கட்சிகள் சிந்தித்தாக வேண்டிய நிலையுள்ளது.



**நாம் வட மாகாண சபைத் தேர்தலில் வவுனியாவில் போட்டியிட்டால்5000க்கு மேற்பட்ட வாக்குகளை எம்மால் பெறமுடியும். ஆனால் தமிழ் மக்கள் ஆட்சியமைக்கும் என எதிர் பார்க்கின்ற கட்சிக் கான வாக்குகள் குறைவடையும். இதனால் வாக்குகள் சிதைவடைந்து வவுனியா மாவட்டத்தில் குறித்த கட்சி பெறுகின்ற ஆசனங்கள் குறைவடையும் பட்சத்தில் எம்மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும்.**

**இதன் காரணமாக, இத் தேர்தலில் நாம் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளோம்.**

இதற்குமப்பால் தமிழ் மக்கள் தமது வாழ்வியல் போக்கு என்ற பதத்தை வைத்து மாகாணசபை தேர்தலை பார்த்தல் அவசியமாகின்றது. மாகாண சபை முறைமையை ஒழித்துக்கட்டி விடுவோம் என பூதாகாரமான பிரச்சனையாக காட்டும் சிகல உறுமய போன்ற இனவாத கட்சிகள் வெறுமனே சிங்கள மக்களுக்கு பூச்சாண்டி காட்டுவதாக உள்ளதே தவிர அதனூடாக எதனை சாதித்து விடலாம் என்பதை அம் மக்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பவில்லை.

தமிழ் மக்கள் மாகாண சபை முறைமையூடாக ஈழத்தை பெற்றுவிடுவர் என்ற மாயையை உருவாக்கி மேலும் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் மீதான காழ்ப்புணர்வை ஏற்படுத்த எத்தனிக்கும் சந்தர்ப்பதையே அதிகரிக்கின்றது எனலாம்.

இவ்வாறான சூழலிலேயே வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களது தெரிவுகள் முக்கியம் பெறுகின்றது. தேர்தலில் போட்டியிடுவதற்கு எல்லோருக்கும் விருப்பமாக இருக்கலாம். தமது மக்கள் சக்தியை நாடி பிடித்து பார்க்க ஆசைப்படலாம். ஆனால் இவ்வாறான பாரிய சூழ்ச்சிகளுக்குள்ளும் சவால்களுக்கூடாகவும் திறமையான செயற்பாடுகளை முன்னெடுக்கும் கட்சியையும் உறுப்பினர்களையும் தெரிவு செய்தல் முக்கியமானதாகின்றது.

'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக மாகாணசபையும் அமைந்து விடக்கூடாது என்பதை தெளிவான விடயமாக கொள்ளுதல் அவசியம். ஏனெனில் சர்வதேசத்தின் மத்தியில் பாரிய எதிர்பார்ப்புகளை தோற்றுவித்திருக்கும் இத் தேர்தலானது மக்கள் அபிலாசை கொண்ட கட்சி எது என்பதனை வெளிப்படுத்தவும் தமிழர் தம் உரிமையை முன் கொண்டு செல்லத்தக்கதான கட்சியினையும்த் தெரிவு செய்கின்றனரா என்பதனை வெளிப்படுத்தவும் அவசியமாகின்றது.

வேலை வாய்ப்புகள் பெற்றமைக்காகவும் துவிச்சக்கர வண்டிகளையும் தையல் இயந்திரங்களையும் பெற்றமைக்காகவும் சோரம் போகும் மக்கள் கூட்டமாக தமிழ் மக்கள் மாற்றமடைவார்களாயின் வரலாற்றில் கரும்புள்ளியை வைக்கும் மக்கள் கூட்டமாகவே அது இருக்கும் என்பதில் ஐயப்பாடுகள் ஏதுமில்லை.

இந் நிலையில் மாகாணசபை முறைமையில் திருப்தியில்லை என்ற கருத்தோட்டத்தினை கொண்டவர்களாயிருப்பின் அதனை தமக்குள்ளும் தாம் சார்ந்த கட்சிக்குள்ளும் வைத்திருத்தலே சிறந்ததாகின்றது. காலத்தின் தேவையறிந்து செயற்படுதலும் மக்களின் மனமறிந்து சேவையாற்றலும் அரசியலின் முக்கியமான விடயமாகியுள்ள இக் காலத்தில் வெறுமனே அறிக்கைப்போர் நடத்துவதாலும் மக்களின் மனங்களில் குழப்பத்தை ஏற்படுத்துவதாலும் எதனை சாதித்து விட முனைகின்றனர் என்பது மக்களிடம் உள்ள பெரும் கேள்வியாகவே தொடர்கின்றது.

கடந்த கால போராட்டங்களின் ஊடாக எமது மக்களுக்கு எது கிடைக்காது போனதோ அதனை அடைந்து விட மாகாண சபையால் முடியுமா என கேள்வி மேல் கேள்வி கேட்பவர்களுக்கு பதில் கூறுவதென்பது காலத்தை வீணடிக்கும் செயலாக காணப்பட்டாலும் மாகாண சபையினூடாக நாம் எமது அரசியல் ஸ்திரத்தன்மையை வெளிப்படுத்தப்போகின்றோம் என்பதுவே உண்மையாகவுள்ளது.

இவ்வாறான நிலையில் வாக்குகளை சரியான நிலையில் பயன்படுத்த வேண்டும் என்பதுடன் வாக்களிப்பினை மக்கள் முழுமையாக பயன்படுத்தி அதனூடாக தமது எதிர்கால அரசியல் பயணத்திற்கு அத்திபாரமிடுதல் அவசியம் என்பதை இத் தேர்தல் உணர்த்துகின்றது.

## எதிர்காலத்தின் மீது ஒரு பார்வை



-கலீல் ஜீப்ரான்-

நிகழ்காலத்தின் சுவர்களுக்குப் பின்னால் ஒளிக்கும் மானுடத்தின் பாடல்களை நான் கேட்டேன். அழகு என்னும் ஆலயத்தில் ஒலிக்கும் ஆராதனை நேர மணியோசையை கேட்டேன். உணர்ச்சிகள் என்ற உலோகத்தால் வடிவமைக்கப்பட்ட மணிகள் மனித இதயம் என்ற புனித மேடையில் பொருத்தப்பட்டுள்ளன.

இயற்கையின் மார்பின் மீது தொழுகை புரியும் கூட்டத்தை எதிர்காலத்தின் பின்னால் பார்த்தேன் கிழக்கு நோக்கிய அந்த முகங்களில் உண்மை என்ற உதயத்தின் ஒளிப் பிரவாகத்திற்கான எதிர்பார்ப்புக்கள் அறியாமையின் தோல்வி, பிரகாசத்தின் வெற்றி, ஆகிவற்றைப் பற்றி மனிதனுக்கு எடுத்துக் கூற ஒன்றுமேயில்லாத,-

-சிதைந்துபோன நகரத்தைப் பார்த்தேன் நான். சுற்றிலும் அமர்ந்தவாறு கவனிக்கும் இளைஞர்களிடம் தமது கடந்தகால கதைகளை சைப்பிரஸ் மரநிழலில் அமர்ந்தவாறு கூறிக் கொண்டிருக்கும் முதியவர்களை பார்த்தேன். மல்லிகை செடிகளுக்கு கீழே தம் இசைக் கருவிகளை மீட்டும் இளைஞர்களையும்.-

கருங்கூந்தல் அவிழ நாட்டியமாடும் அழகிகளையும் கண்டேன். அறுவடை செய்யும் கணவர்களையும். இனிய பாடல்களை பாடியவாறு தானியங்களை சேகரிக்கும் மனைவியர்களையும் கண்டேன். லில்லி பூக்களால் கிரீடம் செய்து தன்னை அலங்கரித்துக் கொள்ளும் பெண்ணைப் பார்த்தேன். மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்குமிடையில் உறுதி செய்யப்பட்ட நட்பை பார்த்தேன்,

நம்பிக்கையும் பாதுகாப்பும் கொண்ட பறவைகளும், பட்டாம் பூச்சிகளும் ஓடை நோக்கி பறந்து செல்வதைப் பார்த்தேன். ஏழ்மையையும் பார்த்ததில்லை. செல்வத்தையும் பார்க்கவில்லை. சமத்துவமும் சகோதரத்துவமும் மனிதகளிடையே நிரம்பியிருப்பதைக் கண்டேன். தம்மை தாமே குணப்படுத்திக் கொள்ளும் நுட்பம் எல்லோருக்கும் தெரிந்திருந்ததால்,

மருத்துவரைப் பார்க்கவில்லை. மனச்சாட்சியே மதகுருவாக இருப்பதால் வேறு ஒரு மதகுருவை பார்க்கவில்லை. நட்பும் தோழமையும் இயற்கை என்ற நீதிமன்றத்தில் அமுலாக்கப்பட்டதால் வழக்குரைஞர்களை பார்க்கவில்லை. ஆத்மாவின் விழிகளை மூடியுள்ள குழப்பம் என்ற திரை நீங்கி படைப்புகளுக்கு தானே ஆதாரம் என்று நினைத்துச் சிறுமைகளில் நின்று மேலோங்கும்--

மனிதனைப் பார்த்தேன். சொர்க்கத்தின் முகத்தில் மேகங்கள் எழுவதை தண்ணீரின் பரப்பிலிருந்து தென்றல் சேகரிப்பதையும், இப்போது ஆன்மா படிக்கிறது. பூக்களின் மூச்சில் மிளிரும் அர்த்தத்தையும், வானம்பாடியின் இசை இராகத்தையும். அது உணர்ந்து கொள்கிறது. நிகழ்காலத்துச் சுவர்களுக்குப் பின்னால் அமைக்கப்பட்ட வருங்காலம் என்ற அரங்கின் மீது, அழகென்னும் மணமகனையும், உணர்ச்சியென்னும் மணமகளையும் வரம்தரும் கடவுளாய் வாழ்க்கையையும் பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.08.2013 பாதை:01 பயணம்:03

# புதியவன்
PUTHEYAVAN

இல# 87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி.இல. 023 323844
E.mail: putheyavan2013@gmail.com

## பாவம் மக்கள்....

வடமாகாண சபைக்கான வேட்பு மனு தாக்கல் நடவடிக்கைகள் யாவும் எவ்வளவோ முரண்பாடுகள், மோதல்கள், குழப்பங்கள் மற்றும் குழிபறிப்புகள் என உள்ளக கோளாறுகளையும், புற சக்திகளின் அபிலாஷைகளுக் கேற்ப கொடுக்கப்பட்ட அழுத்தங்களையும் கடந்து அதிருப் திகளுடன் நடந்து முடிந்துள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட பிரமுகர்கள் பலர் வேட்பாளர் பட்டியலில் இல்லாதது பலருக்கு அதிர்ச்சியேயானாலும் இதுவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும். நமது அரசியலின் ஜனநாயகத் தன்மை குறித்து எதுவும் விபரிக்கத் தேவையில்லை.

அதுவும் குறிப்பாக நமது தமிழ் கட்சிகள் - குழுக்களின் அரசியல் செயற்பாடுகள் குறித்து மக்கள் தெளிவாகவே அறிந்து வைத்தேயுள்ளமையை கடந்த சில தேர்தல்களில் அவர்கள் வாக்களிக்கும் தமது உரிமையை பயன்படுத்தாது புறக்கணித்ததில் இருந்து விளங்கிக் கொள்ள முடியும். சுயமிழந்தவர்களாய் - நாற்காலிக் கனவுகளை மட்டும் சமந்த படி கிடைக்குமிடத்தில் 'மடம் கட்ட' நினைக்கும் கொள்கையற்ற, செயற்பாடுகளால் தம்மைத தாமே அவமதித்தபடி கடந்த சில மாதங்களாய் அலைந்து திரிந்த அத்தனை பேரையும் மக்கள் எந்த விதமான நம்பிக்கையுடனும் எதிர் கொள்ளப் போவதில்லை என்பது மக்களின் வாய்மொழிக் கருத்துக்களில் தொனிக்கும் அதிருப்தி புலப்படுத்துகின்றது. இருக்குமிடத்தில் இருந்தால் மட்டுமே ஒருவர் தனது இருப் பறியலுக்கான மதிப்பை தக்கவைத்துக் கொள்ள முடியும்.

முன்பு பாராளுமன்றக் கதிரையில் அமர்ந்திருந்த கௌரவத்துக்குரியவர்கள் இப்போது தம்மைத் தாமே கீழிறக்கி மாகாண சபைக் கதிரைகளுக்காக அடிபடுமளவிற்கு முரண்பட்டதையும், ஜனாதிபதி என்ற அதி - அதிகாரப் பதவிக்காய் போட்டியிட்டு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர், தற்போது மாகாண சபைக் கதிரையாவது கிடைத்தால் போதுமென்ற அவாவில் வேட்பாளர் ஆகியிருப்பதையும், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கல்விமான்கள் எனத் தனித்துவ தகைமை கொண்டோர்களும் கூட தமக்கு ஆதரவு கிடைக்காது எனச் சர்வ நிச்சயமாக தெரிந்த போதும் தேர்தல் பந்தயக் குதிரைகளாக மாற்றிக் கொண்டு தம்மை வேட்பாளர் என்ற அடை மொழிக்குள் புதைத்துக் கொண்டதையும் மக்கள் வெறுப்புடனும், வேடிக்கையுடனும் பார்த்து வெளிப்படையாகவே கிண்டல் செய்வதும் உண்மையே!

இது சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியாது என்று எவரும் கூறுவார்களேயானால் அதனை விடப் பைத்தியக்காரத்தனம் வேறில்லை.

கலங்கித் தெளிந்த மக்கள் தம் தலைவர்கள் எனப் பவனி வருபவர்களை சந்தேகக் கண்ணுடன் நோக்குவதும் தவிர்க்க இயலாததே.

கௌரவமான அடையாளங்களைச் சுமந்து கொண்டும் ஆர வார அசியலில் தம்மை அமிழ்த துவதன் பின்னணி என்ன என்பதே மக்களின் கேள்வி.

இக்கேள்விக்கான பதிலும் ரகசியமானதல்ல. ஆனாலும் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். அரசியல் ஒரு இலாபகரமான வர்த்தகம் அவ்வளவுதான். எரிகிற வீட்டிலும் பிடுங்கியது லாபம் எனக் கருதும் சுயநலம், நமது அரசியல்வாதிகளின் கொள்கையாக மாறி விட்டபின், சுயத்தை' இழந்தும் சுயநலம் பேணுதல் என்பதன் அர்த்தமின்மையை அவர்கள் உணரப்போவது கிடையாது. எவ்வாறாயினும் பரிதாபத்திற்குரியவர்கள் சமானிய மக்கள் மட்டுமே.



## அரசியல் கருவேப்பிலைகள்

**இலங்கை அரசாங்கத்தை நம்புகின்ற அனைவரும் கடைசியாக நடுத்தெருவில் தான் விடப்படுவார்கள். அவர்கள் முன்னாள் போராளிகளானாலும் இணக்க அரசியல் பேசுகின்றவர்களாயிருந்தாலும் கடைசி வரை கறிவேப்பிலையாகவே இலங்கையின் இனவாத அரசாங்கங்கள் எப்போதும் அவர்களை பயன்படுத்தும் என்பது எழுதப்படாததும் மாற்ற முடியாததுமான விதியாகும்.**

வடக்கு மாகாணசபைக்கான தேர்தலுக்கான வேட்பு மனுவினை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியான அரசாங்க தரப்புகளும் எதிர்தரப்புக்களான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் ஏனைய கட்சிகளும் தாக்கல் செய்துள்ளன. இந்நிலையில் தேர்தலுக்கான திகதியையும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆனால் வட மாகாணசபைத் தேர்தல் களம் திறக்கப்பட்டவுனேயே அதில் களத்தில் முதல் பலிக்கடாக்களாகப் பட்டவர்கள் முன்னாள் போராளிகள். அவர்களில் விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளராக பணியாற்றி பின்னர் அரசாங்க ஆதரவு தொலைக்காட்சியான டான் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவில் பணியாற்றிய தயாமாஸ்டர், புலிகளின் அரசியல் துறையின் முன்னாள் மகளிர் அணிப் பொறுப்பாளர் தமிழினி, ஆயுதமுகவரான கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன், கேணல் ராம் உள்ளிட்ட பலரது பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவர்களில் அதிதீவிரமாக இலங்கை அரசாங்கத்திற்காக வட மாகாணசபைத் தேர்தலில் பிரச்சாரங்களை மேற்கொண்டு அடிவாங்கிக் கொண்டவர் என்றால் அந்த பெருமை தயாமாஸ்டரையே சாரும்.

தேர்தல் தொடர்பான பேச்சுக்கள் அரசியல் களத்தில் நுழைந்தவுடனேயே தயாமாஸ்டர் மாறி மாறி அறிக்கைகளை விடுத்துக் கொண்டிருந்தார். இதன் பின்னர் வெளிப்படையாகவே யாழ்ப்பாண ஊடக வியலாளர்களிடம் தான் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவேன் என்றும் தெரிவித்து வந்தார்.

இதற்கான ஆரம்ப கட்டப் பணிகளையும் மேற்கொள்ளவும் தயாமாஸ்டர் தவறவில்லை. குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினால் கொழும்பில் நடாத்தப்பட்ட வேட்பாளர்களுக்கான நேர்முகத் தேர்விலும் அவர் கலந்துகொண்டிருந்தார்.

இதன் பின்னர் அவர் தான் அரச ஆதரவு தொலைக்காட்சியான டான் தொலைக்காட்சியில் வகித்து வந்த செய்திப் பிரிவுக்கான பொறுப்பாளர் என்ற பதவியையும் துறந்தார். இதன் உச்சக் கட்டம் என்னவென்றால் யாழ்ப்பாணத்தில் தயாமாஸ்டரை டான் தொலைக்காட்சியினர் வெளியேற்றும் போது சம்பிரதாய பூர்வமாக ஊடகவியலாளர் சந்திப்பினை நடாத்தியே அனுப்பிவைத்தனர்.

அதிலும் டான் தொலைக்காட்சியின் உரிமையாளர் ஊடகவியலாளர்களிடம் வடக்கு மாகாண சபை வேட்பாளராக தயாமாஸ்டர் தெரிவாகியுள்ள நிலையில் அவர் தனது டான் தொலைக்காட்சியலிருந்து விலக்கிச் செல்வதாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார். இந்நிகழ்விற்காகவே தயாமாஸ்டர் வெள்ளை வேட்டி சட்டைகள் எல்லாம் வாங்கி அணிந்து வந்தார்.

அந்தளவுக்கு அவர் இலங்கை அரசாங்கத்தை நம்பினார். இதனை வெளிப்படுத்தும் முகமாக அவர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது" முன்னாள் போராளிகளின் நலனுக்காகவே நான் தேர்தலில் குதிக்கின்றேன். நான் மற்றவர்களைப் போல இணங்கிப் போகும் அரசியலை செய்யவிரும்பவில்லை. அரசாங்கத்தை இணங்க வைக்கும் அரசியலையே செய்ய விரும்புகின்றேன். என்றும் தெரிவித்திருந்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் அலுவலகத்தில் சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜெயந் கலந்து கொண்ட நிகழ்வில் வட மாகாண சபை வேட்பாளர்களுடன் தயாமாஸ்டரும் ஒருவராக அமர்ந்து நிகழ்வில் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையில் அரசாங்கத்தின் வேட்பாளராக தயாமாஸ்டரை இலங்கை அரசாங்கம் முற்று முழுதாகவே சித்தரித்து வெளியே படம் காட்டியது. இதில் மயங்கிய தயாமாஸ்டரும் அந்த படத்தை எடுத்து தனது கழுத்தில் மாட்டிக் கொண்டு விட்டார். பாவம் கடைசியாக ஆப்பிழுத்த குரங்கு மாதிரி வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்கவில்லை என்பதால் வருத்தம் இல்லையென்று ஊடகங்களில் சிலவற்றில் அறிக்கை விட்டு தன்னை தானே சமாதானப்படுத்தவும் தொடங்கிவிட்டார்.

தயாமாஸ்டர் கடந்த காலத்தில் தான் பணியாற்றிய இடத்தில் அவர் சரியாக கற்றுக்கொள்ளவில்லை என்று தான் கூற வேண்டும். இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் கூறிய வாக்குறுதிகளையே நிறைவேற்றாத நிலையில் தன்னை போட்டியிட அனுமதிப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தாலும் அதில் எந்த அளவு உண்மையாக நடந்துகொள்ளும் என்பது குறித்து அவர் சிந்தித்திருக்கவில்லை.

பிரிந்த கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன் முதலமைச்சராக இருந்த போது தன்னால் ஒரு சாதாரண தொழிலாளியை கூட நியமிக்கமுடியவில்லை என்று பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். இப்போதும் அவர் இலங்கை அரசாங்கத்தில் கால்களை இறுதிப் பிடித்துக் கொண்டிருக்கின்றார் என்பது வேறுகதை. ஆனால் அவரால் அதை தவிர வேறு எதுவும் செய்ய முடியாதுஎன்பதும் திண்மம். இதனை அறிந்த பின்னருமாக இன்னமும் மக்கள் அரசாங்கத்தின் முத்திரையோடு வருகின்றவர்களை ஆதரிக்கவா போகின்றனர்?

தயாமாஸ்டருக்கு நடந்த இந்த சம்பவமானது வெறுமனே ஒருவருக்கு நடந்த சம்பவமாக எடுத்துக் கொள்ளமுடியாது. நாம் அனைவரும் தமிழர்கள், தமிழர்களில் முன்னாள் புலிகளாக இருந்தாலும், இணக்க அரசியல் பேசி அரசாங்கத்தை அண்டிப் பிழைப்பவர்களாக இருந்தாலும் அபிவிருத்தி வேலைவாய்ப்பு என்றுவேஷம் போட்டு வரும் வேறு எவராக இருந்தாலும் கடைசியாக அரசின் கறிக்கான கருவேப்பிலைதான்.

அவர்களுக்கான கேள்வி முடிந்ததும் அவர்கள் தூக்கி வீசப்படுவார்கள். அவர்களை நம்பி பாகில் ஏறும் அப்பாவி தமிழர்களும் மூழ்கிசாக வேண்டியது தான். தமிழர்களின் மூலமே எமது விடுதலை உணர்வினை வென்றெடுக்க முடியும். இப்போது இந்த கட்டுரையின் முதல் பத்தியை ஒருமுறை வாசியுங்கள்...

-லோரா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினீஸ்வரன்



# தீர்மானிக்கப்பட்ட முடிவுகளும், கழுத்தறுக்கும் பேச்சுக்களும்.

**வெ**வ்வேறு கருத்துடைய இரு தரப்புகள் தமக்கிடையே எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகாமாகத் திறந்த மனதுடன் பேச, சரி பிழைகளை நியாய பூர்வமாக அணுகி ஒரு முடிவுக்கு வருவது இணக்கப்பாடாகும். அதே வேளையில் ஒரு பேச்சுவார்த்தையின் மூலம் பலவீனமான தரப்பு அகங்கார முள்ள தரப்பின் கருத்துகளை எற்றுக் கொள்ள ஒரு முடிவு எட்டப் படுமானால் அது சரணடைவு.

இன்று இலங்கை அரசு தமிழ் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளும்படி வலியுறுத்துவதோ. அல்லது விக்கினேஸ்வரன் வடக்கின் முதலமைச்சராக வந்தால் அவருடன் பேசத் தயார் எனத் தெரியப்படுத்துவதோ நிச்சயமாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அல்ல தமிழர் தரப்பை தங்கள் கருத்துக்களுக்கு சரணடைய வைப்பதற்காகவே என்பது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தப் பட்டு விடுகிறது.

தமிழர் தரப்பு ஒரு நியாயமான நிலைப்பாட்டில் உறுதியாக நின்றால் அதைக் குழப்பியடிக்கவும் அரசு தயங்குவதில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச தரப்பிற்கும் ஒரு வருட காலம் பேச்சுகள் இடம் பெற்ற போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு சில முக்கியமான ஆலோசனைகளை முன் வைத்த போது பேச்சுகளை அப்படியே கிடப்பில் போட்டு விட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற மாயமான் விளையாட்டுக் காட்டத் தொடங்கியதை நாம் மறந்து விட முடியாது.

மகிந்த ராஜபக்ஷவும் அவரின் ஜனநாயக அரசாங்கமும் சொல்லும் செய்தி இது தான் அதாவது தமிழர் தரப்புடன் பேச்சுகளை நடத்துவது அவர்களைச் சரணடைய வைப்பதற்கேயொழிய பிரச்சினைகளை நியாயபூர்வமாகத் தீர்ப்பதற்கு அல்ல என்பதுதான் அது.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் ஊடகங்களின் பிரதானிகளையும், ஊடகவியலாளர்களையும் சந்தித்த போது தன்னிடமிருந்து காணி, பொலீஸ் அதிகாரங்களைப் பறிக்க எவரையும் அனுமதிக்கப் போவதில்லை எனச் சூளுரைத்துள்ளார். அது மட்டுமன்றி விக்கினேஸ்வரன் அவர்கள் வடக்கின் முதலமைச்சராக வந்தால் அவருடன் தான் பேசப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தான் பொலிஸ் அதிகாரங்களைத் தன்னிடமிருந்து எவரையும் பறிக்க அனுமதிக்கப் போவதில்லையென, அதாவது மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில்லை என அவர் முடிவு செய்த பின்பு வடக்கின் முதலமைச்சருடன் எதைப் பேச போகிறார் என்ற கேள்வி தான் இங்கு எழுகிறது.

ஒரு பிரச்சினை தொடர்பாக ஒரு தீரக்கமான முடிவு எட்டப் பட்டு விட்டால் அதைப்பற்றி பேசுவதில் என்ன பயன். அப்படியானால் தனது முடிவை எப்படி அமுல்படுத்துவது என்பது தொடர்பாக மாகாண முதலமைச்சருடன் பேசப் போகிறார். இங்கு தான் தமிழ் மக்களின் தலைமைகள் மிகவும் எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும். காலம் காலமாக தமிழ் மக்கள் மனிதரைக் கொன்று அழிக்கும் துப்பாக்கிக் குண்டுகளை விட சீனி பூசிய துப்பாக்கிக் குண்டுகளால் அனுபவித்த பேரழிவுகள் அதிகமானவை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள ஆட்சியாளர்களின் வெற்றிகரமான ஆக்கிரமிப்பு வரலாற்றை நன்கு அறிந்து வைத்திருப்பவர். ஒரு இன அமைப்பின் மூலோபாயம் நிலப் பரப்பில் அடங்கியுள்ளது என்பதை அவர் நன்கு அறிவார். தமிழர் தாயகப் பகுதியை சிங்கள மயப்படுத்துவதன் மூலம் இன அழிப்பை நிதானமாகவும், உறுதியாகவும் மேற் கொள்ளும் கொள்கையைக் கொண்டிருக்கிறார்.

எனவே தான் காணி, பொலிஸ் அதிகாரங்களை அவர் தனது கையை விட்டு வேறெவரிடமும் கொடுக்கத் தயாரில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்கள் மட்டுமன்றி தமிழ் மக்களின் சகல உரிமைகளும் பறிக்கப்பட்டு தமிழர்களை ஒரு தேசிய இனம் அல்ல என்ற நரகத்திற்கு கீழே தள்ளி ஒரு அடிமை இனக் குழுமமாக மாற்றுவது என்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசினால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட விஷயமாகும். அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் அதிலிருந்து எள்ளளவும் அவர்கள் இறங்கி வரப்போவதில்லை என்பது தெளிவாகவே புலப்படுகிறது. தமிழ் மக்கள் இறங்கினாலோ இறங்கா விட்டாலோ அவற்றை நிறைவேற்றுவதில் அவர்கள் உறுதியா யுள்ளனர். ஆனால் அந்த விஷயத்தில் அவர்களுக்கு ஒரு பெரும் நெருக்கடி உண்டு.

அதாவது தமிழ் மக்களுக்கு எவ்வாறான இன ஒடுக்கு முறை, அன அழிப்பு நடவடிக்கைகளைத் தமிழ் மக்களின் எதிர்ப்பை மீண்டும் மேற் கொள்ளும் போது ஐ.நா.சபை, சர்வதேச சமூகம், மனித உரிமை அமைப்புக்கள் போன்றனவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை எழும். அதன் காரணமாக இலங்கைக்கு சர்வதேச அரங்கில் பெரும் நெருக்கடிகள் உருவாகலாம்.

எனவே தான் தமது நிகழ்ச்சி நிரலை இலங்கை அரசு தமிழர் தரப்புடனான பேச்சுவார்த்தை என்ற நிலையின் பின்னால் அரங்கேற்ற முயல்கிறது. எனவே பேச்சுவார்த்தை ஒரு கழுத்தறுக்கும் ஆயுதமாகவே கருதிப் பயன்படுத்த முனையும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் இனப் பிரச்சினைகளுக்கு என்ன வழி என்ற கேள்வி எழலாம். இது நியாயபூர்வமான ஒரு கேள்விதான்.

இன ஒடுக்கு முறையின் கொடூரமே ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தது. சிங்கள ஒடுக்கு முறையாளர்களுடன் ஒன்று பட்டு எங்கள் உரிமைகளுடன் வாழ முடியாது என்பதாலேயே தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தது. எனவே தனிநாட்டுக் கோரிக்கைக்கோ, ஆயுதப் போராட்டத்திற்கோ அடிப்படைக் காரணமாக அமைந்தது. இன ஒடுக்கு முறையே. இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காகவே ஆயுதப் போராட்டம் பலம் பெற்றிருந்த வேளையில் கூட இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டனர்.

எப்படி இருந்த போதிலும் இனப் பிரச்சினைக்கு ஒரு நியாய பூர்வமான தீர்வை எட்ட இலங்கையின் ஆட்சியாளர்கள் முன் வரவில்லை.

ஆனால் பல நாடுகளின் கருத்துகளை வெவ்வேறு வாக்குறுதிகளின் பேரில் பெற்று இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்தனர். தமிழ் மக்கள் பலம் பெற்றிருந்த போது இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை எட்ட விரும்பாத ஆளும் தரப்பு தமிழ் மக்கள் பலவீனமான நிலையில் உள்ள போது அதற்குத் தயாராகுமா? அப்படியான நிலையில் தமிழ் மக்களுக்கு உள்ள ஒரே வழி தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் தமிழ் மக்கள் ஒரு பலமான கட்சியாகத் தம்மை உருவமைத்து கொள்வது தான்.

வடக்குக் கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கடந்த பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான நாடாளுமன்ற ஆசனங்களில் வெற்றி பெற்றதால் இன்று ஐ.தே. கூட்டமைப்பு தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் தமிழ் மக்களின் தலைமைச் சக்தியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் மூன்றே மூன்று ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மட்டுமே வடக்கில் தெரிவு செய்யப்பட்டாலும் கூட அவர்கள் அரசின் ஒடுக்கு முறைகளுக்கு துணை போவது மட்டுமன்றி அவற்றை நியாயப்படுத்தியும் வருகின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதன் மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு கண்டு விட முடியும் என்பதை ஒரு சிறு துளியளவு கூட நம்பவில்லை. ஆனால் தமிழ் மக்களின் பலமான ஒரு சக்தியாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். தமிழ் மக்கள் மீது தொடர்ந்து கட்டவிழ்ந்து விடப் படும் இன ஒடுக்குமுறைகளுக்கு ஒரு உறுதியான தடைக் கல்லாக இருக்க முடியும்.

வடக்கு மாகாண சபை ஜனநாயக வழியிலான போராட்டங்களை முன்னெடுக்கும் போது- அதன் பின்னே தமிழ் மக்கள் அணி திரளும் போது- அது ஒரு சக்தியாக மேலெழும்.

வடமாகாண சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் தமிழ் மக்களின் குரலாகச பெறும். மாகாணசபைத் தீர்மானங்கள், நீதிமன்ற வழக்குகள், ஆர்ப்பாட்டப் பேரணிகள் என மாகாண சபையின் தலைமையில் உரிமைக் குரல் எழும் போது அது உலகின் கவனத்தை ஈர்க்கும்.

அப்போதும் அரசாங்கம் பேச்சு வார்த்தைக்கு அழைக்கும் அப்போதும் அவர்கள் தமது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப கழுத்தறுக்கும் ஆயுதங்களாகவே அதனைப் பயன்படுத்த முனைவர். அதே வேளையில் அவர்களின் நிகழ்ச்சித் திட்டத்தை முறியடிக்கும் வகையில் பேச்சுகடகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதாவது மாகாண சபைத் தலைவர் கையாள வேண்டும். ஏனெனில் அதற்கான நிறுவன பலம், மக்கள் பலம் சர்வதேச அதிகாரம் எல்லாமே அவர்களுக்கு உண்டு.

தம்மால் தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை பேச்சு வார்த்தை மூலம் தமிழர் தரப்பிடம் திணிக்கும் தந்திரோபாயம் முறியடிக்கப்பட வேண்டும். அப்படி முறியடிக்கப்படும் போது அவர்கள் ஏதோ ஒரு கோணத்தில் பேச்சைச் குழப்புவார்கள். அது கூட அவர்களை அம்பலபடுத்தும் ஒரு குற்றமாகவே மாறும். அது எமக்கு மேலும் சாதகமான சூழலை உருவாக்கும்.

எனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை அமுல்படுத்த மகிந்த அரசு மேற்கொள்ளும் திட்டமிட்ட கழுத்தறுப்புக்களை இனங் கண்டு முறியடித்து முன் செல்ல வேண்டிய பொறுப்பு மாகாண சபைக்கு உண்டு. இதற்கான மக்கள் பலமும் சர்வதேச அங்கீகாரமும் என்றும் உண்டு.

---



## அவர்கள் அப்படித்தான்...

சில ஆண்டுகளுக்கு முன், மனநோய் மருத்துவமனைகள் வசதிகளைப் பெறாது இருந்த காலத்தில், பார்வையாளர் ஒருவர் மருத்துவமனை உயர் அதிகாரியுடன் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார். மேல்மாடியை அடைந்த போது ஆபத்தான மன நோயாளிகள் சிலர் ஒரே வார்டில் வைக்கப்பட்டிருப்பதை கவனித்தார். அப்படிப்பட்ட நூறு நோயாளிகளை மூன்று காவலர் கள் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

பார்வையாளருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. "ஆபத்தான இந்த நூறு நோயாளிகளும் அந்த மூன்று காவலர்களை தாக்குவார்கள் என்கிற அச்சம் உங்களுக்கு ஏற்படவில்லையையா?" எனக் கேட்டார்.

அதிகாரிஅமைதியாகப் பதில் சொன்னார்: "பயப்படவில்லை. பைத்தியக்காரர்கள் ஒரு போதும் ஒன்றுபடுவதில்லை."

அவருடைய இந்த வாசகத்தில் தனி நபர்களுக்கும், தேசங்களுக்கும் குழுக்களுக்கும் ஒரு படிப்பினை இருக்கிறது. நம்மில் பலர் காலம் காலமாக வந்துள்ள ஓர் அறிவுரையை சரியாகக் கவனிக்கத் தவறி விட்டோம்.

"ஒற்றுமையே பலம்!"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு: ஒற்றுமை நீங்கில் வீழ்ச்சியே!"

ஒரு வேளை இதைவிட ஒரு வாசகம் நம்முடைய மனதில் நன்றாகப் பதியக் கூடும்.

"பைத்தியக்காரர்கள் ஒன்று படுவதில்லையா!"

மக்கள் கூட்டமாகவும், குழுக்களாகவும், தேசங்களாகவும் எந்த அளவிற்கு எண்ணத்தில் ஒற்றுமை, உணர்ச்சியில் ஒற்றுமை நோக்கத்தில் ஒற்றுமை ஏற்படுகிறதோ அந்தஅளவுக்குத்தான் நம்முடைய சக்திகளும் ஒன்றுபட முடியும்.

ஆற்றலின் ரகசியம் பற்றி ரகசியம் எதுவும் இல்லை. எண்ண ஒருமையோடு உணர்ச்சி, நோக்கங்கள் ஆகியவற்றின் ஒருமை இணைவதுதான் அந்த ரகசியம். மனிதர்களும் குழுக்களும் தேசங்களும் இவ்வாறு இணைந்து ஒத்திருக்கும்போது அவர்களுடைய கூட்டுச் சக்தியும் மிகுதியாகிறது.

ஒற்றுமையின்மை எவ்வளவு பலகீனமானது!

மிகவும் ஆபத்தானதும் கூட! எவ்வளவுக்கு எவ்வளவு விலகிச் செல்லுகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு எதிர் அணிகளாகவும் ஆகிவிடுகிறோம். எதிர் அணியில் நிலை கொள்ளும் போது மிக மோசமான மோதல் நிலைக்கு ஆளாகி விடுகிறோம்.

நம்முடைய பிரிந்திருக்கும் குணமே நம்மைப் பைத்தியக்காரர்கள் என்ற நிலைக்குத் தள்ளி விடுகிறது. ஏனெனில், பைத்தியக்காரர்கள் ஒருபோதும் ஒன்றுபடுவது இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜபக்ஷ அரசின் பிடிவாதப் போக்கு; நல்லிணக்கப் பாதையின் மீதான முட்டுக்கட்டை

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் 1983 யூலையில் ஒரே நாட்டின் உடன் பிறப்புக்களிடையில் ஏற்பட்ட வன்செயல்களையும், படுகொலைகளையும் உள்ளடக்கியதான் ஓர் இரத்தக்களரி நாட்டின் வரலாற்றிலே கவலைக்குரிய தினமாக வரையப்பட்டுவிட்டது. அதனையடுத்து, நாட்டின் ஆட்சியதிகாரத்திற்கு வந்த அரசாங்கங்கள் அத்தனையும் தேசியப்பிரச்சினைக்கு ஓர் திருப்திகரமான தீர்வினை எட்டுவதற்கு இயலாமற் போனதும் துரதிர்ஸ்ட வசமானதேயாகும்.

1983இல் நாட்டப்பட்ட வெறுப்பு வித்துக்கள் அன்று தொட்டு ஆட்சி செய்தவர்களால் ஏதோ ஒரு வழியில் வரிசைக் கிரமமாக ஊட்டி வளர்க்கப்பட்டு இன்று சமூகத்தில் முழுமையாக வளர்ச்சியுற்று ஆழமாக வேரூன்றி விட்டன.

அதற்கு உதாரணமாக 1983 ஆடியில் வெளிவந்த 'டெயிலி ரெலிகிராப்' செய்தித் தாளில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர்.ஜெயவர்த்தனா கூறியதாக வெளிவந்ததை சற்றுப் பார்க்கலாம்.

"நான் யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயம் குறித்துக் கவலைப்படவில்லை. அவர்களுடைய வாழ்வு குறித்தோ அல்லது அபிப்பிராயம் குறித்தோ நாங்கள் இப்போது சிந்திக்க முடியாது. நாங்கள் வடக்கில் எவ்வளவு அதிகமான நெருக்கடிகளைக் கொடுக்கின்றோமோ அவ்வளவுக்கு இங்குள்ள சிங்கள மக்கள் அதிகம் சந்தோசமாக இருப்பர்." என்பதே அதுவாகும். உண்மையில் தமிழர்களைப் பட்டினி போட்டால் சிங்களவர்கள் மகிழ்வடைவார்கள்" என்பதே அவரது கருத்தாகும்.

முப்பது வருடங்களுக்கு முன்பதான ஜெயவர்த்தனாவின் இக் கூற்றானது இந் நாட்டில் வாழும் ஒரு இனத்தின் மீது அப்போதைய ஆட்சி நிர்வாகம் கொண்டிருந்த பற்றின்மையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

1983 தொடக்கம் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளாலும் வழிநடத்தப்பட்டு வநத அரசாங்கங்களின் கொள்கைகளினால் எந்தவொரு கட்சியாலும் நாட்டிலுள்ள தேசியப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்க்க முடியாமற் போயிற்று.

2009 இல் போர் முடிவுக்கு வந்ததையடுத்து ராஜபக்ஷ அரசுக்கு மீள் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான ஓர்அரிய, சிறந்த சந்தர்ப்பத்தினையும் அது வீணடித்து விட்டது.

போரின் பின்னரும் ராஜபக்ஷ அரசாங்கம் ஓர் நியாயமான நல்லிணக்கச் செயல் முறைமையினை இலங்கை ஆரம்பித்து வைப்பதற்குப் பதிலாக நாட்டின் பல பகுதிகளிலும், காலத்துக்கு காலம் தலை தூக்கும் அச்சுறுத்தும் வகையிலான மதத் தீவிரவாதம் குறித்தும் பாராமுகமாக இருந்து வருகின்றது.

மத, இன ரீதியான தீவிரவாதம் நாட்டில் கொதிப்படைந்த நிலையில் வெடித்துச் சிதறுவதற்காகக் காத்திருக்கின்றது. அத்துடன் அது பெரும்பாலும் ராஜபக்ஷவின் ஆட்சிக்கும் உலை வைக்குமளவிற்குப் பலத்த அடியாகவும் இருக்கக்கூடும்.

எனினும் கறுப்பு யூலை தினத்தின் 30 ஆவது ஆண்டு நினைவையொட்டி இலங்கை அரசு தேசியப் பிரச்சினை விடயத்தில் இனனமும் தீர்வு காணாதமை குறித்துச் சர்வதேச சமூகம் கொண்டிருக்கும் கவனம் விசேடமாக ராஜபக்ஷ அரசு மற்றும் நாட்டின் மீதும் ஓர் தாக்கத்தினை ஏற்படுத்தவே செய்யும்.

கறுப்பு யூலை தினத்தை அடையாளப் படுத்தும் வகையில், புலம்பெயர் தமிழ் அமைப்புகளினால் பல நாடுகளிலும் கண்டனப் பேரணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. பிரிட்டனிலும் தமிழர் பேரவையினர் கண்டனப் பேரணியினை நடத்தவுள்ளனர்.

அதே வேளையில் ராஜபக்ஷ அரசாங்கம் அதனால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும். அதன் செயற்பாடுகளை இழுத்தடித்து வருதலை நாடு நல்லிணக்கத்திற்கான வாய்ப்பை விரைவாக இழந்து வருகின்றது.

அதிகாரப் பகிர்வினை அடிப்படையாகக் கொண்டதான அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தினூடாக ஓரளவாவது தீர்வு எட்டப்படும் எனச் சிறுபான்மையினராலும் சர்வதேச சமூகத்தாலும் மற்றும் விசேடமாக அயல் நாடான இந்தியாவினாலும் கருதப்பட்டமையானது ராஜபக்ஷ அரசாங்கத்தின் 13 ஆவது திருத்தத்தை மாற்றியேயாக வேண்டுமென்ற பிடிவாதப் போக்கு இலங்கையின் நல்லிணக்கத்துக்கான பாதையில் ஓர் முட்டுக்கட்டையாகவே காணப்படுகின்றது.

கடந்த மாதத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தூதராக இந்தியாவுக்குச் சென்ற அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாட்டில் இனங்களுக்கிடையில் நம்பிக்கையின்மையே நல்லிணக்கம் உருவாகுவதற்குத் தடையாக உள்ளதெனவும், அத்துடன் பகிர்ந்தளிக்கப்படும் பொலீஸ் அதிகாரங்களைக் கொண்டு மாகாண அரசு ஓர் இராணுவத்தை உருவாக்குவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்ததாக இந்திய நாளேடான 'இந்துப் பத்திரிகை'யில் செய்தி வெளியாகியிருந்தது.

அத்துடன் 1988 களின் போது வடகிழக்கு மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் தம்மை விடுதலைப் புலிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு "தமிழ் தேசிய இராணுவம்" என்ற ஓர் இராணுவக் கட்டமைப்பை உருவாக்கியதைக் குறிப்பிட்டு அமைச்சர் பஷில் ராஜபக்ஷ எதிர் காலத்திலும் அத்தகையதோர் முயற்சி வட மாகாண சபையில் மேற்கொள்ளப்படுமாயின் அதனை அனுமதிக்க முடியுமா? எனவும் கூறியதாக அப்பத்திரிகையின் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

அத்துடன் இந்திய இலங்கையின் உடன் படிக்கையின் பிரிவு2.10 ஐச் சுட்டிக்காட்டி நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளதைப் போலவே வடக்கு மற்றும் கிழக்கிலும் சட்ட நிறைவேற்றம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றிற்கு அரசின் ஒரே கட்டமைப்பே பயன்படுத்தவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளதாகவும் எனவே, நாடு முழுவதற்குமாக ஒரு பொலீஸ் படையே தவிர அதற்கு மேலதிகமாக எதுவும் இல்லை என்பதையே அது கருதுவதாகவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதே வேளையில் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் காணிப் பிரச்சினைகள் குறித்து 2014 ஆம் ஆண்டிறுதிக்கு முன்பாக முடிவு எடுக்கப்பட்டு விடுமென காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். அத்தோடு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் படியே 250,00 அளவிலான காணித் துண்டுகள் குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமெனவும் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறைத் துறைமுகம் மற்றும் பலாலி விமானத்தளம் என்பவற்றை விரிவுபடுத்துவதற்கு இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் 6,387 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் அபகரிப்பது குறித்து அமைச்சர் தென்னக்கோனிடம் வினவிய பொழுதினில் அக்காணிகளுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்டு உரியவர்களுக்கு நஸ்டஈடு வழங்கப்படு மெனவும் அல்லாவிடின் அதற்கு மாற்றீடாக நில உரிமையாளர்களுக்கு வேறிடங்களில் காணிகள் வழங்கப்படுமெனவும் கூறியுள்ளார்.

தனியார் காணிகளை அபிவிருத்திக்காகவோ அல்லது பாதுகாப்புத் தேவைகளுக்காகவோ அரசாங்கம் பெற்றுக் கொள்ள முடியும் என்ற தென்னக்கோனின் கூற்றானது 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு எதிரானதும் அத்துடன் அதனை மீறுவதுமான ஓர் செயற்பாடு என்பது குறிப்பிடத்தக்கது.

13வது திருத்தத்தில் மாற்றங்களை செய்வது ராஜபக்ஷ அரசுக்கு கடுமையான பின் விளைவுகளை ஏற்படுத்தலாமென இந்தியாவினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட போதிலும் அதில் மாற்றங்களை மேற்கொள்வதென்பது பெரும்பாலும் நிகழவிருக்கும் ஒரு விடயமாகவே அரசின் பிடிவாதமான போக்கும் அதன் சமிக்ஞைகளும் தெளிவாகக் காட்டுவதாகவுள்ளன.

அதற்கான ஓர் உபாயமாக ஆளும் தரப்பு உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் உதவியுடன் ஜனாதிபதி 13ற்கும் அப்பாலும் சென்று வழங்கப் போவதாகக் கூறியிருந்ததை. இப்பொழுது 13ஐ விடவும் குறைத்து வழங்குவதற்கான பணியில் அவர் ஈடுபட்டுள்ளார்.

எனினும், செப்டெம்பரில் நடக்கவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் மற்றும் நவம்பரில் இடம் பெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் அதன் தலைமைத்துவ ஆசனத்தைக் கைப்பற்றுதல் போன்றவற்றின் பின்னர் மாத்திரமே இச் சகல மாற்றங்களும் அமுலுக்கு வரும்.

தேசியப் பிரச்சினைக்கு ஓர் நிலையான தீர்வினைக் காண வேண்டிய சூழ் நிலையில் ராஜபக்ஷ அரசின் செயற்பாடுகள் இவ்வாறே அமைகின்றமை பெரிதும் கவலைக்குரியதாகும்.

ராஜபக்ஷ அரசாங்கம் தமக்குள் அதிகார மோதல்கள் மற்றும் சுய கீர்த்திக்கான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் சோமவன்ச அமர சிங்கவைத் தலைவராகக் கொண்ட ஜே.வீ.பியின் ஒரு பகுதியினர் நீண்டகாலமாக இருந்து வரும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஒரு சில முன் யோசனைகளை அண்மையில் வெளியிட்டுள்ளன.

அவர்களின் முன் யோசனைகளாக வடக்கில் நிலவுவதாகக் கூறப்படும் இராணுவ நிர்வாகத்திற்கு முடிவு கட்டுவது தேசியப் பிரச்சினையை அணுகுவதற்கு இலகுபடுத்தும் வகையில் அம்மக்களின் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது ஆகியவை உள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் எதிர்வரும் வடமாகாணத் தேர்தலில் இம்முன்யோசனைகளே அவர்களது தேர்தல் பிரச்சாரமாக இருக்கப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> "நான் யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயம் குறித்துக் கவலைப்படவில்லை. அவர்களுடைய வாழ்வு குறித்தோ அல்லது அபிப்பிராயம் குறித்தோ நாங்கள் இப்போது சிந்திக்க முடியாது. நாங்கள் வடக்கில் எவ்வளவு அதிகமான நெருக்கடிகளைக் கொடுக்கின்றோமோ அவ்வளவுக்கு இங்குள்ள சிங்கள மக்கள் அதிகம் சந்தோசமாக இருப்பர்." என்பதே அதுவாகும். உண்மையில் தமிழர்களைப் பட்டினி போட்டால் சிங்களவர்கள் மகிழ்வடைவார்கள்"



ஆங்கில மூலம் -மண்டன இஸ்மாயில் அபேவிக்கிரம
நன்றி–21/7 சண்டே லீடர்
மொழியாக்கம்– கிங்ஸ்லி

---

புரூஸ்லியும் அவரது நண்பரும் எட்டு நிமிடங்களில் மூன்று மைல் தூரம் ஓடுவார்கள். ஒரு நாள் பூ ரூஸ்லீ சொன்னார், "இன்று ஐந்து நிமிடங்களில் மூன்று மைல் ஓடுவோம்" என்று ஓடத்தொடங்கி சிறிது நேரத்தில் "முடியவில்லை! மாரடைத்து செத்து விடுவேன்!" என்றார் நண்பர். "செத்துவிடு" என்றார் பூரூஸ்லீ ஆவேசம் கொண்ட நண்பர் ஓட்டத்தை தொடர்ந்தார். அவரால் முடிந்தது. ஒரு குளியலுக்குப் பிறகு பூரூஸ்லீ சொன்னார், "நம் செயல்களுக்கு நாமே எல்லைகளை வகுக்கக்கூடாது. நம் எல்லைகளை நாம்தான் உடைக்க வேண்டும். தன் எல்லைகளைத் தானே கடப்பவன் தான் மனிதன்.

பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கான 440.மீ ஓட்டப் பந்தயம் அமெரிக்காவில் நடந்தது. ஒன்பது வயதுச் சிறுமி அனைவரையும் முந்திக்கொண்டு குடிப்புயலாய் ஓடி வந்தாள். பிறர் பல மீட்டர்கள் பின் தங்கியிருந்தனர். வெற்றிக்கோட்டுக்குப் பத்தடிகள் முன்னரே வியர்வையை வழித்துக் கொண்டு வெளியே நடந்தாள் சிறுமி, பந்தய அமைப்பாளர்கள் அங்கே நின்றதைத்து அதுதான் முடிவு எனறு தவறாக கருதிவிட்டாள். அறுபது மீட்டாகள் பின்னால் வந்த சிறுமி புயல் வேகதில் கடந்து போனபோதுதான் விஷயம் புரிந்தது. முதல் சிறுமி பெற்ற பாடம். இலக்கை தாண்டி ஓடினால்தான் இலக்கை தொட்டதாய் ஆகும். இரண்டாவது சிறுமி பெற்ற பாடம். குறிக்கோளை நோக்கி ஓடினால் கடைசி நிமிடம் கூட வெல்லக் கூடும். என்பதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாரிகா

# இனச் சுத்திகரிப்பு: பேரினவாதத்தின் கொடூர மறைகரம்

## இனி...

அவளது நிலை பரிதாபகரமாக இருந்தது. வேலைக் கமர்த்தியிருந்த அந்த பெரும்பான்மையினப் பெண், கருணையுள்ளம் கொண்டவளாக இருந்திருக்கவும் வேண்டும். கிளிநொச்சியிலுள்ள அவளது தந்தைக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பினையடுத்து அவள் மீட்கப்பட்டிருந்தாள்.

பராயமடையாத வயதில் பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளான நிலையில் கைதடியிலுள்ள அந்த' சிறுவர் பராமரிப்பு மையத்திற்கு அவள் அனுப்பப்பட்டிருந்தாள். ஆனால் அங்கு மகிழ்ச்சியான வாழ்வு அவளுக்கு கிடைக்கவில்லை. தனது நண்பிகளுடன் சிறுவர் இல்லத்தை விட்டு தப்பியிருந்த போதும் அவள் வீடு திரும்ப விரும்பயில்லை.

தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தில் பயணித்த அந்த இளைஞன் அவளுடன் நட்பு பாராட்டியிருந்தான். இவளும் சக நண்பிகள் மூவருமாக, முடிவு தெரிந்திராத பயணத்திற்கு தயாராகியிருந்தனர். குறித்த இளைஞனோ யாழ்ப்பாணத்தில் ஒப்பந்த நிறுவனமொன்றில் பணியாற்றி வரும் பெரும்பான்மையினத்தினரை சேர்ந்தவனாக இருந்தான். எனினும் அன்றைய விருந்திற்கான இலக்காக அவர்களை அவன் அடையாளப்படுத்திக் கொண்டிருந்தான். நாம் பலியாடாக அ ழைத்துச் செல்லப்படுவதை குறித்த சிறுமிகள் மூவருமே புரிந்து கொண்டிருக்கவில்லை.

தென்னிலங்கையிலுள்ள விடுதி ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் உண்மை புரிந்து நண்பிகள் தப்பித்து விட இவளே அகப்பட்டுக் கொண்டாள். மூன்று நாட்களாக தொடர்ச்சியான பாலியல் துன்புறுத்தல்களை எதிர்கொண்டிருந்த நிலையின் பின்னதாக அதே நபரால் பெரும்பான்மையின குடும்பமொன்றின் வீட்டிற்கு வேலைக்காரியாக விற்கப்பட்டிருந்தாள்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டதாக இலங்கை அரசு கூறிக் கொண்ட விடுதலைப் புலிகளது ஒரு தொகுதி பெண் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்க ஆயத்த நிலையில் ஆடை தொழிற்சாலைகள் காத்திருந்தன. இலங்கை அரசும் அதனது ஊது குழல் ஊடகங்களும் முன்னாள் போராளிகளை தாங்கள் அரவணைத்துக் கொள்வதாக உலகிற்கு பறையடித்துக் கொண்டிருந்தன. ஆனாலும் யதார்த்தமோ வேறாக இருந்தது.

இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மிக மோசமான வீழ்ச்சி பிரதான தொழிற்துறை வருமானத்தை தந்த ஆயத்த நிலைய புடவை தொழிற்சாலைகளை இழுத்து மூடும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி வருகின்றது. இத்தகைய நெருக்குவாரங்கள் மத்தியில் மோசமான சம்பள வெட்டினை அமுல்படுத்த நிர்வாகங்கள் தள்ளப்பட்டிருந்தன. கொழும்பின் புறநகர் பகுதிகளில் பெரும்பான்மையின யுவதிகளிற்கு வேலைவாய்ப்புக்களை அள்ளி வழங்கிய இத்தொழிற்சாலைகள் இப்போது திணறிக் கொண்டிருக்கின்றன.

மோசமான சம்பளக் குறைப்பு காரணமாக பெருமளவிலான தொழிலாளர்களான யுவதிகள் வேலையிலிருநது விலகி வெளியேறியிருந்தனர். போதிய தொழிலாளர்கள் இல்லாத சூழலில் திண்டாடிக் கொண்டிருந்த சூழலிலேயே முன்னாள் பெண் போராளிகளுக்கு ஆசை வார்த்தைகள் வீசி வலை வீசப்பட்டிருந்தது. போதியளவு அடிப்படை வசதிகள் கூட அற்ற தொழிற்சாலைகள், வதிவிடங்கள், மாதமொன்றிற்கு எண்ணாயிரத்திற்கும் குறைவான அடிப்படை ஊதியமென அவலங்கள் எவருமே கண்டுகொண்டிராதவை. தொழிலாளர்கள் நலன்களைப் பேணுமுகமாகவுள்ள எந்தவொரு அரச இயந்திரமும் அங்கு எட்டியே பார்ப்பதில்லையென்கின்றனர் அந்த முன்னாள் பெண் போராளிகள்.

கொழும்பின் புறநகரிலுள்ள அந்த விடுதியில் எரிகாயங்களுடனிருந்த அந்த முன்னாள் போராளி மீட்கப்பட்டு அரச வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். ஆயத்த நிலை ஆடைத் தொழிலகமொன்றில் பணியாற்றும் குறித்த முன்னாள் போராளியான யுவதி எவ்வாறு குறித்த விடு திக்கு வந்திருந்தார்? என்பது பற்றியோ, எவ்வாறு தீக்கிரையாகியிருந்தார் என்பது பற்றியோ தகவல்களில்லை.

வழமைபோன்றே தமிழர்களை முன்றாந்தரப் பிரஜைகளாக பார்க்கும் அரச வைத்தியசாலைகள் அவள் தொடர்பில் போதிய கவனத்தை சிகிச்சையில் செலுத்தியிருக்கவில்லை. படிப்படியாக நோய் எதிர்ப்பு சக்தி செயலிழந்து போயிருந்த நிலையில் இறுதியில் அவள் மரணத்தையே சந்திக்க வேண்டியிருந்தது.

யாருமற்ற அநாதையாக முகம் தெரியாத சூழலில் அநத முன்னாள் போராளி மரணத்தை தழுவியிருந்தாள்.

தன்னை திருமணம் செய்வதாக உறுதி கூறி காதலித்த அந்த இராணுவச் சிப்பாய் கைவிட்டுவிட்டதாக கூறி, குறித்த தமிழ் யுவதி கிளிநொச்சியிலுள்ள ஒவ்வொரு படை முகாமுக்கு அலைந்து திரிந்து கொண்டிருந்தாள். தெற்கில் களிப்பூட்டும் விடுதிகளில் தங்கியிருந்த மகிழ்ச்சியூட்டும் நாட்களே அவளிற்கு இப்போது எஞ்சியிருக்கின்றது. அவள் தாக்கியதால் காயமடைந்த இராணுவச் சி ப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பதாக பொலிஸார் நீதிமன்றுக்கு கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுவும் தெற்கு நோக்கிய பேருந்து பயணமொன்றில் முளைத்த காதல்.(?) கதையாகத்தான் இருக்கின்றது. கூடவே பயணித்த அந்த இராணுவச் சிப்பாய் கோரிப் பெறறுக்கொண்ட கைத்தொலைபேசி இலக்கத்தினுடாக காதல் வளர்ந்ததாக குறித்த யுவதி கூறுகின்றார். தெற்கில் பதிவுத் திருமண த்தை நடத்திக் கொள்ளலாமென கூறி தன்னை அழைத்துச் சென்று விடுதியில் கூடவே தங்கியிருந்து விட்டு இரவோடிரவாக கைவிட்டு ஓடிப்போயிருப்பதாக தனது முறைப்பாட்டில் யுவதி தெரிவித்துள்ளார். கிளிநொச்சி பரந்தன் இரசாயன தொழிற்சாலை முகாமில் கடமையாற்றுவதாக தெரிவித்த குறித்த சிப்பாய் முகாமினுள் பின்னர் பதுங்கிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைவிட்டுப்பொன காதலனை(?) தேடி கடுமையான போராட்டத்தை அந்த யுவதி முன்னெடுக்க வேண்டியிருந்தது. பெரும்பாலும் காவலரணிலிருக்கும் சிப்பாய்கள் பதுங்கியிருக்கும் தமது சகபாடியினை காப்பாற்றிக் கொள்ள சாதாரணமாகவே பொய்களை சொன்னார்கள். தனது காதலுக்கான நியாயம் தேடி களமுனைகளில் பணியாற்றிய அந்த மூத்த படை அதிகாரிகளையெல்லாம் நாள் கணக்கினில் காத்திருந்து சந்தித்து நியாயம் கேட்கவேண்டியிருந்தது. ஆனால் எதுவுமே கிட்டியிருக்கவில்லை என்பதே உன்மையாகும்.

இரண்டு பிள்ளைகளின் தாயான அந்த தமிழ் யுவதி கண்ணீருடன் இவ்வாறு கூறினார். "வாழ்க்கையில் அந்த சில வினாடிகளில் செய்த தவறுக்கான பலாபலனை வாழ்க்கை முழுவதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்." அரச அலுவலகமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த குறித்த யுவதி கடமைக்காக அங்கு வந்திருந்த பொலிஸார் ஒருவரது காதல் வலையில் வீழ்ந்திருந்தார். ஒட்டு மொத்த சமுகப் புறக்கணிப்பால் தனது குடும்பத்தையே கைவிட்டு யாழ்ப்பாணத்தினை விட்டு வெளியேறி வவுனியாவின் புறநகர் பகுதியில், குறித்த பொலிஸாரையே திருமணம் செய்து வாழத் தொடங்கிருந்தார். திருமணத்தின் பின்னராகவே தெரிந்திருந்தது: ஏற்கனவே தெற்கில் தனது ஊரில் திருமணம் முடித்திருந்த அந்த பொலிஸ்காரரிற்கு நான்கு பிள்ளைகளும் மனைவியும் உயிரோடிருக்கின்றனரென்பது. ஆனால் சொந்த ஊருக்குகோ, குடும்பத்தவர்களிடமோ திரும்ப முடியாத நிலையில், இரண்டு குழந்தைகளது தாயாக அந்த சகதி வாழ்க்கையினையே தொடரவேண்டியதாக இருந்தது. சமூகத்தின் கேலிகளிலிருந்து தப்பித்துக் கொள்ள பிள்ளைகளது பெயர்களின் முன்பதாக புஸ்பகுமார என்பதற்கு பதிலாக புஸ்பகுமாரன் என்று பெயரை மாற்றவேண்டியதாயிற்று

ஆயுத ரீதியான மோதல்கள் முடிவுக்கு வந்துவிட்ட போதும் தேசியம், இனம், ஒரு தாயகம் என்பவற்றை சிதைத்து விடுவதில் தெற்கு மிகவும் விழிப்பாகவே இருக்கின்றது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் இறுதி நாட்களில் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் எவராலும் நியாயப்படுத்தமுடியாதவை. கைகள் கட்டப்பட்ட நிலையில் எங்கெங்கும் பரவிக்கிடந்த உடலங்களும், அவற்றின் வெறித்துப் போயிருந்த கண்களும் உலகுக்கு சொன்னவை ஆயிரம், ஆயிரம் கதைகளையே!

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த சர்ச்சைகுரியஅமைச்சர் மேவின் சில்வா கூட, தனக்கொரு மணப்பெண்ணை யாழ்ப்பாணத்தில தேடியிருந்தார். முன்னதாக யாழ். மாநகரசபை தேர்தலின்போது பிரசாரத்திற்காக வருகை தந்திருந்த மற்றொரு அமைச்சரான மகிந்தானந்த அழுத்கமகே யாழ்ப்பாணத்தில் பெண் தேடுவதாய் வாய் கொடுத்து பாராளுமன்றத்தில் தலை குனிய வேண்டியவராக இருந்திருந்தார்.

அடிமை கொள்ளப்பட்ட தேசமொன்றில் அகப்பட்டுள்ள அனைத்துமே அரசிற்கோ, அல்லது அதனது வீரர்களுக்கோ உரியதென்பது புதிதான ஒன்றல்ல. அவ்வகையில் வ க்கிற்கு வருகை தரும் தெற்கின் வீரர்கள் பலரும் அடிமை கொள்ளப்பட்ட தேசத்தின் பெண்கள் சுகபோகப் பொருட்கள். அவ்வகையிலேயே அவர்கள் பயன்படுத்தி வீசி விடும பிளாஸ்டிக் டப்பாக்கள். போல தமிழ் பெண்களை நினைத்து நடந்து கொள்வது அதீத வலி தரும் விடயமாகும்.

சோவியத் யூனியன் பிளவின் பின்னராக கொசோவா-சேர்பியா இடையிலான முற்றுகை யுத்தத்தின்போது பெண்கள் படை முகாம்களிற்கு கடத்திச் செல்லப்பட்டு கருத்தரிக்கும் வரையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட அவலம் உலகையே அதிரவைத்தது. அத்தகைய இனச் சுத்திகரிப்பின் இன்னோர் வடிவமே இப்போது தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றதோ என்ற சந்தேகம் வலுவடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

---

## சட்டமும் தண்டனையும்

ஒரு தேசம் உறுதியாக நிற்பதும் சரிந்து விழுவதும் எவ்வளவு பலமான அடித்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்தே அமைகிறது.

சட்டம்தான் அதன் அடித்தளம்.

சட்டங்களின் ஞானமும் நேர்மையும் – பாகுபாடு அற்ற முறையில் அந்தச் சடடங்கள் செயல்படுவதும்– சட்டங்களை மீறினால் கடுமையான தண்டணையில் இருந்து தப்பிக்க முடியாது என்பதுமே ஒரு தேசத்தின் நிர்ணயிக்கிறது.

இவை அனைத்திலும் ஒரு தொய்வு ஏற்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

பொது மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக சட்டங்கள் தாராளமாகவே தளர்த்தப்படுகின்றன. இது அறிவுடைமையும் அல்ல, நேர்மையும் அல்ல. புதிய சட்டங்கள் இயற்றியும், இருக்கின்ற சட்டங்களைத் திருத்தியும், வியாக்கியானங்களின் மூலமும் குறிப்பிட்ட குழுக்களுக்கு லாபத்தை ஏற்படுத்திக் கொடுப்பதால், மற்றவர்கள், பாதிப்புக்களுக்கு உள்ளாகவும் நேரிடுகிறது. சமுதாயத்தை ஒழுங்குபடுத்துகின்ற அமைப்பு முறை தவறிப் பயன்படுத்தப்படுகின்றது. அபாயம் தெளிவானது. சட்டங்கள் நீதியை நிலைநிறுத்துவதற்காகவே தவிர, சந்தர்ப்ப லாபத்திற்காக அல்ல.

சட்டங்களை அமுல் செய்கின்ற போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வியாக்கியானங்களும் செய்யப்படுவதுண்டு. சட்டத்தை அமுல் செய்வது தனி நபரின் விருப்பம் என்பதான நிலையும் தோன்றி விட்டது.

இதன் விளைவாக தனி நபர்களும் குழுக்களும் தங்களுக்குச் சாதகமான சட்டங்களுக்கு மட்டும்தான் பணிவோம் என்றும், பாதகமான சட்டங்களுக்குப் பணிய மாட்டோம் என்றும் துணிச்சலுடன் சொல்லுகின்ற நிலைமை தோன்றி விட்டது. சட்ட மீறலை அனுமதிக்கின்ற எந்த தேசமும் நீடித்து நிற்பது சாத்தியமில்லை. சட்டத்தை மதிக்கமாட்டோம் என்று சொல்லுவதே கடுமையான தண்டணைக்குரியது என்கிற நிலையும் அவசியமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயவு செய்து மன்னிக்கவும்...




**மன்னிப்புக் கேட்பது மனிதகுணம்;
மன்னித்து அருள்வது தேவ குணம்**

மன்னிப்பு தமிழில் எனக்குப் பிடிக்காத வார்த்தை என்று ஒரு சினிமா படத்தின் கதாநாயகன் முழங்கியிருக்கிறார்.

திரையில் மட்டுமில்லை. நிஜத்திலும் பலருக்கு 'மன்னிப்பு' கேட்பது பிடிப்பதில்லை. நாமே தப்புச் செய்திருந்தாலும் கூட, ஏதோ ஒரு வீம்பு, பிடிவாதம், அடுத்தவர்களிடம் மன்னிப்பு கேட்டால், நம்முடைய கௌரவம் போய்விடும்' என்று சுமமா இருந்துவிடுகிறோம்.

ஆனால், இப்படி மன்னிப்புக் கேட்கத் தயங்குவதாலேயே, நாம் இழக்கிற உறவுகள்; நட்புகள், வாய்ப்புகள் ஏராளம் அதையெல்லாம் யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

தவறு செய்யாதவர்கள் என்று யாருமே கிடையாது. ஆனால், 'நான் ஒரு தவறு செய்துவிட்டேன்' என்று மனமாரச் சொல்லி மன்னிப்புக் கேட்பதற்கு நிறைய மனத்தைரியம், தன்னம்பிக்கை வேண்டும். அதற்கான வழிமுறைகளைப் படிப்படியாக விவரிக்கும் ஒரு புத்தகம் , கென் ப்ளன்சார்ட், மார்க்ரெட் மெடக்ப்ரைட் இணைந்து எழுதிய 'The one minute Apology' (வெளியீடு: Harper Collinns).

பலரும் நினைப்பது போல, மன்னிப்புக் கேட்பது என்றால், அது ஒரு வார்த்தையுடன் முடிந்துவிடுவதில்லை. சும்மா ஒரு பேச்சுக்கு 'சொறி' கேட்டுவிட்டு, மீண்டும் அதே தவறைச் செய்தால் , அந்த மன்னிப்புக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடுகிறது.

ஆகவே, மன்னிப்புக் கேட்பதற்கு முன்னால் , நாம் செய்தது தவறு என்பதை நாமே மனமார உணர வேண்டும். இனிமேல் நான் இதைச் செய்யமாட்டேன் என்று நமக்கு நாமே உறுதி சொல்லிக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக , மன்னிப்பு கேட்பதற்கு வெறும் பேச்சு போதாது. செய்த தவறை உணர்ந்து, அதற்கான மாற்று நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தான் நம்முடைய மன்னிப்பு முழுமையடைகிறது.

மூன்றாவதாக , நாளைக்கு மன்னிப்புக் கேட்கலாம், அடுத்த வாரம் கேட்கலாம் என்று தள்ளிப்போடாதீர்கள். அதன்மூலம் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்கள் என்று தான் அர்த்தம். இப்படி நீங்கள் தாமதப்படுத்துகிற, பொறுப்பைத் தட்டிக் கழிக்கிற ஒவ்வொரு விநாடியும், பிரச்சனை இன்னும் பெரியதாகிக் கொண்டிருக்கும். அதன்பிறகு மன்னிப்பு கேட்டுப் பிரயோசனமே இல்லை.

ஆகவே, மன்னிப்பு கேட்பது என்று தீமானித்து விட்டால், அதன்பிறகு காலநேரம் பார்க்க வேண்டியதில்லை . அதை உடனே செயல்படுத்துங்கள்.

கடைசியாக, நீங்கள் மன்னிப்பு கேட்கப்போகும் நபர், உங்களைவிடத் தாழ்ந்த நிலையில் இருக்கலாம் உதாரணமாக ஒரு பெரிய அதிகாரி, தன்னுடைய ஊழியரிடம் மன்னிப்பு கேடக வேண்டி இருக்கலாம் அல்லது ஒரு அப்பாவோ, அம்மாவோ தங்கள் மகனிடம் மன்னிப்பு கேட்க நேரலாம்.

இது போன்ற சந்தர்ப்பங்களில், 'நேத்து வந்த பொடிப்பய, அவன்கிட்டே போய் நான் மன்னிப்பு கேட்கிறதா?' என்று கௌரவம் பார்க்காதீர்கள். தப்பு செய்தவர்கள் மன்னிப்பு கேட்டே தீர வேண்டும். இல்லாவிட்டால், அந்த உறவு முழுவதுமாகக் சிதைத்துபோய்விடும். இதற்கு உதாரணமாக அமெரிக்க முன்னாள் அதிபர் ஆப்ரஹாம் லிங்கன் வாழ்க்கையிலிருந்து ஒரு சிறிய சம்பவம்:

அமெரிக்க ராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர், அவர் பெயர் ஸ்காட் அவருடைய மனைவி திடீரென்று இறந்துவிட்டார் மனைவியின் இறுதிச் சடங்குகளில் பங்கேற்பதற்காக, சொந்த ஊருக்குப் போக விரும்பினார் ஸ்காட்.

ஆனால், அப்போது அமெரிக்காவை உள்நாட்டுப்போர் சூழ்ந்திருந்தது. ஆகவே, ராணுவத்தில் யாருக்கும் விடுப்பு தர முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்.

நொந்துபோன ஸ்காட், கடைசி முயற்சியாக, அதிபர் ஆப்ரஹாம் லிங்கனைச் சந்தித்தார். 'தயவு செய்து எனக்கு விடுமுறை கொடுங்கள்' என்று கெஞ்சினார்.

அப்போது லிங்கன் வேறு ஏதோ பிரச்சனைகளில் மாட்டித் திணறிக் கொண்டிருந்த நேரம். அந்தக் கோபத்தையெல்லாம் அவர் ஸ்காட் மீது பொழிந்துவிட்டார் 'இந்த நேரத்தில் விடுப்பு கேட்கிறீர்களே, உங்களுக்கெல்லாம் தேசப்பற்றே கிடையாதா? என்றுஸ்காட்டைக் கண்ட படி திட்டித் தீர்த்துவிட்டார்.

ஜனாதிபதியே இப்படிச் சொல்லிவிட்டால் , அதன்பிறகு என்ன செய்ய முடியும்? ஸ்காட் வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்.

ஆனால், அன்று இரவு ஆப்ரஹாம் லிங்கனுக்குத் தூக்கம் வரவில்லை. ஒரு நல்ல, கடமை தவறாத ராணுவ அதிகாரியை இப்படி அவமானப்படுத்திவிட்டோமே என்று துடித்தார் அவர்.

மறுநாள் காலை விடிந்ததும், லிங்கன் நேராக ஸ்காட்டைத் தேடிச் சென்றார்; மன்னிப்பு கேட்டார் . நேற்று நான் நடந்து கொண்ட விதம் மிகவும்தவறு. தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள்'

லிங்கன் அத்தோடு நிறுத்தவில்லை ஸ்காட் கேட்ட விடுமுறையைக் கொடுத்து, அவர் உடனடியாகச் சொந்த ஊர் திரும்புவதற்கும் ஏற்பாடு செய்தார்.

யோசித்துப் பாருங்கள் . ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்க அதிபர். ஸ்காட், அவருக்குக் கீழே வேலை செய்யும் ஒரு சாதாரண அதிகாரி அத்தனை பெரிய அதிபர், ஒரு வேளை ஸ்காட்டிடம் தவறாகவே நடந்திருந்தாலும் கூட இப்படி உடனடியாக இறங்கி வந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று என்ன அவசியம்?

நம்முடைய தினசரி வாழ்க்கையிலும், நாம் எத்தனையோ தவறுகளைச் செய்கிறோம். அப்போதெல்லாம் மன்னிப்பு கேட்கத் தயக்கமாகவோ, கூச்சமாகவோ இருந்தர்ல், ஆப்ரஹாம் லிங்கனை நினைத்துக் கொள்ளலாம். அதன் பிறகு, மனமார மன்னிப்பு கேட்பதன் மகத்துவம் புரியும்!

சரி, நான் மன்னிப்பு கேட்டுவிட்டேன். ஒருவேளை , அந்த மன்னிப்பு ஏற்கப்படாவிட்டால்? சம்பந்தப்பட்ட நபர் என்னை மன்னிக்க மறுத்துவிட்டால்?

அதைப்பற்றி நாம் இப்போது கவலைப்பட வேண்டியதில்லை . அவர் என்ன சொல்வாரோ, இவர் என்ன சொல்வாரோ என்கின்ற பயத்தில் மன்னிப்பு கேட்கத் தயங்கினால், வாழ் நாள் முழுக்க நாம் எந்தத் தவறுக்கும் மன்னிப்பு கேட்கப்போவதில்லை.

சுருக்கமாகக் சொன்னால், பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் மன்னிப்பு கேட்பதுதான் உயர்ந்த குணம். அதுதான், நாம் செய்த தவறுக்கு உடனடிப் பரிகாரம்.

சரி, நான் மன்னிப்பு கேட்கத் தயாராகி விட்டேன். அதை எப்படிக் கேட்க வேண்டும்?

ஒரு நல்ல மன்னிப்பில் , மொத்தம் மூன்று விஷயங்கள் இருக்க வேண்டும்.

1.செய்த தவறைப் பூசி மெழுகாமல் நேரடியாக, உண்மையாக ஒப்புக்கொள்வது.

2. அதைப்பற்றி நான் இப்போது என்ன உணர்கிறேன், எப்படி உணர்கிறேன் என்பதை வெளிப்படையாகச் சொல்வது.

3. இனிமேல் நான் எப்படி நடந்துகொள்வேன் என்று வாக்குறுதி அளிப்பது.

உதாரணமாக, 'ரமேஷ்' நேத்து நான் உன்னை அசிங்கமாகப் பேசினது தப்புதான் அதை நினைச்சா எனக்கு ரொம்ப அவமானமா இருக்கு. நான் அப்படி பேசியிருக்கக் கூடாது. இனிமேல் நான் யாரைப்பத்தியும் ஒரு வார்த்தை தப்பா சொல்லமாட்டேன். நீ தயவு செஞ்சு என்னை மன்னிச்சுடு.

அவ்வளவுதான் ! இந்த மூன்று விஷயங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டு , வெறும் வார்த்தைகளில் இல்லாமல், மனதார உணர்ந்து மன்னிப்புக் கேட்கிறபோது, எப்பேர்ப்பட்டவருடைய மனமும் இளகும்; எத்தனை பெரிய தவறும் மன்னிக்கப்படும். அது பற்றிய குற்ற உணர்ச்சியோ, மன அழுத்தமோ இல்லாமல் , உறவுகள் நட்புகள் உடையாமல் நாம் நிம்மதியாக வாழலாம். அந்தச் சந்தோஷத்துக்குத் தருகிற ஒரு சிறிய விலை தான், மன்னிப்பு!

இனிமேல், நம் பக்கம்தவறு இருந்தால், தயங்காமல் மன்னிப்பு கேளுங்கள். அதையும், சரியான முறையில் உணர்ந்து கேளுங்கள். அப்படிக் கேட்கப்படுகிற ஒவ்வொரு மன்னிப்பும்,? நம்முடைய குறைகளில் ஒன்றைக் காணாமல் போக்கிவிடும். லாபம், நமக்குத்தான்.

எஸ். [illegible]



# ரென்சன் மணியம்

சுகாதாரம் சுத்தம் தரும் என்று வாய்ப்பேச்சில் பேசுரவையைப் பார்த்தால் எந்த விதத்தில் அவர்கள் சுத்தமாக இருக்கிறார்கள் என்பது தெரியவரும். எனவே வாய்ப்பேச்சிலும் எழுத்திலும் சுத்தமாக வாழ்வோம் என்று தெரிவிக்காமல் நடைமுறை செயற்பாடுகளால் அதனை நடை முறைப்படுத்த வேண்டும். அப்போது தான் எமது சுற்றாடல் சுத்தமாக இருக்கும். சுத்தமாக பிரதேசம் இருக்கும் போது எமது உடலில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்திக் கொள்ளமுடியும். இதன் மூலம் எமது உயிர்களை நாமே பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சந்தி சந்தியாக எங்கட சனங்கள் நின்று கதைத்தால் பரவாயில்லை. குப்பைகளையெல்லோ சந்திகளில கண்ட படி கொட்டுகினம். அந்த குப்பைகளை அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்கு எவரும் முன்வராத நிலையில் அந்த இடத்திலேயே தேங்கிக்கிடப்பதால் சுற்றாடல் மாசடையக்கூடிய சாத்தியக் கூறுகள் நிறையவே இருப்பதுடன் நோய் பரவக் கூடிய சூழலும் ஏற்படுகின்றது. குப்பைகளை கொட்டுகிறவைகளும் கூடுதலாக கொட்ட குப்பைகளை அள்ளுறவைகளும் அள்ளாமல் இருக்க குப்பை மேடாக பல சந்திகள் காணப்படுகின்றன.

எமது சுற்றாடல் குப்பைகளால் மாசடைகிறது என்பது எல்லோரும் அறிந்தும் எதுவுமே தெரியாதது போல நடந்து கொள்ளக் கூடாது. வீட்டில் குவியும் குப்பைகளை பிரித்து பசளையாகும் குப்பைகளை பயன்தரும் மரங்களுக்கு உரமாக பயன்படுத்தினால் வீட்டில் குப்பைகளை இல்லாமல் செய்வதுடன் பல பயன்தரக்கூடிய மரங்களின் பயனைப் பெறமுடியும்.இதன் மூலம் வீட்டுத்தேவைகளுக்கு தேவையானவற்றை பெறமுடியும். அதாவது தென்னை, மா, பலா, தேசி, மாதுளை, பப்பா போன்ற பயன் தரும் மரங்களை நட்டும், சிறு தானியப் பயிர்ச் செய்கையையும் மேற் கொண்டு வந்தால் உணவுப் பொருள்களை வீட்டிலேயே பெறமுடியும்.

இயற்கை பசளையைப் பயன்படுத்தி மருந்து வகைகளைப் பயன்படுத்தாது உற்பத்திகளை மேற்கொண்டு வரும்போது அந்த உற்பத்திப் பொருள்களையே உணவாகப் பயன்படுத்தும் போது எமது உடல் ஆரோக்கியமானதாக இருக்கும். கண்ட கண்ட மருந்துப் பொருள்களை நுகர்வோருக்கு விறபனை செய்வதற்காக வயல்களிலும், தோட்டங்களிலும் விளம்பரப்பலகையை நட்டு அந்த நிலத்தையே மாசுபட வைக்கும் மருந்து பொருள்களை வாங்காதீர்கள். அந்த மருந்துகளால் ஒரு தடவை கூடுதலான விளைச்சலைக் காட்டும் நிலம் அடுத்த தடவை விளைச்சல் இன்றி இருப்பதை காணமுடியும். தொடர்ந்து அந்த நிலத்தை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தமுடியாத அளவுக்கு நிலம் மாசடையும் எனவே இயற்கை பசளைகளை பயன்படுத்தும் போது சுற்றாடலும் எமது மண்ணும் பாதுகாக்கப்படுகின்றது.

நாங்கள் வீட்டில் எப்படி சுத்தமாக இருக்கிறோமோ அதே போல எமது பிரதேசத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எந்த இடங்களுக்கு போனாலும் "சுத்தம் பேணவும்" என்று போட் தொங்க விட்டிருப்பார்கள். அதனை நாங்கள் பார்த்தாலும் அந்த இடத்தில் சுத்தத்தை பேணுவதில்லை. சந்தை, வைத்தியசாலை, கோயில், பூங்கா , தியேட்டர் என்று எங்கு சென்றாலும் சுத்தம் பேணப்படவேண்டும். அப்பொழுதுதான் அந்த இடம் மட்டுமல்ல நாமும் சுத்தமாக நடமாட வாய்ப்பிருக்கும் .

வைத்தியசாலையில் சுத்தம் பேணப்படாவிட்டால் அந்த வைத்தியசாலைக்கு செல்லும்நோயாளி மேலும்நோய்த்தாக்கத்திற்கு உள்ளாக வேண்டிவரும். பூங்காவில் சுத்தம் பேணப்படமால் விட்டால் அங்கு வரும் சிறுவர்கள் இலகுவில் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாவர்கள். பஸ்ஸில் பயணம் செய்பவர்கள் பஸ் ஓடிக்கொரண்டிருக்கும் போது வீதியில் எவர் வருகிறார்களோ , இல்லையோ யன்னல் வழியே எட்டி துப்பும் பழக்கம் இருந்து வருகின்றது. துப்பும் போது எச்சில் வீதியில் வருகின்றவர்களின் உடலில் பட்டால் என்னவாகும் என்பதை சிந்திப்பதில்லை.

சுத்தமாக இருக்கவேண்டும் என்பதற்காக வெளிநாடுகளில் பல சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. பொது இடங்களில் சிறுநீர் கழிக்க முடியாது. பயன்படுத்தும் பொருள்களை பயன்படுத்திக் கழித்தவுடன் கண்டபடி நிலத்தில் வீச முடியாது. கழிவுப்பொருள்களை போடுவதற்கென பிரத்தியேகமான ஒரு இடத்தில் கூடையை வைத்திருப்பார்கள். பல நாடுகள் கழிவுப் பொருள்களை இல்லாத நாடுகளுக்கு விற்பனை செய்து வருகிறது.

இப்படியாக கழிவுப்பொருள்களையும் பயன்டுத்தும் பொருளாக மாற்றி குப்பை இல்லாத சுத்தமான பிரதேசமாக் மிளரச் செய்கிறார்கள். வெளிநாடுகளில் உள்ள முறைகளை நாமும் பயன்படுத்துவோம் ஆயின் எமது பிரதேசமும் குப்பை இல்லாத பிரதேசமாக மிளிரும். இதன் மூலம் நோய் இல்லாத வாழ்வை நாம் கட்டியெழுப்பமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்காபுரம்-03
ஓர் ஆய்வுத்தொடர்



# அடங்காப்பற்றும் இராவணனும்.

ஓர் கண்ணோட்டம்



- அருணா செல்லத்துரை -

### திருமுறைகளில் மனித பரிணாம வளர்ச்சி

மனிதனுடைய பரிணாம வளர்ச்சியை மேலை நாட்டு அறிஞர்கள் பலவிதமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் டார்வினுடைய பரிணாமக் குறிப்பும், பைபிளில் குறிப்பிடப்படும் ஆதாம் - ஏவாள் வாழ்க்கை வட்டம் பற்றிய குறிப்புகளும் அதிகம் காணப்படுகின்றன. அதேபோல இந்துசமய திருமுறைகளிலும் மனித வாழ்க்கை வட்டம் விஞ்ஞான ரீதியிலும் தரப்பட்டுள்ளது. திருமுறைகளின் விளக்கங்கள் வாழ்வின் அர்த்தத்தை விளக்குவன. இதன் ஆழம் சமுத்திரம் போன்றது. இந்து சமயத்தில் உள்ளவற்றை படித்து முடிக்க இந்தப் பிறவி போதாது என்று கூறுவாருமுண்டு. இவற்றிலிருந்து சில முத்துக்களை எடுத்து "இலங்காபுரம்" என்ற தலைப்பில் எழுதும் ஆய்வுக் கட்டுரைக்கு ஆதாரங்களாக கோர்த்துள்ளேன்.

இந்து சமய திருமுறைகள் பாடிய நாயன்மார்கள் வாழ்ந்த காலம் ஏழாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை எனப் பொதுவாகத் தெரிவிக்கப்படுகிறது. திருமுறைகள் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முதல் மூன்று திருமுறைகளில் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளின் தேவாரங்களும், அடுத்த மூன்று திருமுறைகளில் திருநாவுக்கரசு நாயனார் பாடியவையும், ஏழாம் திருமுறையில் சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் எட்டாம் திருமுறையில் மாணிக்கவாசக சுவாமிகள் பாடியவையும் தொகுக்கப்பட்டுள்ளன.

மாணிக்கவாசக சுவாமிகளின் எட்டாந் திருமுறையான திருவாசகத்தின் சிவபுராணத்தை திருப்பெருந்துறையில் இருந்து பாடியருளியுள்ளார். "நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!" என்று இந்தச் சிவபுராணம் ஆரம்பிக்கின்றது. ஒவ்வொரு பதிகமும் ஐந்து அடிகளைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதிலே மனிதனுடைய வாழ்க்கை வட்டத்தை சுவாமிகள் தெளிவாகக் கூறியிருப்பது தெரிகிறது. மாணிக்கவாசக சுவாமிகளுடைய இந்தப் பதிகத்தை சமய ரீதியாகப் பார்க்கும்போது சிவனுடைய பாதாரவிந்தத்தை அடைவதற்கு முன்னர் அத்தனை பிறப்புகளையும் பிறந்திழைத்தேன் என்று கூறியிருப்பது தெளிவாகிறது. இறுதியாக சிவனுடைய பாதாரவிந்தத்தினை கண்டு பேறடைந்தேன் என்றும் பாடியுள்ளார்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்.....

புல்-பூண்டு, புழுக்கள், மரங்கள்-பல்விருட்சங்கள், பறவைகள்-பாம்புகள், கல்லான மனிதர்கள்- பேய்கள், வல்லமை பொருந்திய அசுரர்கள், முனிவர்கள், தேவர்கள், என்று தான் பிறந்த பிறப்புக்களையும், பிறக்கப்போகும் பிறப்புக்களையும் மாணிக்கவாசக சுவாமிகள் வரிசைப்படுத்திப் பாடியுள்ளார்.

இந்தப் பூவுலகில் இருந்த கற்பாறைகள் சூரிய வெப்பத்தின் காரணமாக மண்துகள்களாக மாறின என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். சிறிய மண்துகள்கள் பரந்திருக்கும் இடத்திலே முதலில் புற்கள் முளைத்தன. அதற்குப் பின்னர் செடிகள் முளைத்தன. புல்-பூண்டு, மரங்கள்-பெரிய விருட்சங்கள், அதற்கடுத்தாக பறப்பன-ஊர்வன என்பனவும், கற்கால-மனிதர்கள், அவர்களுள் பேய்க் கணங்களாக இருந்த மனிதர்கள், மனிதர்களுள் வல்லமை பொருந்திய அசுரர்கள், பின்னர் முற்றும் துறந்த முனிவர்கள், அவர்கள் தேவர்களாகி இறைவனடி சேர்தலையே மாணிக்கவாசக சுவாமிகள் கூறியிருக்கிறார் என்றும் நாம் கொள்ளலாம் அல்லவா. மனிதர்களுடைய பரிணாம வளர்ச்சி இந்த வரிசையிலே இடம்பெறுவதையும், கடைசியில் மண்ணில் பிறந்தவன் மண்ணுக்குள் மறைவதையும் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிவைத்துள்ளார்.

மனிதர்கள் மத்தியிலே மூன்று விதமான குணங்களைக் கொண்டவர்கள் இருக்கின்றார்கள். இந்தக் குணங்களுக்கேற்ப அவர்களை "கணங்கள்" என்று மனுசாஸ்திரவியலாளர்கள் வகுத்துள்ளனர். அவையாவன "தேவகணம்", "மனித கணம்", "அசுர கணம்"



என்பனவாகும். மனிதர்கள் மத்தியிலே தர்மத்தை கடைப்பிடித்து இறைவனோடு வாழ்பவர்கள் "தேவ கணத்தைச்" சேர்ந்தவர்கள் எனவும், பலவிதமான ஆசைகள் மற்றும் பலவீனங்கள் ஆகியவைகளுக்கு மத்தியிலே வாழ்பவர்கள் "மனிதகணம்" எனவும், மனிதர்கள் மத்தியில் தமக்குக் கிடைத்த அதீத சக்தியை தவறான வழியில் பயன்படுத்தும் குணாம்சம் உடையவர்களை "இராட்சத கணம்" எனவும் பிரித்துள்ளனர்.

மனிதர்கள் மத்தியில் அதீத கடவுள் பக்தியும், இறைவனோடு சரிநிகராகத் தம்மை நினைத்து வாழ்ந்தவர்கள் அசுரர்கள் என அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களை "இராட்சதகுணம்" படைத்தவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். பலவீனங்கள் நிறைந்த மனிதர்களையும், இராட்சத குணம் படைத்தவர்களையும் நல்வழிப்படுத்தி, மனுதர்மத்தை கடைப்பிடிக்கத் தூண்டியது இந்து சமயத் திருமுறைகளாகும். தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மனித சமூகத்தின் மத்தியிலும் இராட்சதகுணம் படைத்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த விதிகளை அடிப்படையாகக் கொண்டுதான் பூவுலகில் வாழும் மனிதர்களின் எதிர்காலத்தை கணக்கிட உதவும் "பஞ்சாங்கத்தை" வகுத்துள்ளனர். மனுதர்ம முறைப்படி அவருடைய குணாம்சங்களுக்கேறப தேவகணம், மனித கணம், அசுரகணம் என மனிதர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். தேவகணம் உள்ளவர்கள் எப்போதும் நல்வழியிலே செல்பவர்கள். மனித குணம் உள்ளவர்கள் பலவீனமானவர்கள். அசுர குணம் அல்லது அரக்க குணம் உள்ளவர்கள் மிகவும் கொடுமையானவர்கள். இவர்களைப் போன்றவர்களை நல்வழிப்படுத்தி, முற்றும் துறக்கச் செய்து இறைவனடி சேர்ந்தவர்களையே முன்னுதாரணங்களாக்கி தென்னிந்திய திருமுறைகளும், வடஇந்திய இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களும் படைக்கப்பட்டன என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

இந்தியாவிலிருக்கும் ஒவ்வொரு சிவன் தலத்தைப் பற்றிப் பாடும் போது, அங்கெல்லாம் அமர்ந்திருக்கும் ஈசனின் புகழை போற்றிச் சொல்வதற்காக, இலங்கை வேந்தன் இராவணனை வலுவிழக்கச் செய்து, அருள் கொடுத்ததையும், இராவணன் என்ற பெயர் வந்த வரலாற்றையும் திருஞான சம்பந்தர் அவர்கள் தனது தேவாரங்களில் பாடத் தவறவில்லை.

### திருமுறைகளில் இராவணன்

தென்னிந்தியாவிலிருந்த சோழநாட்டில் திருப்பிரமாபுரம் என்ற தலத்தில் திருஞானசம்பந்தர் ஞானப்பால் அருந்தி, "தோடுடைய செவியன்" எனறு தேவாரங்களைப் பாடத் தொடங்கினார். திருஞான சம்பந்த நாயனார் அருளிய தேவாரங்கள் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. 1469 தேவாரங்கள் உள்ள முதலாம் திருமுறையில் உள்ள பதிகங்களில் 8வது தேவாரத்தில் இராவணனைப்பற்றிய குறிப்பு முதலில் இடம்பெறுகிறது.

முதலாம் திருமுறை
தலம் : திருப்பிரமாபுரம் - (08)
பண் நட்டபாடை வியரிலங்குவரை
யுந்தியதோள்களை
வீரம்விளை வித்த
உயர்இலங்கைஅரை யன்வலிசெற்றுஎனது
உள்ளங்கவர் கள்வன்
துயர்இலங்கும்உல கில்பலஊழிகள்
தோன்றும்பொழுது .எல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே"

தெளிவுரை: சினத்தின் வயப்பட்டு வீரத்தைக் காட்டும் வகையில் கயிலையைப் பெயர்த்த இலங்கை அரசனுடைய வலிமையை அழித்து எனது உள்ளத்தை கவர்ந்த ஈசன் என்று "திருப்பிரமபுரம்" சிவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

முதலாம் திருமுறையில் பல சிவதலங்களைப் பற்றிப் பாடும்போது இலங்கை வேந்தன் இராவணன் பற்றி குறிப்பிடப்படுகிறது. முதலாம் திருமுறையில் "திருவலிதாயம்" என்ற தலத்திலே இறைவனைப் புகழ்ந்து பாடும் போது இராவணனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதும் ஏனையவையும் கீழே தரப்படுகின்றன.

தலம் : திருவலிதாயம் (30)
பண் : நட்டபாடை
"..........அடல் இலங்கை அரையன் வலி
செற்று அருள் அம்மான் அமர் கோவில்.....

தெளிவுரை: வன்மையுடைய இலங்கையின் வேந்தனான இராவணனுடைய வலிமையை அடக்கி அருள் புரிந்த ஈசன் அமரும் கோவில் திருவலிதாயமாகும்.....

தலம்: திருப்புகலியும் (41)பண்: நட்டபாடை
"இலங்கையர் வேந்துஎழில் வாய்த்ததிண்தோள்
இற்றுஅலற அவ்விரல் ஒற்றிஐந்து
புலங்களைக் கட்டவர் போற்றஅந்தண்
புகலிநி லாவிய புண்ணியனே ........

தெளிவுரை: இலங்கை வேந்தனாகிய இராவணனுடைய உறுதியான தோள்கள் துண்டுறுமாறு தனது திருப்பாத விரல்களால் ஊன்றி, ஐம்புலன்களின் களைகளைக் கட்டி அடக்கிய, திருத்தொண்டர்கள் போற்றப் புகலியில் நிலவும் புண்ணியனே.......

**தலம்: திருநள்ளாறு (72) பண்: நட்டபாடை**
"இலங்கை இராவணன் வெற்பெடுக்க
எழில்விரல் ஊன்றி இசைவிரும்பி
நலங்கொளச் சேர்ந்தநள்ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்......."

தெளிவுரை: இலங்கை வேந்தனாகிய இராவணன், திகழும் கயிலாய மலையைப் பெயர்த்து எடுக்கும்போது உயர்ச்சியை நல்கும் அழகிய விரல்களை அந்த மலையின் மீது ஊன்றி, மற்றும் அவ்வரக்கனுடைய இசையை விரும்பி அவனுக்கு நலன்களைக் கொள்ளுமாறு அருள் புரிந்து நள்ளாற்றில் வீற்றிருக்கும் பெருமானே....

(தொடரும்)......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிவன் பதில்கள்



அறிவன் பதில்களுக்கான கேள்விகளை தபால் மூலமோ, மின்னஞ்சல் மூலமோ வாசகர்கள் அனுப்பி வைக்கலாம்.

**தபால் முகவரி:-**
அறிவன் பதில்கள்
புதியவன், இல. 87, பிரதான வீதி,
மன்னார்.
**மின்னஞ்சல்:-**
Putheyayan2013@gmail.com

✪ ஞா.சேகரன் - பளை

**கவிஞர் வாலி மறைந்து விட்டாரே?**

யார் சொன்னார்கள்? அவர் தம் கவிதைகளாலும், பாடல்களாலும் தமிழர் நெஞ்சில் நிறைந்தல்லவா இருக்கிறார்.

✪ S.பவளமணி - கிளிநொச்சி

**சோதிடத்தில்உங்களுக்கு நம்பிக்கையுண்டா?**

எனது மனோதிடத்தில் நம்பிக்கையுண்டு.

✪ ப.ஆரணி - வேலணை

**நான் ஒரு ஆன்மீகக் 'குரு' வை தேடுகிறேன். வழிகாட்டுவீரா?**

'உன்னையே நீயறிவாய்' என்கிறார் சோக்கிரடீஸ் 'நீ அதுவாக இருக்கிறாய்' (அகம் பிரம்ம அஸ்மி) என்கிறது வேதம். நம்மை விடவும் வேறு குரு தேவையா?

✪ த.இராமலிங்கம் - வவுனியா

**தேர்தல் என்றால் என்ன?**

வாக்காளர்களை வேட்பாளர்கள் கையெடுத்து கும்பிட்டு பின் தொடர்ந்து வாக்கு வரம் கேட்கும் காலம்.

✪ அ.மனோகரி - வசாவிளான்

**பணத்திற்காக பொய்ச்சாட்சி சொல்பவன் எப்படிப் பட்டவன்?**

தன் மனச்சாட்சிக்கு மதிப்பளிக்காதவன்.

✪ ச.வித்தியாதரன் - மல்லாகம்

**வாக்காளர் - வேட்பாளர் இருவரையும் எப்படி ஒப்பிடலாம்?**

முன்னவர் தேர்தல் காலக் கடவுள், பின்னவர் தேர்தல் காலத் தொண்டன்.

✪ P.அருமைகுமார் - சங்கானை

**ஓடுமீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி இருக்கும் கொக்கினை யாருக்கு ஒப்பிடலாம்?**

மாகாண சபையில் இடம் கிடைக்காத வேட்பாளருக்கு ஒப்பிடலாம்... அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரும் வரை வாடியபடி காத்திருக்க வேண்டுமல்லவா?

✪ T.வர்ஷினி - தொல்புரம்

**மருத்துவ மனைகள் புதிது புதிதாக உருவாகி வளர்ந்து கொண்டு போகின்றதே....!**

மருத்துவம் பணம் கொழிக்கும் வியாபாரமாகி விட்டது அவ்வளவுதான்.

✪ அ.அருள் மங்கை - கரவெட்டி

**வட பகுதியை சிங்கப்பூராக மாற்றப் போகிறார்களாமே?**

சிங்கப்பூராக மாற்றுவார்களோ என்னவோ போகிற போக்கைப் பார்த்தால் அது சிங்களவூராக மாறுவது உறுதி போல் தெரிகிறது.

✪ ப.மதுசூதனன் - மன்னார்

**மது, சிகரெட் விலையுயர்ந்து விட்டதே: புகை, மற்றும் போதைப் பிரியர்களுக்கு அடிதானே!**

அவர்களுக்கு அடியில்லை, அவர்களின் அப்பாவிக் குடும்பத்தவர்களுக்குத் தான் வயிற்றில் அடி... புரிகிறதா. அது சரி உங்களுக்கு பிரச்சினையில்லை... உங்கள் பெயரிலேயே 'மது' நிரந்தரமாகக் குடி கொண்டுள்ளதே.

✪ சி.ஏரம்பு - இணுவில்

**முன்பெல்லாம் ஏற்றப்பாட்டு, இறக்கப்பாட்டு, ஏலேலோப் பாட்டு என்று இருந்ததாமே! இப்போது ஏன் இல்லை?**

அப்போது உழைப்பாளிகள் சந்தோஷமாக இருந்தார்கள். அந்தப் பாட்டெல்லாம் உற்சாகத்தோடு பாடும் பாட்டுத் தம்பி... இப்போது உழைப்பாளிகள் எல்லோரும் பஞ்சப் பாட்டுத் தானே பாட வேண்டியிருக்கு.

✪ அ.நெடுஞ்செழியன் - கைதடி

**மீற்றர் வட்டிக்கு பணம் கொடுப்பவன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?**

'ஒரு சென்ரி மீற்றர்' அளவு கூட இதயமில்லாதவனாக இருப்பான்.

✪ தி.சொல்வேந்தன் - ஈவினை

**கருமிக்கு பிடிக்காத மொழி எது?**

'அறம் செய விரும்பு' என்பது தான்

✪ செ.ரதிவாணி - ஒட்டுமடம்

**இன்று எந்தப் பொருளை வாங்கினாலும் மற்றொரு பொருளை இலவசமாக வழங்குவது சாதாரனமாகி விட்டதே.**

ஆமாம்! விரைவில் ஒரு கிலோ உருளைக் கிழங்கு வாங்கினால் 1/4 கிலோ தக்காளிப்பழம் இலவசம் என்று கடைகளில் சொல்லவும் கூடும்.

✪ தெ.பிறமீளா, கொட்டடி

**குடாநாட்டில் 'போதைப் பொருள்' பாவனை அதிகரித்து வருகிறதாமே?**

மேதைகள் நிறைந்த மண்ணில் போதை - பேதைகளை உருவாக்கப் போகிறது.

✪ க.அற்புதன் - வவுனியா.

**இலங்கை ஆசியாவின் அதிசயமாகுமா?**

நிச்சயமாக... இனவாதிகளும் மதவாதிகளும் இல்லா தொழியும் போது.

✪ பெ.பெரியசாமி - விசுவமடு

**சுயேட்சையாகக் கேட்பவருக்கு வாக்களிக்கலாமோ?**

அது நீங்கள் சுயேச்சையாக எடுக்க வேண்டிய முடிவு.



## வாசிப்பது சுவாசிப்பதைப்போன்று அவசியம்

சமீபத்தில் விஜய் தொலைக்காட்சி ஒளிப்பரப்பிய "நீயா நானா?" நிகழ்ச்சியில் ஒரு விவாதத்தைப் பார்த்தேன் விவாதம் புத்தகம் படிக்கும் பழக்கம் நல்லதா கெட்டதா என்பதைப் பற்றியதாக இருந்தது. இந்த தலைப்பே வினோதமாக இருந்தது. புத்தகம் படிப்பது என்பது எப்படி கெட்டப்பழக்காக இருக்க முடியும்? நிகழ்ச்சியை பார்த்த எனக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி காத்திருந்தது. புத்தகம் படிப்பது குறிப்பாக சிறு வயதினரும் இளமைப்பருவத்தில் இருப்பவர்களும் படிப்பது கலாச்சரத்திற்கும் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைகும் கேடு என்று ஒரு பகுதியினர் ஆர்ரோஷமாக போரிட்டார்கள் அதில் இளைமை தலைமுறையினரும் இருந்தனர்.

"புத்தகம் படிப்பது ஆக வேண்டியது ஒன்றும் இல்லை", "அது மனதைக் கெடுத்து வீடும் ... தவறான எண்ணங்களை ஏற்படுத்தி வாழ்க்கையை திசை திருப்பி விடும்..." "அது தான் தொலைக்காட்சியிலும் சினிமாவிலும் எல்லாம் தெரிந்து விடுகிறதே.. அதற்கு மேலும் புத்தகம் படிக்க வேண்டுமா?" "புத்தகம் என்றாலே ஆபாசம் தான் ... அவை பண்பாட்டுக்கு உலை வைப்பவை.." இப்படியெல்லாம் சகட்டு மேனிக்கு விமர்சனங்கள் வந்தன. பெரும்பாலனவர்கள் "புத்தகம்" என்று குறிப்பிட்டது வெகுசஜனப் பத்திரிகைகளோடு புத்தகம் படிக்கும் வழக்கத்தோடு தொடர்பு படுத்துவது எப்படிப்பட்ட அறிவீனம்!

இன்றைய இளைய தலைமுறையினருக்கு செல்ஃபோன், ஃபேஸ்புக், டிவிட்டர், ஆர்குட், இவற்றதைத் தாண்டி நல்ல புத்தகங்களைப் படிப்பதுப் பார்க்க ஆர்வம் குறைந்து வருகிறது என்பது ஆபத்தான மாற்றம், ஒரு தலைமுறையின் சிந்தனைப் போக்கையே வெற்றிடமாக்கும் நெருக்கடி இதனால் ஏற்படுகின்றது. புத்தகம் படிப்பது என்றால் வெகுஜனப் பத்திரிகை படிப்பது மட்டுமல்ல என்பதை எல்லோரும் உணர வேண்டும். குழந்தைகளுக்கு பெரும்பாலன பழக்க வழக்கங்கள் அதன் பெற்றோர்களிடம் வருகின்றன. புத்தகம் படிப்பது அதில் ஒன்றில் தான் அற்புதவுலகத்தில் அல்ல. "குட்டி இளவரசன்" போன்றவற்றைப் படிக்காத இளம் பருவம் என்பது அந்த வயதுக்குரிய நட்டம் தானே?

இளைய தலைமுறை பிரமிப்போடு பார்க்கும் ஆளுமைகளில் ஒருவர் விஞ்ஞானி ஐன்ஸ்டன். அவருடைய சார்பியல் தத்துவம் விஞ்ஞானிப் பார்க்கும் ஆளுமைகளில் ஒருவர் விஞ்ஞானி ஐன்ஸ்டைன், அவருடைய சார்பியல் தத்துவம் விஞ்ஞானப் பார்வையையே புரட்டிப் போட்ட ஒன்று, அவர் தன்னுடைய சார்பியல் கணக்குகளுக்கான சூத்திரங்களை எழுத்தாளர் தாய்ஸ்தவேஸ்கியின் புத்தகங்களில் மறைமுகமாகத் தெரிந்ததாகக் குறிப்பிட்டார். அவை வெறும் கற்பனை புத்தகங்கள் அல்ல. விஞ்ஞானக் கோட்பாடுகளை மகா புத்திசாலித்தனமாக வெளிப்படுத்திய மனித சிந்தனையின் மகத்தான படைப்புக்கள் என்று குறிப்பிட்டார் ஐன்ஸ்டைன் காந்தயடிகள், மார்டின் லூதர் கிங், நெல்சன் டிமண்டேலா போனற தலைவர்கள், அகிரா குரோசோவா, மஜீத், ஸ்டீவன் ஜ்பீல்பர்க் மெக்ம்ல்பஃப், அல்மொடோவர், ரோமன்போலான்ஸ்கி போன்ற திரை இயக்கிநர்கள் வேக்னர் ஜான் லென்னன், பாப் மார்லி போன்ற இசை மேதைகள் எல்லோரும் தங்களை உருவாக்கியவையே புத்தகங்கள் தான் என்று சொல்லியிருக்கிறார்கள். எழுத்தாளர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். லியே டாலர்ஸ்டாயைத் தங்கள் மானீக குருவாக கொண்டு உருவான் எழுத்தாளர்கள் ஆண்டன் செக்காவ், மாக்கியில் ஆரம்பித்து எத்தனையோ ஆயிரம் பேர்.

சமீபத்தில் நடத்த ஒரு திரை விழாவில் இயக்குநர் பாலு மகேந்திரா "உதவி இயக்குறர்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இலக்கிய பரிச்சியம் இல்லாத நல்ல படைப்புக்களைப் படைக்க முடியாது என்று பேசினார். அவருக்கு அடுத்துப் பேச வந்த இயக்குநர் அமீர் தனக்கு படிக்கம் பழக்கமே கிடையாது எனினும் தினசரிகளைக் கூடத் தான் படிப்பதில்லை என்று செருக்குடன் குறிப்பிட்டார். எங்கே போய் தலையில் அடித்துக் கோள்வது. இதே போல் இயக்கநர் மிஷ்கின் உதவி இயக்குநர்களுக்கப் படிக்கும் பழக்கமே இல்லை என்று ஒரு பேட்டியில் சொல்லியிருந்தபோது பல உதவி இயக்குநர்கள் பொங்கி எழுந்தார்கள். "நாங்கள் வாழ்க்கை என்னும் அனுபவத்தைப் படிக்கிறோம். அது போதும் என்று சொல்லி புத்தகம் படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை வலியுறுத்தினார்கள். திரைத் துறையினர் மட்டுமின்றி ஐடி, வங்கி, கல்வி, மருத்துவம், தெழில் துறை என்று அனைத்துப் பிரிவினர்களிடமும் இந்தப் புத்தகம் படிக்கும் பழக்கத்தின் மீதே ஒரு வெறுப்பு இருப்பதையும் அதைப் சமயம் கிடைக்கும்போது காழ்ப்புணர்ச்சியுடன் வெளிப்படுத்துவதையும் நாம் சமூகத்தில் மட்டுமே பார்க்க முடியும்.

வெளிநாடுகளில் புத்தக அலுமாரிகள் இல்லாத வீடுகளைப் பார்ப்பது அரிதாகத்தான் இருக்கும் விமான நிலையங்கள், ரயில்கள், பேருந்துகள் போன்றவற்றில் பயணம் செய்யும் பொது அவர்கள் அமைதியுடன் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பதை நாம் பார்க்க முடியும். புக்கர் போன்ற பரிசுகள் பெற்ற புத்தகங்கள் எத்தனை வேகமாக விற்பனையாகின்றன என்பது மற்றொரு உரைகல். புத்தகம் என்பது நம் வீட்டிலிருந்து உலகைத் திறக்கும் ஜன்னல் அதை மூடியே வைத்திருந்தால் மூச்சடைத்துப் பல நோய்கள் வந்து சேரும். புத்தகம் படிக்கும் பழக்கம் பற்றிய சில் மேற்கோள் இப்போது தருகிறோம்.

"வாழ்வதற்கு ஒரே ஒரு வாழ்க்கைதான் இருக்கிறது என்று சொல்பவர்கள் புத்தகம் படிப்பது என்றால் என்ன என்பதை உணர்ந்திருக்கமாட்டார்கள்"- எட்வர்ட்மார்கன்

"ஒரு மிக்க சிறந்த புத்தகத்தை நீங்கள் படிக்க விரும்பகிறீர்கள். ஆனால் அது இன்னும் யாராலும் எழுதப்படவில்லை என்கின்ற நிலை இருந்தால் அதற்கு ஒரே தீர்வு. அதை நீங்கள் எழுத வேண்டியது தான்"- டோனி தாரிஸன்

"ஒரு நல்ல புத்தகம் முடிவில்லாதது ... அது பல வாழ்க்கைகளைப் பற்றி உங்களை நினைவபடுத்திக் கொண்டே இருக்கும்..." - ஆர்.டி. கம்மிங்

"எப்போது நல்ல புத்தகத்தை படியுங்கள். அதைப் பாதி படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு வேளை நீங்கள் இறந்து போனாலும், அப்போதும் இனிமையான முகம் கொண்டு இருப்பீர்கள்" - ஒரூர்கே

-கிருஷ்ணா டாவின்ஸி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# விருந்தோம்பல்

அ. முத்துலிங்கம்

சோமா என்ற பெண்மணியிடம் இருந்துதான் அழைப்புவந்திருந்தது. ஒரு வியாழக்கிழமை மதிய விருந்துக்கு. அவருடைய முழுப்பெயர் என்ன? அவர் வயது, உயரம், எடை, பருமன், நிறம் ஒன்றுமே எனக்கு தெரியாது. முக்கியமாக அவர் இருக்கும் இடம் ரொறொன்ரோவில் இருந்த இரண்டு மணிநேர தூரம்தான் என்ற விவரம் பின்னர்தான் கிடைத்தது. ஆனால் நான் விருந்துக்கு வருவதாக சம்மதம் தெரிவித்துவிட்டேன். ஆகவே வேறு வழியில்லை. போகத்தான் வேண்டும்.

வழக்கம்போல ஒன்றிரண்டு திருப்பங்களை தவறிவிட்டு அரை மணி நேரம் பிந்தி விருந்து வீட்டுக்கு போய்ச் சேர்ந்தேன். ஒரு பெண்மணி வந்து தன்னை சோமா என்று அறிமுகப்படுத்தி கைகொடுத்தார். ஐந்து அடி உயரம் இருப்பார். முற்றிப் பழுக்காத நாவல் பழத்தின் நிறம். மார்பு பிருட்டம் இடை எல்லாம் ஒரே அளவில் இருந்ததால் அவருக்கு ஆடை தைக்கும் தையல்காரருக்கு வேலை சிரமமாக இருக்காது. ஆனால் அவருடைய முகத்தில் பத்து சந்திரன்களின் ஒளியிருந்தது. இன் முகத்துடன் வாருங்கள். வாருங்கள் என்று வரவேற்று நேரே தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார். பெரிய தோட்டம் அங்கே நின்ற அவருடைய பிரமாண்டமான வீடு போல அந்த தோட்டத்தில் நாலு வீடுகளை நிறுத்தி வைக்கலாம். தோட்டத்தைப் பார்த்து அதிசயித்துப்போய் நின்றேன்.



ரொறொன்ரோவில் சில தோட்டங்களில் வருடா வருடம் புதுப்பிக்கப்படும் பூக்கன்றுகளை வாங்கி நட்டு வைப்பார்கள். அவை பூத்து அந்த வருடம் முடியும்போது அவையும் முடிந்து விடும். அடுத்த வருடம் மறுபடியும் புதிதாக பூக்கன்றுகள் வாங்கி நடவேண்டும். இன்னும் சில தோட்டங்களில் வருடா வருடம் அழியாமல் தொடர்ந்து நின்று பூக்கும் பூக்கன்றுகள் இருக்கும். பனிக்கால முடிவில் அவை ஓய்வு பெற்று மறுபடியும் வசந்தம் வரும்போது உயிர்த்தெழும். ஆனால் இந்த தோட்டத்தில் இரண்டு வகையான பூக்களும் பூத்து குலுங்கின. 'மிக அழகான தோட்டமாக இருக்கிறதே. நீங் கள் தோட்டக் கலை படித்திருக்கிறீர்களா? என்று கேட்டேன். அவர் சிரித்தார். ஒரு கலையும் படி க்கவில்லை. அனுபவம்தான் 20வருடமாக தோட்டத்தை நான்தான் பராமரித்து வருகிறேன். இந்த தோட்டத்தில் தெரியும் அவ்வளவு அழகும் என்னிடமிருந்து வந்ததுதான். குரல் வந்ததே ஒழிய சோமா மறைந்து விட்டார். ஏல்லா திசைகளிலும் ஆக குறைந்த நேரத்தில் ஓடிக் கொண்டிருந்தார். புதிய விருந்தாளிகளை வரவேற்று. அவரவர்களுக்கு வேண்டிய பானங்களை அவரே எடுத்து வந்து பரிமாறினார். விருந்தினர் உபசரிப்பில் ஒரு குறையும் வைக்கவில்லை.

உடுப்பு அழுக்காகி விடும் என்ற கவலை சிறிதும் இல்லாமல் விருந்தினர் ஒருவர் புல் தரையில் அமர்ந்து ஒரு கயிற்றிலே வித விதமான முடிச்சுக்கள் போட்டுக் கொண்டிருந்தார். கைகளை வித்தைக்காரன் போல வேகமாக அசைத்து கண் இமைக்கும் நேரத்திற்கிடையில் ஒரு புது முடிச்சைப் போட்டார். அதனிலும் வேகமாக போட்ட முடிச்சை அவிழ்த்தார். இவர் ஒரு காலத்தில் சாரண பயிற்சியாளராக இருந்திருக்கலாம் என்று நினைத்தேன்.

அவருக்கு முன்னால் ஒருவர் உட்கார்ந்து பாடம் கேட்பது போல அவர் செய்வதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். இருவரும் பேசும்போது அவர்கள நண்பர்கள் போல் இருந்தது. எவ்வளவு காலமாக உங்கள் இருவருக்கும் பழக்கம்? என்று கேட்டேன். கயிறு வித்தைக்காரர் இப்ப இரண்டு நிமிடம் என்றார். அப்போதுதான் எனக்கு ஒரு விஷயம் பிடிபட்டது. அங்கே வந்திருந்தவர்களில் ஒருவருக்கு கூட இன்னொருவரை தெரியாது. விருந்துக்கு அழைத்த சோமாவுக்கும் கூட அழைப்பை ஏற்றுவந்த விருந்தினர்களை முன்னரே பழக்கமில்லை. விருந்து முடிவுக்கு வரும் சமயத்தில்தான் இந்த புதிர் எங்களுக்கு விடுவிக்கப்படும்.

மதிய உணவு மிக சாதாரணமானதாகவே இருந்தது. ஆனால் அதை வழங்கிய விதம் உயர்தரமானது. ஆடம்பரம் இல்லாத அழகு, விலை மதிப்பான கோப்பைகள், வெள்ளி கரண்டிகள், ஒளி வீசும் கிண்ணங்கள், நீளமான மெல்லிய கம்பின் மேல் நிற்கும் கிளாஸ்கள், சோமா உட்காரவேயில்லை. நின்று கொண்டும் ஓடிக் கொண்டும் விருந்தினரை தனித் தனியாக உபசரித்தார். இதைச் சாப்பிடுங்கள் இது விசேஷமாக தயாரிக்கப்பட்டது. கோவா இலையில் அப்பிள் துண்டுகளையும் வறுத்த பெக்கன் விதைகளையும் கலந்து செய்தது. ஒவ்வொரு விருந்தினரையும் மூன்று தரம் உப சரிப்பதை அவர் வழக்கமாக கொண்டிருந்தார்.

'சிலர் மனம் விட்டு உபசரிக்கும்போதே உங்கள் வயிறு நிறைந்துவிடும், இவர் அந்த வகையைச் சேர்ந்தவர். சோமா இந்த நிமிடம் வரை 10மைல் துாரம் நடத்துவிட்டார் என்றார் எனக்கு பக்கத்தில் உட்கார்ந்து இருந்தவர். அப்போதுதான் திரும்பி அவரைப் பார்த்தேன் வாழ்க்கை முழுக்க தேடிய ஒருவர். எனக்கு பக்கத்தில் உட்கார்ந்து உணவு அருந்தியது எனக்கு தெரியவில்லை. அவர் என்னிடம் பேசியதாக நினைத்தேன். உண்மையில் அவரே என்னோடு சேர்ந்து பத்து பதினைந்து பேர் நிற்பதுபோல என் திசையை பார்த்து பொதுவாகத்தான் பேசினார். வெள்ளை தலை முடி, வெள்ளை மீசை, வெள்ளை தோல், வெள்ளை சேட், அவருடைய சப்பாத்தும் கூட வெள்ளையாகத் தான் இருந்தது. என் பக்கம் திரும்பி என்னுடைய பெயர் ரிஸ்டோ என்றார். நானும் என் பெயரைச் சொன்னேன். நீங்கள் இந்தியரா என்று விசாரித்தார்.

நான் இலங்கை என்றேன். அப்படித்தான் பேச ஆரம்பித்தோம். விருந்து கொடுப்பவர் விருந்தாளியுடன் உட்கார்ந்து சாப்பிட மாட்டார். அதுதான் மறைவான விருந்தோம்பல். எங்கள் பழைய புலவர் ஒருவர் கூட அப்படிச் சொல்லியிருக்கிறார். 'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விரும்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.' விருந்து கொடுத்து விட்டு மிச்ச உணவைத் தான் சாப்பிட வேண்டுமாம் ரிஸ்டோ ஆச்சரியப்பட்டார். எங்கள் நாட்டிலும் அதே வழக்கம்தான். நீங்கள் என் வீட்டிற்கு வந்தால் என் மனைவி விருந்தின்போது உங்களுடன் உட்காரவே மாட்டார். அப்படி உட்கார்ந்தால் உபசரிப்பு குறைபட்டதே என்று அர்த்தம். மிக பழமையான விரும்தோம்பல் முறை அது என்றார்.

'ஆச்சரியமாக இருக்கிறது உங்கள் நாட்டிலும் அப்படியா? உங்கள் நாடு என்ன? என்றேன். அவர் மாசிடோனியா என்றார். நான் அலெக்சாந்தர் பிறந்த நாடல்லவா என்று சொல்லி எழுந்து நின்று அவர் கையை தொட்டு கண்ணிலே ஒற்றிக் கொண்டேன். என்ன செய்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்? என்று சிரித்துக் கொண்டே அவர் கையை இழுத்தார். நான் சந்திக்கும் முதல் மாசிடோனியா நீங்கள். உங்கள் உடம்பில் ஒரு துளிக்கும் சமமான அலெக்சாந்தரின் இரத்தம் ஓடக் கூடுமல்லவா? என்றேன்.

சிறிய நாடான மாசிடோனியா அரசனுக்கும் கிரேக்க அழகி ஒலிம்பியாவுக்கும் பிறந்தன் அலெக்சாந்தர். கிரேக்கரான அரிஸ்ரோட்டல் அவனுடைய குரு. அலெக்சாந்தர் தன் தலையணையின் கீழ் எப்பவும் கிரேக்க கவிவோமரின் இலியட் காவியத்தை வைத்திருப்பானாம். கிரேக்க இலக்கியத்தில் அவ்வளவு பற்று அவனுக்கு இளவயதில் ஆட்சிக்கு வந்து 33 வயதிலேயே இறந்துபோனான். ஆனால் அதற்கிடையில் அறிந்த உலகத்தில் பாதியை பிடித்து தன் அதிகாரத்துக்கு கீழ் கொண்டு வந்திருந்தான். இதுவெல்லாம் நான் ஏற்கனவே படித்தது. நான் படிக்காத ஒன்றை ரிஸ்டோவிட ம் கேட்டேன். 'அலெக்சாந்தர் என்ன மொழி பேசினான்?' அவர் சொன்னார் அப்பொழுதெல்லாம் கிரேக்கம் உலக மொழி. மாசிடோனியன் அறிமுகம் இல்லாத சின்ன மொழி. தான் நாட்டு படை வீரர்களுடன் மட்டும் அலெக்சாந்தர் மாசிடோனியன் பேசினான்.

உலகத்தோடு அவன் பரிமாறிய மொழி கிரேக்கம் என்றார். இப்படி பேசிக் கொண்டே நாங்கள் உணவருந்தினோம். எங்களைச் சுற்றி இன்னும் 25பேர் அங்கு இருப்பது எங்களுக்கு தெரியவில்லை. உரையாடலில் எங்களை மறந்து ஆழ்ந்து போயிருந்தோம்.

அங்கு கூடியிருந்த அத்தனை விருந்தினரும் இதற்கு முன்னர் ஒருவரையொருவர் சந்தித்தது கிடையாது. ஆனால் அவர்கள் எல்லோரும் ஐ.நா சபைக்காக எங்கோ ஒரு கிளையில், ஏதோவொரு நாட்டில் எப்பவோ ஒரு காலத்தில் வேலை செய்திருக்கிறார்கள். விருந்து கொடுக்கும் சோமாவும் அப்படியொரு காலத்தில் வேலை செய்தவர்தான். இதற்கென்று மினக்கெட்டு ஆராய்ச்சிகள் செய்து அங்கு வந்திருந்தவர்களையெல்லாம் முகப் புத்தகம் மூலமாகவும், கூகுல் மூலமாகவும் தேடிக் கண்டு பிடித்த விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அப்படித்தான் நாங்கள் எல்லாரும் சந்தித்துக் கொண்டோம். இந்த விபரம் விருந்து முடிவுக்கு வந்தபோதுதான் எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

ஒரு 16, 17வயது மதிக்கத்தக்க பெண் அவள் அணிந்திருந்த காலணி பழைய போர் வீரர்களின் காலணி போல கயிற்றினால் குறுக்காக மாற்றி மாற்றி கட்டி முழங்கால் வரைக்கும் உயர்ந்திருந்தது. அவளுடைய கண்கள் அங்கு மிச்சமிருந்த சூரிய வெளிச்சத்தை உள்வாங்கி விட்டது போல பிரகாசித்தன. ரிஸ்டோ இவள்தான் என்னுடைய மகள் என்யென காரிலே இங்கே அழைத்து வந்தவள். என் புத்திமதிகளை கேட்பதை நிறுதியிருந்த படியால் வழி தவறவில்லை. என்றார். அப்பா சும்மா இருங்கள் என்று செல்லமாய் கண்டித்தாள் மகள். என் வாழ்க்கையில் மறக்க முடியாத தி னம் இது என்றேன் நான். ஏன் என்பதுபோல இருவரும் என்னைப் பார்த்தார்கள். ஒரு மாசிடோனிய அழகியை சந்தித்த தினம் என்றேன் நான். நீங்கள் இருவரும் உங்கள் பொய்களை பரிமாறுங்கள் என்று கூறிவிட்டு மகள் போய்விட்டாள்.

அவளைப் பார்த்தவாறு இருந்த ரிஸ்டோ என் மகள் பேசும் மாசிடோனியன் சுத்தமானது. அவளைப்போல இப்ப மாசிடோனியன் பேசுபவர்கள் குறைவு என்றார். 'உங்கள் நாட்டில் இருப்பவர்தானே என்றேன். மாசிடோனியா மிகச் சிறிய நாடு 1991ல் தான் சுதந்திரம் கிடைத்தது. தனி நாடாக ஆகியது. அதன் அரச கரும மொழி மாசிடோனியன். அங்கே ஒன்றரை மில்லியன் மக்கள் மாசிடோனியன் பேசுகிறார்கள்.



மாசிடேனியாவுக்கு வெளியே புலம்பெயர்ந்த வகையில் ஒரு மில்லியன் மக்கள் மாசிடேனியன் பேசுகிறார்கள் என்றார். 2ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்த மொழி உங்களுடையது. இப்பொழுது நாடும் கிடைத்து விட்டது. உங்கள் மொழி இனிமேல் வாழ்ந்து விடும் என்றேன். அவருடைய வெள்ளை முகம் தோட்டத்தில் விழுந்த சூரியனின் சிவப்பாக மாறிக் கொண்டு வந்தது.

எங்கள் மொழி வளர்வது கிரேக்கர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் பெரும் முட்டுக்கட்டையாக அல்லவா இருக்கிறார்கள்?

உங்கள் நாட்டுக்கும் கிரேக்க நாட்டுக்குமிடையில் நீண்ட நாள் பகையல்லவா? அவர்கள் அதை சீக்கிரம் மறந்து விடுவார்களா? என்றேன். அலெக்சாந்தர் 20வயதில் அரசன் ஆனதும் முதலில் படையெடுத்தது கிரேக்க நாட்டின் மீதுதான். அந்தப் போரில் 6ஆயிரம் கிரேக்க வீரர்கள் கொல்லப்பட்டார்கள், 30ஆயிரம் பேர் அடிமைகளாக்கப்பட்டார்கள். இது நடந்தது இரண்டாயிரத்து முன்நூறு வருடங்களுக்கு முன்னர். ஆனால் கிரேக்கர்கள் அதை இன்றுவரை மறக்கவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. சில பகைகள் அப்படித்தான். காலம் அவற்றை மறக்க விடுவதில்லை. நினைவூட்டி க் கொண்டே இருக்கும் என்றேன். கிரேக்கம் எவ்வளவு பெரிய மொழி எங்கள் மொழி இப்பொழு துதான் வாழத் தொடங்கியிருக்கின்றது. ஆனால் கிரேக்கர்களுக்கு இது பிடிக்கவில்லை. மாசிடேனியன் பெயர்களையெல்லாம் கிரேக்கப் பெயர்களாக மாற்று கிறார்கள். ஒரு காலத்தில் மாசிடேனி யன் மொழி பேசுவதும் கூட சட்டவிரோமான செயல்.

இரண்டு மொழிகள் பக்கத்துப் பக்கத்தில் வாழ முடியாதா? ஒன்றை அழித்துத்தான் இன்னொன்று வாழ வேண்டுமா? உணர்ச்சிவசப்பட்டதில் ரிஸ்டோவின் குரல் பழுதுபட்ட முடி உலர்த்தியின் சத்தம் போல் மாறியிருந்தது.

அப்பொழுது சோமா வந்தார். அவருடைய இரண்டு கைகளிலும் இரண்டு குடுவைகள் இருந்தன. ஒன்று தேனீர், ஒன்றில் கோப்பி. மூன்றாவது தடவையாக எங்கள் கோப்பைகளை நிரப்பினார். எங்கள் நாட்டிலும் இப்படித்தான் விருந்தினரை மூன்று தடவைகள் உபசரிக்க வேண்டும் என்றார் ரிஸ்டோ.

அவர் சமநிலையினை அடைந்திருந்தார். மீண்டும் நாங்கள் மொழி பற்றியே விவாதத்தில் இறங்கினோம். சோமா குடுவைகளை துாக்கிக் கொண்டு அடுத்த மேசைக்கு ஓடினார். அந்தச் சிங்களப் பெண்ணுக்கு களைப்பே இல்லை. சூரியக் கடிகாரம் போல ஓசையின்றி விருந்து முடிவுக்கு வரும் வரை உழைத்துக் கொண்டேயிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**கடந்தவனே!**

உன்னைத் தேடுவதிலேயே என் காலங்கள் கழிந்து விட்டன. உன்னைத் தேடிப் பெறுவதா? நீ நாடி அடைவதா?

நான் ஈதொன்னையும் அறியேன், வகை பிரிக்கவும் தெரிந்திலேன். எது , எப்படி - இருந்தாலும், உன்னை அடைவதே - உன் தரிசனம் பெறுவதே என் இலக்காயிற்று. ஆயினும்,

என் இலக்குகள் தவறிக் கொண்டேயிருக்கின்றன.

தவறிய இலக்குகள் எதை எதையோ காயப்படுத்தி.... என் நெஞ்சம் களரியாகின்றது.

இரத்தம் சொட்டும் நெஞ்சுடன், நீ எங்கெல்லாம் இருப்பதாகக் கூறினார்களே அங்கெல்லாம் ஓடோடிச் சென்றேன். உன் நினைப்பின் வேகாரத்தில் என் பயணம், பாதை இரண்டினதும் தொல்லைகள்.... சுமைகள்... இழப்புகள் எதுவுமே தெரியவில்லை .

ஆனால் என் உடல் நலம்...

ஆத்மச் சிறகுகளை உதிர்த்த சகோரப்பட்சியாய்,

வீர நகங்களை இழந்த வரிப்புலியாய்,

தந்தம் இழந்த வாரணமாய் , துடி துடித்தபோதும் ,

உன் நிழல் தேடி அடைக்கலம் நாடி ஓடிய பதை பதைப்பில் ... என் உள்ளம்,

வாடைக்காற்றின் பசுந்தளிராய் நடுக்கமுறுகின்றது, உன் தரிசனம் காணா நிலையில் வாடலாயிற்று.

இலை பழுத்துச் சருகாகலாம். அது உதிரும் ஓசையாவது உன் திருச் செவியில் கேட்கலாகும். ஆனால் தளிர் வாடி உதிர்ந்தால்.. ஓசை கூட எழாதே..

தனிரிதயம் வதங்கி உதிருமுன் உன் தரிசன இலட்சிய தாகத்தில் தவிக்கின்றது. அதனால்... உன்னைத்தேடும் வேட்கை காட்டுத்தீயாகிறது. பயணம், பதைபதைப்பு, நடை மீண்டும் பயணம்

ஆ! என்ன ஏமாற்றம் கானலைகள் கண்முன் நீராட்டுகின்றன.

ஆச்சரியமான ஏமாற்றம் உற்பவித்த மனச்சோர்வில் ரௌத்திரம் பொங்குகின்றது ருத்திர பூமியில் உன் நெறறிக் கண்ணென.....

உன் இருப்பிடத்தை நன்கறிந்தவர்கள் என் நான் எண்ணியவர்கள் காட்டிய இருப்பிடங்கள் ...

வௌவால் எச்சம் நிறைந்த இருட்குகைகள், பாழடைந்த மாளிகைகள் , இருட்டின் அரசுகள், பாம்புப் புற்றுகள் ....

நீ இருக்குமிடங்கள் இப்படியா இருக்கும்?

அறியாமையான இருட்டா நிலவும்?

அங்கு, தூய்மை அல்லவா அரசோச்சும்.

படிகத்தின் ஒளியென

தெளிந்த நீரோடையென

காலை மலரின் விகசிப்பென

பனித் துளியெனப்

பளீரிடாதா?

எங்கெல்லாம் தூய்மையின் தரிப்பிடங்கள் தென்படக் கூடுமோ, அங்கெல்லாம் ஓடோடிச் சென்றேன் ஆனால்.

தூய்மைகள்.... அசுத்தமாகி, அங்கோலமாயிருந்தன.

புனிதங்களில் அசுத்தக்கறை படிந்து களங்கப்பட்டுக் காணப்பேன். என் கடமை இரண்டாயிற்று.

தூய்மையைத் தேடுவேனா? உன்னைத் தேடுவேனா?

தூய்மையும் , நீயும்,

தூய்மை எங்கே? தூய்மை எது?... எப்படி?.... எங்கே?...... என் நெஞ்சம் வினாக்கொளுக்கிளால், மந்தைக்குத் தழை பறிக்கும் இடையனின் வளை தடியாய்யல்லாது, மதநீர் சொரியும் மத்தகத்தையடக்கும் அங்குசமாய் வலியெடுத்தன.

தூய்மை- உடலா, உள்ளமா , உலகா.. உலகின் சடப்பொருளா .. உயிர்ப்பொருளா... அணுவா... அண்டமா... எதிலிருக்கிறது?

என் நெஞ்சப் பிசைதலில், எதுவோ சொட்டுகிறது, எங்கிருந்தோ... எதுவோ.. எதோ... என் மனதில் கூவுகிறது.

'உள்ளமே கோயில் ... நெஞ்சமே கற்பக்கிருகம்...

ஆத்மாவே தீபச்சுடர்'

என் மனதில் காலை ஒளி பரவுகிறது.

தேவனே!

என் நெஞ்சத்தை உனக்கு எப்படி ஆலயமாக்குவேன்,

என் நெஞ்சம் தூய்மையானதா என்பதனையே அறியேனே.

ஆனாலும்,

ஹம்ச தூளிகா மஞ்சமென உனக்காக என் இதயத்தை அமைக்க ஆசையால் அவாவுகிறேன்.

நெஞ்சத்தைத் தூய்மைப்படுத்த எடுத்த துடைப்பமே குப்பைகளாக உதிர்கின்றன.

குப்பையாக - குப்பைவாரே மாறிவிடுகின்றதே.

இறையே! இது என்ன சோதனை? துடைப்பத்தை வீசி எறிந்து விட்டு, மனவைராக்கிய வாரினால் அள்ளுகிறேன்.

என்ன கொடுமை!

குப்பை மேட்டின் கோழிக் கால்களில் சிதறும் குப்பை கூளங்களாக ...

என் மனக்கஞ்சல்கள் புறப்படுகின்றன.

இவ்வளவு கஞ்சல்களை வைத்துக்கொண்டா, தூய்மையை நாடி ஓடினேன்? நோய் பரப்பும் கிருமிகளைக் கையில் வைத்துக்கொண்டா, நோயாளியைச் சுகம் விசாரிக்கச் சென்றேன்? இவ்வளவு அழுக்குகள் எப்படி என்னில் சேர்ந்தன?

வியப்புத் தாளவேயில்லை. விம்முகிறேன்.

அதிருப்தியும் ஏமாற்றமும் நிறைகின்றன.

மனம் வைராக்கியம் கொள்கிறது.

மனவாரினால் - குப்பையை அள்ள அள்ள.. சகதியில் கால் வைத்தவன் கதையாகி..

குப்பை குறைவதற்குப் பதிலாக .. மன ஆழுமே விகாரமாக மாறுகின்றது.. புண்ணிருந்தகுழியாகி ஆழம் ஆழமாக..

**இறையே!**

இந்த ஆழத்தைக் காணக்காண எனக்குப் பயம் மேலிடுகிறது. என்னைக் காப்பாற்று...

என் கதறலிலும், என்ன மன ஆழமே அதிகரிக்கிறது.

**இறையே!**

உனக்குச் சிம்மாசனம் அமைக்க முயன்ற நான்...

பொறியாசனமாக அமைகின்றேன்?

**தேவா!**

நெஞ்சப்பொறியும் கோவிலாமே?

என் வினாவினால் உனக்கு-ம் சிரிப்பு வருகிறதா?

உன்னைச் சிரிக்கவைத்த திருப்தியுடன் நான் திரும்புகையில்..

'இப்போதும் வென்றவன் நீயே' என வாய் முணுமுணுக்கிறது.




உனக்கு தீங்கிழைத்த வறுமையே நீதியின் ஞானத்தையும், வாழ்க்கையின் அர்த்தத்தையும உனக்குத் தெரியுமாறு செய்தது என்பதை நீ புரிந்து கொண்டால் உனக்கு கிடைத்ததைக் கொண்டு நீ மன நிறைவு அடைவாய். நீதியின் ஞான த்தை கூறினேன். ஞானம் பெறுவதற்காக செல்வ த்தை குவித்துக் கொண்டிருந்தான் செல்வன். வாழ்க்கையின் அர்த்தத்தை சொன் னேன் மனிதனோ தனது அதிகாரத்தை தேடிக் கொண்டு உண்மை என்ற பாதை அமைப்பதில் மகிழ்ச்சியாய் இருந்தான்.

நண்பனே! மகிழ்வாய் இரு. நீயே நீதியின் வாய், வாழ்க்கையின் புத்தகம் நிறைவோடு இரு. உன்னை ஆட்சி புரிபவர்களுக்கு நீயே புனிதங்களின் ஆதாரமாய் இருக்கிறாய். உன்னை வழி நடத்துபவர்களுக்கு நீயே நேர்மையின் துணையாய் இருக்கிறாய். உன்னை வாழ்க்கையில் தோற்கடித்த துரதிஷ்டமே உனது இதயத்தில் சுடரேற்றி. உனது ஆன்மாவை ஏளனம் என்ற பள்ளத்தாக்கிலிருந்து கௌரவம் என்ற சிம்மாசனத்திற்கு உயர்த்திய சக்தி என்பதை நீ புரிந்து கொண்டால்,

உனக்கு கிடைத்ததைக் கொண்டு நிறைவு அடைந்து அதுவே உன்னை புத்திசாலியாக ஆக்கி அறிவுரை கூறும். செல்வமாய் நினைப்பாய் வாழ்க கையில் பலதரப்பட்ட வளையல்களால் ஆன சங்கிலி. சோகம் நிகழ்கால முறையீட்டிற்கும். எதிர்கால நம்பிக்கைக் குமிடையில் உள்ள தங்க இணைப்பு. அது தூக்கத்திற்கும் விழிப்பிற்குமிடையில் தோன்றும் உதயம். வறுமை ஆன்மாவின் பெருந்த ன்மையினை தள்ளி வைக்கும்.

செல்வமோ அதை தீங்கிற்கு வெளிப்படுத்திக் காட்டும். வறுமை உணர்வுகளை மேன்மையாக்கும், மகிழ்ச்சி இதயத்தின் காயங்களை ஆற்றும். வறுமையும், துன்பதும் அழிந்து விட்டால் மனிதனின் உணர்வு காலியாய் கிடக்கும். கரும்பலகை போன்று அந்த வெறுமையும் நன்மைக்கே. இல்லா வி ட்டால் அதிலே சுயநலமும், பேராசையும் எழுதப்பட்டிருக்கும். மறந்து விடாதே! மனிதனின் சுயமே தெய்வீகம் அதை செல்வத்தால் வாங்க முடியாது.

செல்வத்தை போல் அதை குவிக்க முடியாது. செல்வன் தனது தெய்வீகத்தை இழந்து செல்வத்தை தழுவிக் கொண்டிருக்கின் றான். இன்றைய இளைஞனோ தெய்வீகத்தை உதறி விட்டு சுய நல த்தையும் மகிழ்ச்சியையும் தேடிக் கொண்டிருக்கிறான். வயல் வெளி யிலிருந்து திரும்பி வந்து மனைவியோடும், குழந்தைகளுடன் நேரத்தை கழிப்பதுபோல் எல்லா குடும்பங்களிலும் நிகழ வேண்டும். இதுவே இன்பத்தின் முற்றுகை.

வருங்கால சந்தத்திக்கும் இதுவே பொக்கிஷமாக விளங்க வேண்டும். பொன்னையும் பொருளையும் சேகரிப்பதிலேயே செல்வன் செலவழிக்கும் வாழ்க்கை உன்மையில் கல்லறையில் புழுக்கள் நெளிவதைப் போன்றது. அது பயத்தின் அறிகுறி, இனிய ஏழை நண் பனே! நீ சிந்தும் கண்ணீர் துளி செல்வனின் சிரிப்பை விட புனித மானது. அவனது கேலி, கிண்டலை விட இனிமையானது. உனது கண்ணீர் வெறுப்பென்றும் வியாதியை குணமாக்கும்.

இதயம் முரிந்தவர்களின் துன்பத்தை பகிர்ந்து கொள்ளக் கற்றுத் தரும் தெய்வத்தின் கண்ணீர்த் துளி, செல்வத்திற்காக நீ விதைத்த வலிமையை எதிர்காலத்தில் நீ அறுபடை செய்வாய். ஆரம்பித்த இடத்திற்கே எல்லாம் வரவேண்டும். இது இயற்கையின் சட்டம். உனது சோகம் ஒருநாள் மகிழ்ச்சியாய் மாறும். சொர்க்கத்தின் கட்டளையால், சோகத்தையும் வறுமையையும் காதல், சமத்துவம் ஆகியவற்றின் பாடங்களாய் எதிர்கால சந்ததி படிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏமாற்றத்தினால் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்பு உணர்ச்சியே தனி மனித சோகங்களுக்குக் காரணமாகின்றது. ஒருவருக்கு ஒருவர் ஒத்துப்போக முடியாமையில் இருந்து பெரிய போர்கள் நடப்பதுவரை இதுவே காரணமாகிறது.

எல்லா வகையான ஆக்கிரமிப்புக்கும் ஏமாற்ற உணரச்சியே ஆதாரக் காரணமாகிறது. ஆக்கிரமிப்பு உணர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் ஏமாற்றம்தான் காரணம். அதற்குக் காரணமான சூழ்நிலைகளை இங்கே பட்டியல் போட்டுக் காட்டுவது சாத்தியமில்லை. இருந்தாலும் ஏமாற்றத்தால் விளைகின்ற ஆக்கிரமிப்புகள் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம்.

குழந்தைகள் தவறான வழிகளில் நடந்து கொள்ளுதல், பள்ளிப் படிப்பில் தோல்வி ஏற்படுதல், இளமைப் பிராய தான் தோன்றிப் போக்குகள், மகிழ்ச்சியளிக்காத திருமணங்கள், வியாபாரத் தொல்லைகள், விரும்பத்தகாத மனித நடவடிக்கைகள், சிறுபான்மையினர் இனவெறி கொண்டோரின கட்டுப்பாடு அற்ற நடவடிக்கைகள், கலவரங்கள், புரட்சிகள், போர்கள் ஆகியவை சிறு உதாரணங்கள்.

ஏமாற்ற உணர்வோ இவற்றுக்கு எல்லாம் காரணமாக இருப்பதால், அதுபற்றி விசேட கவனம் செலுத்துவது அவசியமாகிறது. இந்த விசயம் குறித்து சிந்தனையை ஊக்குவிப்பது தான் இந்தப் புத்தகத்தின் நோக்கமே தவிர, இவ்வளவு பெரிய பிரச்சினைக்குத் தீர்வு கண்டுபிடித்துச் சொல்லுவது அல்ல. இந்த அத்தியாயத்தில் தீர்வுக்கான பகுதிகளைச் சுட்டிக்காட்டி; உங்கள் கவனத்தை அந்தத் திசையில் திருப்பி, பயன் உள்ள சிந்தனையைத் தூண்டுவதே நோக்கம் ஆகும்.

நம்முடைய நோக்கத்தை எளிமைப்படுத்த, ஆக்கிரமிப்பு உணர்வு ஏமாற்றத்தின் விளைவுதான் என்பதை முதலில் முழுமையாக ஏற்றுக் கொள்வோம். இந்த ஆக்ரமிப்பு உணர்வு எப்போதுமே வெளிபபடையாக்த் தெரியதில்லை என்பதையும், இது அழுத்தி வைக்கப்பட்டு ஆழ் மனதில் குடி கொண்டு பன்னர், மறைமுகமான வெறுப்பு, எதிர்ப்பு, தவறான போக்கு ஆகிய ஞாபகங்களில் வெளிப்படுவதையும் கவனத்தில் வைத்துக் கொள்வோம். ஆக்ரமிப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்த தாமல் இருப்பதற்குத்தான் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் ஆக்கிரமிப்பு உணர்வு நம்மிடம் இருந்து அப்புறப்படுத்தப்படுவதில்லை. அது ஆழ் மனதில் அடக்கி வைக்க பபட்டு, அப்புறப்படுத்தப்படாமல் இருக்கும் போது, அளவிட முடியாத தீமைகளை செய்யயக் கூடியதாக ஆகிவிடுகிறது. இன்னும் சற்றுக் கவனமாகப் பார்ப்போம்.

குழந்தையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறோம். அப்படி எதற்குச் செய்கிறோம என்று அறிந்து கொள்ளுகின்ற சக்தி அதற்கு இருக்காது. ஆகவே அது ஏமாற்ற உணர்வைப் பெறுகிறது. சாதாரணமாக அதற்கு நாம் கற்பிக்கும் நல்ல பழக்கங்கள் கூட அதனிடம் ஏமாற்ற உணர்வை ஏற்படுத்தி மிக அதிகமான பிடிவாதத்தைத் தோற்றுவிக்கிறது. இரண்டு வயதிற்கும் நான்கு வயதிற்கும் உட்பட்ட குழந்தைகளிடம் இதன் உச்சக்கட்டத்தைப் பார்க்க முடியும்.

குழந்தை வளர்ந்துபெரியவனாகும்போது, குடும்பம், பள்ளிக்கூடம், சமுதாயம் ஆகியவற்றில் சிலவகை ஏமாற்றங்களுக்கு ஆளாகிறது. ஒவ்வொரு ஏமாற்றமும் ஆக்கிரமிப்பு உணர்வை அதனிடம் தூண்டுகிறது. சில வெளிப்படலாம்: வேறு சில ஆழ் மனதில் புதைந்து போகலாம்.

இளைஞர்களுக்கு முதியவர்களின் அனுபவம் இல்லாததால், சமுதாய வாழ்க்கையில் முதியவர்களைப் போல அவர்களால் பங்கு பெற முடியாமல் போய் விடுகிறது. மற்றபடி அவர்கள் முதியவர்களுக்கு இணையான திறமை படைத்தவர்களே.

பதினைந்து வயதுடைய பையன்களையும் பெண்களையும் முதியவர்கள், வயது வந்தவர்களாக ஏறறுக் கொள்வதில்லை. வயது வந்தவர்களுக்குரிய மரியாதையும் அவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. அவர்கள் இன்னமும் வளர்ச்சி பெறவில்லை என அவர்களுக்கு அடிக்கடி சுட்டிக் காட்டப்படுகிறது. அவர்களின் நடவடிக்கைகளுக்கு வரம்பு கட்டப்பட்டு விடுகிறது. அவர்களின் சுதந்தரம் அனுமதிக்கப்படுவதில்லை. குழந்தைகளாக இருந்த போது அவர்களுக்கு இருநத கட்டுப்பாடுகள் நீடிக்கின்றன.

இவை எல்லாம் ஓரளவுக்குத் தேவைதான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இவை நடைமுறைப்படுத்தப்படும் விதம் பற்றி தான் நாம் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். வயது வந்த ஒரு இளைஞனை குழந்தை போல நடத்துவது அது எவ்வளவு அவசியமானதாக இருப்பினும் - நோக்கம் எவ்வளவு சிறந்ததாக இருப்பினும் - அது சம்பந்தப்பட்டவர்களும் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆக்ரமிப்பு உணர்ச்சி ஏமாற்றத்தின் விளைவாகவே ஏற்படுகிறது.

இப்போது நம்முடைய கவனத்தை மகிழ்ச்சி அற்ற திருமணங்களின் மீது திருப்புவோம். பல விவகாரத்துகளுக்கு என்ன காரணம்? ஏமாற்றமே காரணம் என்று திருமணம் சம்பந்தப்பட்ட ஆலோசகர்கள் கூறுகிறார்கள். இம்மாதிரி பெரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்ல நான் முயற்சிக்கப் போவதில்லை. தீர்வு காண வாய்ப்புகள் என்ன என்பதைக் குறித்து உங்கள் கவனத்தைத் திருப்பி சிந்திக்க வைப்பதுவே நோக்கம்.

வாழ்க்கையின் வேறு பகுதிகளுக்கும் ஏமாற்றும் சென்று மிகப் பெரிய நாசத்தை விளைவிக்கிறது. வர்த்தகத்தில் உள்ள சிக்கல்கள், தொடர்புகள், போட்டிகள், பேராசைகள் போன்றவை ஏமாற்றத்தின் பல வகைகளும் குடிகொள்ளும் இடமாகி விடுகிறது. வியாபாரப் போட்டி ஆக்கிரமிப்பு மனப்பான்மையினை உருவாக்கி விடுகிறது.

சமுதாயத்தின் உயர்நிலைகளைக் கைப்பற்றுவதற்கு உங்களுக்குள்ள பேராசை, உங்கள் தொழிலில் ஊழியர்கள் பல்வேறு காரணங்களுக்காக மேற்கொள்ளுகின்ற வேலை நிறுத்தங்கள் ஆகிய பலவும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி, ஆக்கிரமிப்பு மனப்பான்மையினைப் பெரிதாக்கி விடுகிறது. நரம்புத் தளர்ச்சி, குடல்புண், மாரடைப்பு போன்றவற்றிற்கு வர்த்தகப் பிரமுகர்கள் ஆளாவதில் வியப்பில்லை.

தொழில் துறையில், அதன் அமைப்பு ரீதியாகவே உருவாகின்ற இவற்றை ஒழிப்பதற்கோ, ஏன் குறைப்பதற்கோ கூட சுலபவழி எதுவும் இல்லை. ஏனெனில் தொழில் என்பது ஒரு போட்டி ஆக்கிரமிப்பு, போராட்டங்கள் - சில சந்தர்ப்பங்களில் தொழில் நடைபெறுவதற்கே இவை தேவைப்படக் கூடும்.

இருந்த போதிலும் தொழிலில் ஏற்படுகின்ற ஏமாற்றங்களை எந்த அளவுக்குத் தவிர்க்க முடியுமோ அந்த அளவுக்குத் தவிர்ப்பது ஒரு வழி. இதைச் செய்யாவிட்டால் தொழிலில் ஏற்படுகின்ற இறுக்கம் தொழிலையே சின்னாபின்னப்படுத்தி விடும். ஏமாற்றத்தைக் குறைத்துக் கொள்ளுவதின் மூலமாகவும் அல்லது ஏமாற்றத்தை ஆக்கிரமிப்பு அல்லாத வழிகளில் திருப்புவதன் மூலமாகவும் மிகுதியான பலன்களைப் பெற முடியும்.

ஏற்கெனவே தொழில் போட்டிகளைத் தொழிலுக்குரிய நியாயங்கள் போல் தொழில் துறையினர் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். தொழில் துறை நிர்வாகிகள் தொழிலில் நடக்கின்ற வாழ்க்கைப் போராட்டமாக இதை வர்ணிக்கிறார்கள்.

உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறுபான்மையினர் ஈடுபடுகின்ற கலவரங்களை ஏமாற்றத்தின் விளைவாகத் தோன்றுகின்ற ஆக்கிரமிப்பு என்று குறிப்பிடலாம். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவி வருகின்ற ஏமாற்றம குரோத மனப்பான்மையாகவும், ஏற்க முடியாக கோரிக்கைகளாகவும் உருப்பெற்று விடுவதும் உண்டு.

இதன் விளைவாக தலைமைகளும் உருவாகச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இப்படி உருவாகும தலைமைகள் பொறுப்புணர்ச்சியுடன் அகிம்சை வழிகளை உபதேசிப்பதும் உண்டு. இன்னும் சில தலைவர்கள் வன்முறைக்குத் தூண்டி விட்டு அதன் மூலம் தங்களுடைய தலைமை பலத்தை நிரூபிக்க முயல்வதும் உண்டு.

[illegible] இருப்பதையும் மறுப்பதற்கில்லை. ஏமாற்றத்திற்கான காரணங்களை நீக்கி, தேவையான உதவிகளைச் செய்வதும் அவசியமே. ஆனால் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன் வைத்து. அவை நிறைவேற்றப்படாவிட்டால் வன்முறையில் இறங்குவோம் என சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை பயமுறுத்தும்போது, பெரும்பான்மையினர் சொல்ல முடியாத துயரங்களுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாகின்றனர். ஆக்கிரமிப்பு, எதிர் ஆக்கிரமிப்பில் போய் முடிகிறது. சமூகக் குழப்பங்கள், உள்நாட்டுப் போர்கள் ஆகியவை ஏற்படவும் காரணமாகி விடுகின்றன. அரசியல் ஆதாயங்களுக்காக தற்காலிக நிவாரணங்கள் அளிக்கப்படலாம். எதிர் ஆக்கிரமிப்பு உணர்ச்சி இதனால் ஓரளவுக்குக் குறையலாம்.

தேசிய உணர்ச்சி, இன உணர்ச்சி ஆகியவை ஆதிக்க உணர்ச்சியாக விஸ்வரூபம்எடுக்கும்போது, மற்ற நாடுகளிடம் ஏமாற்றங்களைத் தோற்றுவிக்க அது காரணமாகி விடுகிறது. இந்த ஏமாற்றங்களும் ஆக்கிரமிப்பு உணர்ச்சிகளாக வடிவெடுக்கின்றன. இந்தப் போக்குகள் விஷச் சக்கரம் போலத் தொடர்ந்து பல தீமைகளுக்குக் காரணமாகின்றன. இந்தப் போக்குகள் அறிவுக்குப் பொருந்தாதவை என்பதோடு, தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

இப்படி நான் சொல்லுகின்றபோது குழந்தை வளர்ப்பில் அவர்களின் மனம் போனபடி அனுமதிப்பதையோ ஆதரிப்பதாக அர்த்தமில்லை. சுயக் கட்டுப்பாடும், தேவைப்பட்டால் வெளிக்கட்டுப்பாடும் நல்ல நடத்தையை உருவாக்கக் கூடியவை என்கிற என்னுடைய நம்பிக்கையினை நான் வெளிப்படுத்துவதாகவே கருத வேண்டும்.

ஏமாற்றத்தினால் விளையும் ஆக்கிரமிப்பு உணர்வை பயமுறுத்தலுக்குப்பயன்படுத்துவதை நான் ஏற்கவும் இல்லை. மதிக்கவும் இல்லை. இது குழந்தைகளில் இருந்து பெரியவர் வரை அனைவருக்குமே பொருந்தும். "நான் விரும்புவதைச் செய்வதற்கு என்னை அனுமதிக்கா விட்டால் ஏமாற்றம் ஏற்பட்டு அதன் விளைவாக ஆக்ரமிப்பு உணர்ச்சியை வெளிப்படுத்துவேன்" என்கிற எவரிடம் இருந்தாலும் அதை ஏற்க முடியாது.

எல்லா சந்தர்ப்பங்களிலும் ஏமாற்றம்தான் ஆக்ரமி[illegible] உணர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. சில சந்தர்ப்பங்களில் ஆக்ரமிப்பைச் செய்வதற்கு ஏமாற்றத்தை ஒரு முகாந்திரமாகச் சொல்லுகின்ற வழக்கமும் இருக்கிறது.

ஆகவே, ஏமாற்றத்தை அப்புறபபடுத்துவது எல்லா சந்தர்ப்பங்களிலுமே சிறந்த தீர்வாக இருக்கும் என்று சொல்ல முடியாவிட்டாலும், பல வேளைகளில் இது பயனுடையதாக இருப்பதால், ஏமாற்றத்தை அப்புறப்படுத்த என்ன செய்யலாம் எனறு நாம் யோசிக்கலாம்.

ஏமாற்றத்தை தவிர்ப்பதோ அல்லது நீக்குவதோ, பொது அறிவுக்கு ஏற்ற முறையில் கீழ்க்கண்டவாறு அமையலாம்.

1.முதலில் ஏமாற்றத்தை ஏற்படுத்தாதீர்கள். தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிக்காமலும், சொந்த கோபதாபங்களை பிறர் மீது திணிக்காமலும் பார்த்துக் கொள்ளுங்கள்.

அ) தேவைக்கதிகமாக ஒரு தனி நபரை அல்லது குழுவை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயலாதீர்கள்.

ஆ) மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு தடை செய்வதற்கு முயற்சிக்காதீர்கள். நியாயமான லட்சியத்தை நோக்கி அவர்கள் செல்லுவதற்கு முட்டுக்கட்டைப் போடாதீர்கள்.

இ) மற்றவர்களோடு, முரண்பட்டு வாதம் புரியாதீர்கள். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் மௌனம் மிகவும் பயன் உடையதாக இருக்கும்.

ஈ) மற்றவர்களைத் தொல்லைப்படுத்தாதீர்கள். அப்படிச் செய்வதன் மூலம் உங்களுடைய ஏமாற்றத்தை வெளிப்படுத்துவதாகத்தான் அர்த்தம்.

உ) உங்களுடைய எண்ணத்தை வெளிப்படையாக மற்றவர்களின் மீது திணிக்காதீர்கள். உங்கள் எண்ணத்தை மற்றவர்கள் ஏற்க வேண்டுமானால், நீங்கள் சொல்வது தான் சரி என்று அவர்கள் எண்ணுகின்ற சூழ்நிலையினை நீங்கள் உருவாக்க வேண்டும்.

ஊ) மற்றவர்களைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். கேலி செய்யாதீர்கள். புகழைக் குறைக்க முயலாதீர்கள். ஒவ்வொருவனும் தான் பாராட்டப்பட வேண்டும். மற்றவர்கள் தன்னைப் பற்றி உயர்வாக நினைக்க வேண்டும் என்றுதான் எண்ணுகிறான்.

சிறுவர்ளிலிருந்து பெரியவர்கள் வரை ஏமாற்றம் - ஆக்கிரமிப்புச் சக்கரம் எப்படி சக்தியுடன் வேலை செய்கிறது என்பதை இந்த அத்தியாயத்தில் எடுத்துக்காட்ட முயன்றிருக்கிறேன். ஒரு சில பக்கங்களில் பல் பிரச்சினைகளுக்கும் தீர்வைச் சொல்லுவது முடியாத காரியம். இந்தப் புத்தகத் தலைப்புக்கு நியாயம் வழங்கும் விதத்தில் முடிந்த அளவுக்கு முக்கியமான கருத்துகளைச் சொல்லியிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடது, வலது கண் துடித்தால் என்னவாகும்?



சிலருக்கு ஒரு கண் மட்டும் அடிக்கடி துடிக்கும். அவ்வாறு துடிக்கும் போது, ஒருசில மூடநம்பிக்கை களானது மக்கள் மத்தியில் உள்ளது. அது என்னவென்றால், ஆண்களுக்கு வலது கண் துடித்தால், நல்லது நடக்கும், அதுவே பெண்களுக்கென்றால் தீமை ஏற்படும் என்றும், ஆண்களுக்கு இடது கண் துடித்தால் கெட்டது நடக்கப் போகிறது, அதுவே பெண்களுக்கானால் நல்லது நடக்கும் என்று நம்புகின்றனர். உண்மையில் இது மிகப்பெரிய முட்டாள்தனமான ஒரு மூடநம்பிக்கை என்று தான் சொல்ல வேண்டும். ஆம், நல்லது கெட்டது நடப்பதற்கும், கண்களுக்கும் எப்படி தொடர்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சிந்திக்காமல், குருட்டுத்தனமாக பலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் இந்த மாதிரி கண்கள் துடிப்பதற்கு, உடலில் ஒருசில பிரச்சினைகள் உள்ளது என்பதற்கான அறிகுறியாகும். அதுமட்டுமல்லாமல், கண்கள் துடிப்பதற்கு மையோகிமியா (myokymia) என்று பெயர்.

இத்தகைய கண் துடிப்பு அல்லது தசைச் சுருக்கம் ஏற்படுவதற்கு அதிகப்படியான மன அழுத்தம், தூக்கமின்மை, அதிகமாக காப்ஃபைன் உட்கொள்ளுதல் மற்றும் பல காரணங்களாகும். சிலருக்கு கண் துடிப்பானது ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் கூட இருக்கலாம்.

சரி, இப்போது இந்த கண் துடிப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் என்னவென்று பட்டியலிட்டுள்ளோம். அதைப் படித்து தெரிந்து கொண்டு, கண்கள் துடித்தால் என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்து கண் துடிப்பில் இருந்து விடுபடுங்கள்.

**மன அழுத்தம்**

மன அழுத்தமானது அதிகம் இருந்தாலும் கண்கள் துடிக்க ஆரம்பிக்கும். எனவே மன அழுத்ததைக் குறைக்கும் செயல்களில் ஈடுபட்டால், அடிக்கடி கண்கள் துடிப்பதை தவிர்க்கலாம்.

**தூக்கமின்மை**

மன அழுத்தம் அதிகம் இருந்தால், தூக்கமின்மை பிரச்சனையை சந்திக்க நேரிடும். இவ்வாறு சரியான தூக்கம் இல்லாவிட்டால், கண்களானது துடிக்கும்.

**கண்களுக்கு சிரமம்**

கண்களுக்கு அதிகப்படியான சிரமத்தைக் கொடுத்தாலும், கண்கள் துடிக்க ஆரம்பிக்கும். உதாரணமாக, படிக்கும் போது சரியாக தெரியாவிட்டால், அப்போது கண்களை பரிசோதித்து, அதற்கு கண்ணாடிகளை போடாமல், சிரமப்படுத்தி அப்படியே படித்து கண்களுக்கு சிரமம் கொடுத்தாலும், கண்கள் துடிக்கும். மேலும் நீண்ட நேரம் கணினி அல்லது கைபேசியைப் பார்த்துக் கொண்டே இருந்தால், கண்கள் களைப்படைந்துவிடும். இதனால் கண்களுக்கு அழுத்தம் ஏற்பட்டு துடிக்க ஆரம்பிக்கும். ஆகவே கணினி அல்லது கைபேசி பயன்படுத்தும் போது, சரியான கண்ணாடிகளை அணிந்து கொண்டு பயன்படுத்தினால், கண் துடிப்பில் இருந்து விடுபடலாம்.

**காப்ஃபைன்**

அதிகமாக காப்ஃபைன் உள்ள பொருள்களான கோப்பி, தேனீர் போன்றவற்றை அருந்தினாலும், கண்கள் துடிக்க ஆரம்பிக்கும். எனவே இத்தகைய பொருள்களை அதிகம் பருகுவதை தவிர்ப்பது நல்லது.

**கண் வறட்சி**

கண் வறட்சியினாலும், கண்கள் துடிக்க ஆரம்பிக்கும். போதிய தண்ணீர் பருகாமல் இருப்பது, கணினி முன் அதிக நேரம் இருப்பது, காப்ஃபைன் உணவுப் பொருள்களை அதிகம் உட்கொள்வது, மன அழுத்தம், சோர்வு போன்றவற்றால் கண்களானது வறட்சியடைகிறது. ஆகவே இத்தகைய செயல்களை தவிர்த்தால், கண் வறட்சியில் இருந்து விடுபடலாம்.

**ஊட்டச்சத்து குறைபாடு**

உள்ள தசைகள் துடிக்க ஆரம்பிக்கும் என்று ஆய்வுகள் சொல்கிறது. அதிலும் மக்னீசியம் குறைபாடு இருந்தால், கண்கள் துடிக்கும் என்று கூறுகிறது. ஆகவே சரியான ஊட்டச்சத்து நிறைந்த உணவுமுறைகளை மேற்கொண்டால், கண்கள் துடிப்பதை தவிர்க்கலாம்.

**அலர்ஜி**

சிலருக்கு கண் அலர்ஜிகள் ஏற்படும். கண் அலர்ஜிகளான கண்களில் அரிப்பு, வீக்கம், கண்கள் சிவப்பாகி கண்ணீர் வடிதல் போன்றவற்றின் போது, கண்களை தேய்த்தால் வெளிவரும் ஹிஸ்டமைன் கண் திசுக்களில் நுழைந்து, கண்களை துடிக்க வைக்கும். ஆகவே கண் அலர்ஜி இருந்தால் தேய்க்காமல் கண் மருத்துவரை அணுகி, சரியான மருந்துகளை எடுத்துக் கொண்டால், கண் துடிப்பில் இருந்து விடுபடலாம்.




# குழந்தைகள் தவிர்க்க வேண்டிய மாத்திரைகள்



குழந்தைகளை நல்ல படியாக பராமரித்து வளர்ப்பது என்பது பெரிய காரியமாகும். அவர்களை நோய் நொடி அண்டாமல் ஆரோக்கியமாக இருக்க, ஒவ்வொரு தாயும் அவர்களை கண்ணும் கருத்துமாக பாதுகாக்க முற்படுகிறார்கள். அப்படி இருந்தும் பல காரணங்களால் குழந்தைகளுக்கு கிருமிகளினால் பல நோய்த்தொற்று ஏற்படுகிறது.

அதன் விளைவாக காய்ச்சல், சளி, இருமல் என்று பல அவஸ்தைக்கு ஆளாகின்றனர். அப்படிப்பட்ட நேரத்தில், அவர்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட சில மருந்துகளை கொடுக்கின்றோம். குறிப்பாக கைக்குழந்தைகளுக்கும், தவழும் குழந்தைகளுக்கும் மருந்துகள் கொடுக்கும் முன், கட்டாயம் மருத்துவரிடம் ஆலோசனையை பெற வேண்டும். ஏனெனில் குழந்தைகளுடைய நோய் தடுப்பாற்றல் சக்தியானது மிகவும் குறைவாக இருப்பதால், குழந்தைகளை கிருமிகள் தாக்கும் அபாயம் அதிகமாக உள்ளன. அதன் விளைவாக நோய்கள் வரக்கூடும். இதற்காக மருந்து கொடுக்கும் போது, பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

அதுவும் அத்தகைய மருந்துகள் இயற்கையான அல்லது மூலிகை மருந்தாக இருந்தாலும் கூட கவனம் வேண்டும். பொதுவாக தவழும் குழந்தைக்கு அடிக்கடி சளி மற்றும் இருமல் பிடித்துக் கொள்ளும். ஆனால் 6 வயதிற்கு குறைவாக இருக்கும் குழந்தைகளுக்கு, பெரியவர்கள் சாப்பிடும் சளி மற்றும் இருமல் மருந்தை கொடுப்பது பெரும் ஆபத்தை விளைவிக்கும். ஏனென்றால், மருந்துகளானது குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காமல், குழந்தைக்கு மருந்தானது திறம்பட செயல்படவில்லை என்று சிலர் அளவுக்கு மீறி மருந்தைக் கொடுத்துவிடுகின்றனர். ஆகவே இது குழந்தைகளுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது. இப்போது குழந்தைகளுக்கு கண்டிப்பாக் கொடுக்கக்கூடாத 8 வகையான மருந்துகளை கீழே கொடுத்துள்ளோம். அதைப் படித்து, குழந்தைகளுக்கு அவற்றை கொடுப்பதை அறவே தவிர்த்துவிடுங்கள்.

**அஸ்பிரின் (Aspirin)**

மருத்துவர் பரிந்துரைக்காவிட்டால், அஸ்பிரின் அல்லது அஸ்பிரின் கலந்த மருந்துகளை குழந்தைகளுக்கு கொடுப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அஸ்பிரினால், குழந்தைகளின் சிறுநீரகமும், மூளையும் பாதிப்படையும். எனவே மருந்துக் கடைகளில் வாங்கும் அனைத்து மருந்துகளிலும் அஸ்பிரின் இருக்காது என்று கற்பனை செய்து கொள்ளாதீர்கள்.

எப்போதும் மருந்து வாங்கும் முன், முதலில் அதன் லேபிளை நன்கு படித்த பின்னரே வாங்க வேண்டும். மேலும் சாலிசிலிக் அல்லது அசிடைல்சாலிசிலிக் அமிலம் என்ற பெயரைக் கண்டால், அதுவும் அஸ்பிரினையே குறிக்கும். காய்ச்சல் என்றால், 6 மாதங்களுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு பரசிட்டமோல் (paracetamol) அல்லது இபுப்புரோஃபெனைக் (Ibuprofen) கொடுக்கலாம்.

**இருமல் மற்றும் சளி மருந்துகள்**

குழந்தை மருத்துவத்தின் அமெரிக்க அக்கடமியில் உறுப்பினர்களாக இருக்கும் குழந்தை மருத்துவர்கள், கண்டிப்பாக குழந்தைகளுக்கு சளி மற்றும் இருமல் மருந்துகளை பரிந்துரைக்கமாட்டார்கள். ஏனெனில் அவை சளி மற்றும் இருமலை குணப்படுத்துவதில்லை. சில நேரம் அதிக அளவில் கொடுப்பதால், அது ஆபத்தை கூட விளைவிக்கும். அதிலும் தூக்க கலக்கம், வயிற்று வலி, சொறி, அதிகமான இதயத் துடிப்பு போன்றவற்றை ஏற்படுத்தும். மேலும் ஒவ்வொரு வருடமும் வீட்டிலேயே சளி மற்றும் இருமல் மருந்து கொடுப்பதால் தான், ஆயிரக்கணக்கான குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

**காலாவதியான மருந்துகள்**

காலாவதியான மருந்துகளை உடனடியாக மருந்து பெட்டியில் இருந்து தூக்கி எறிந்து விட வேண்டும். மேலும் நிறம் மாறிய மருந்துகளையும் குப்பையில் போட வேண்டும். ஏனெனில் காலாவதியான மருந்துகளின் திறன் செயலிழந் திருக்கும். மேலும் அது உயிருக்கே பெரும் ஆபத்தையும் விளைவிக்கும்.

**கூடுதலான அசிடமினோஃபென்**

காய்ச்சல் மற்றும் உடம்பு வலியை குறைக்கும் மருந்துகள் பலவற்றிலும் அசிடமினோஃபென் (acetaminophen) கலக்கப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட மருந்துகளை குழந்தைகளுக்கு கொடுக்கும் முன் கவனமாக இருக்க வேண்டும். ஒருவேளை அதனை பற்றி சரியான அறிவு இல்லையென்றால், உடனே மருத்துவரை கலந்தாலோசிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை சேரா வாழ்வும் கரை புரளும் துயரும்

-கருமேகன்-





படகு மூலம் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு வரும் எவருக்கும் குடியுரிமை வழங்கப்படமாட்டாது. வருபவர்களில் உண்மையான புகலிடக்கோரிக்கையாளர்கள் இனங்காணப்பட்டால் அவர்கள் பப்புவா. நியூகினியக்கு நிரந்தரமாக அனுப்பப்படுவார்கள் என்று இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் பிரதித் தூதுவர் சொன்யா கொப்பெ தெரி வித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது - படகு மூலம் ஆஸ்திரேலியா வருகின்றவர்களில் அகதியாக இனங்காணப்படாதவர்கள் உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

இந்தப் புதிய சட்டதிட்டங்கள் கடந்த ஜூலை 19 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே சட்ட விரோதமான முறையில் பயணத்தை மேற் கொண்டு ஆஸ்திரேலியாவிற்கு வருவதை கைவிடுமாறும் ஆள் கடத்தல்காரர்களிடம் பணத்தைக் கொடுத்து இழக்க வேண்டாம் என்றார்.

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகுகள் மூலம் சென்றவர்களில் இதுவரை 1500 இற்கும் அதிகமானவர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்திருப்பதாக ஆஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன. 2000 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 756 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இவர்களில் 363 பேர் கடலில் மூழ்கியிருப்பதுடன் 350 பேர் தொடர்ந்து காணாமற்போனவர்களின் விவரங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக ஆஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு ஜூலை வரையான காலப்பகுதியில் தொழிற்கட்சியின் ஆட்சிக் காலத்தில் 877 சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த உயிரிழப்புக்களில் 15 உயிரிழப்புக்கள் தற்கொலையால் இடம்பெற்றவையென வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. 862 பேர் சட்ட விரோதமான படகுப் பயணம் மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்டு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் புகலிடக் கோரிக்கையாளர்களின் வருகை காணப்படுவதாக செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன. இருந்த போதும் ஆஸ்திரேலியாவுக்குள் நுழையும் சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சரியாக கணிப்பிடப்படவில்லை.

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருவோருக்கு மூன்று நிபந்தனைகளுடன் தற்காலிகமாக விஸா வழங்கப்படுவதனால் தமிழர்களுக்கு உயிரிருந்தும் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஆஸ்திரேலியாவில் இருக்கும் புகலிடக்கோரிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். தொழில் செய்ய முடியாது. குடும்பத்தை ஆஸ்திரேலியாவுக்கு எடுக்க முடியாது. மற்றும் பணம் அனுப்ப முடியாது. ஆகிய மூன்று நிபந்தனைகளுடனேயே தற்காலிக விஸா வழங்கப்படுகிறது.

13.08.2013ஆம் திகதிக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்தவர்களுக்கே இவ்வாறான நிபந்தனைகளுடன் தற்காலிக விஸா வழங்கப்படுகின்றது. ஆனால் தற்போது ஆஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு திணைக்களமானது தனது சட்டத்தில் பெரிய திருத்தங்களை ஏற்படுத்தி உள்ளது. இந்த திருத்தங்களுடன் வழங்கப்படும் தற்காலிக விஸாவானது தமிழர்களுக்கு உயிரிருந்தும் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆள் கடத்தல் சம்பந்தமான சட்டங்களை ஒருங்கிணைப்பது பற்றிய மாநாடொன்று அண்மையில் இடம்பெற்றது. இதன் போது இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டத்தில் கடத்தல் பற்றிய திருத்தங்களின் நிலைமை. ஆள் கடத்தலுக்கு எதிரான சட்ட அமுலாக்கல் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், ஆள் கடத்தல், சட்டங்கள் மேலும் ஒருங்கிணைப்பதற்கு ஆஸ்திரேலியாவும், இலங்கையும் இணைந்து பணியாற்றக்கூடிய பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் போன்ற விடயங்கள் குறித்து இரு நாடுகளிலும் முக்கியஸ்தர்கள் கலந்துரையாடினர்.

2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கைச்சாத்திடப்பட்ட இடம்பெயர்வோரைக் கடத்துவதற்கெதிரான ஒத்துழைப்பு பற்றிய ஆஸ்திரேலிய- இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான சட்ட அமைப்புக்களில் உள்ள குறைபாடுகளை உபயோகிப்பதை தடுக்கும் பொருட்டு ஆள்களைக் கடத்துவதற்கெதிரான சட்ட வரைபுகளை பலப்படுத்தி ஒருங்கிணைக்கவென இரு நாடுகளும் இணைந்து பணியாற்றி வருகின்ற நிலையிலும் ஆள் கடத்தல் அதிகரித்து வருவதாக ஆஸ்திரேலிய அரசு அண்மையில் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

65 உலக நாடுகளில் 140.000 வரையான தமிழர்கள் அகதி தஞ்சம் கோரியுள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது. போர்க் காலப் பகுதியில் இலங்கையில் இருந்து தப்பியோடி வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்து கொண்ட தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவுக்குள் நுழைகின்ற மக்கள் நான்கு ஆண்டு காலம் வரை தடுத்து வைக்கப்படுகின்றனர் என தமிழர்கள் அறிந்துள்ள போதிலும் தமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என இவர்கள் நம்ப வைக்கப்படுகின்றனர். ஆஸ்திரேலியா மட்டும் அல்ல கல்வி மற்றும் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்காக கனடா. லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்கின்றனர்.

போர் தின்ற வாழ்வில் எஞ்சியிருக்கும் உயிர் மூச்சு. வாழ்வை முடிக்கும் வரை கனத்துக் கொண்டுதான் இருக்கும் போலிருக்கிறது. முடிவே இல்லாத தமிழர் பிரச்சினைக்குள் வாழ்வு முடிந்து விடும் என்பது தெரியும். ஆனால் அந்த வாழ்வை இலங்கையில் இருந்து எப்படி நகர்த்துவது என்று தான் தெரியாமல் இருக்கிறது. பட்ட துன்பங்கள் இனியாவது ஆறுமா? ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்பவர்களுக்கு மரண பயத்தை விட எப்படி வாழ்வது என்ற பயம் தான் கூடுதலாக உள்ளது. அதனால் தான் ஆழக்கடல் என்று தெரிந்தும் படகேறுகிறார்கள். அந்தப் படகு கரைபோய்ச் சேருமோ, எத்தனை பேர் அந்தப் படகில் செல்ல முடியும். என்று கூடப் பார்க்காமல் பயணிக்கிறார்கள். இதனால் நடுக்கடலில் படகு விபத்து ஏற்பட்டு மூழ்குகிறது. தன் சுமை படகுக்குத் தெரியும். ஆனால் அதன் சுமை மக்களுக்கு தெரியாத அளவுக்கு அவர்களிடத்தில் நிம்மதியாக வாழ்வதற்கான சுமை அதிகமாகி இருக்கிறது போலும். அதனால் தான் நடுக்கடலில் உயிர் போனாலும் தொடர்ந்து தமிழ் மக்கள் ஆஸ்திரேலியாவுக்கு போவதற்கு என்ன காரணம் என்று அரசு ஆராயப் போவதில்லை .


சாகடிக்கப்பட்ட தமிழ் இனத்தில் எஞ்சியவர்கள் பிழைப்பதற்கான வழி தெரியாமல் இருக்கிறார்கள். தமிழர் போராட்டத்தை அழித்த சர்வதேசமே இப்பொழுது தமிழர் விடயத்தில் கண்டும் காணாமல் இருக்கிறது. போரினால் போன தமிழர் உயிர்கள் இப்பொழுது நடுக்கடலில் போகிறது. தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்கான ஒரு நிலம் வேண்டும். தமிழ் மக்கள் சொந்த மண்ணில் இடம் பெயர்ந்து வாழும் நிலையில் தாய் மண்ணை விட்டு அகதிகளாக வெளியேறுகின்றனர். இவற்றில் ஒன்று தான் கடல் வழியான ஆஸ்திரேலியப் பயணமாகும்.

தமிழ் மக்கள் தமது உயிரை பாதுகாக்கும் நோக்க த்திலேயே பாதுகாப்பற்ற கடலில் பயணத்தைத் தொடர்வதாக தெரிவிக்கின்றனர். எவ்வளவோ பிரச்சினைக்கு மத்தியிலும் பல லட்சக்கணக்காக பணத்தை கடனாகப் பெற்று ஆஸ்திரேலியா செல்கின்றனர்.

ஆஸ்திரேலியாவுக்கு அண்மையில் சென்ற படகு விபத்தில் சிறுவர்கள் அதிக அளவில் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 180 பேருடன் 208 பேர் இந்தோனேஷியாவில் இருந்து படகு மூலம் புறப்பட்டனர். படகு புறப்பட்டு 9 மணி நேரத்தின் பின் ஜாவாத் தீவுக் கூட்டத்துக்கு அருகில் கடல் அலையால் எத்துண்டு பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானது. படகில் 125 உயிர் காப்பு அங்கிகள் இருந்தமையால் அதனைப் பயன்படுத்தி தப்பிக்க முயற்சித்துள்ளனர். அந்த நேரத்தில் இந்தோனேஷிய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்ததால் மீனவரின் உதவியுடன் பெரும்பாலானவர்கள் தப்பித்தனர். இல்லாது போனால் 208 பேரும் கடலில் இறந்திருப்பார்கள்.

பண ஆசையில் அளவுக்கு அதிமாக பயணிகளை படகில் ஏற்றிக் கொண்டு சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா செல்கிற படகுகள் நடுக்கடலில் தத்தளித்த சம்பவங்கள் கூடுதலாக இடம்பெற்றுள்ளன. எனவே ஆழ்கடல் பயணம் உயிருக்கு ஆபத்தானது என்பதை தமிழ் மக்கள் உணர்வார்களா......?

## வித்தியாசம்



ஒரு உளவியல் நிபுணரும், ஒரு ஞானியும் சந்தித்துக் கொண்டார்கள். உளவியல் நிபுணர் கேட்டார். "என்னிடமும் மக்கள் கேள்விகளோடு வருகிறார்கள். உங்களிடமும் கேள்விகளோடு வருகிறார்கள். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?" என்று.


அந்த ஞானியோ, "நீங்கள் அவர்களின் கேள்விகளில் பயணம் செய்து புதிய கேள்விகளை உருவாக்குகிறீர்கள். நானோ அவர்களைக் கேள்விகளே அற்ற நிலைக்குக் கொண்டு செல்கிறேன். அது தான் வித்தியாசம்" என்றார்.

## கடவுள் வரும் வழி

ஒருவருக்கு அதிகமான கடவுள் நம்பிக்கை. அருகிலுள்ள அணை உடைத்ததாக செய்தி வந்தது. உடனிருந்தவர்கள் எல்லாம் ஊரைக் காலி செய்தார்கள். "கடவுள் என்னை காப்பாற்றுவார்" என்று சொல்லிப் பிரார்த்திக்கத் தொடங்கி விட்டார். ஒரு படகு வந்தது. அதிலிருந்தோர் அழைத்தனர். "கடவுள் காப்பாற்றுவார்" என்றார். பிறகு ஒரு மோட்டார் படகு வந்தது. அவர்களும் அழைத்தனர். "கடவுள் காப்பாற்றுவார்" என்றார். மூழ்கிச் செத்தார். வானுலகம் சென்றதும் கடவுளைக் கேட்டார், "என்னை ஏன் காப்பாற்றவில்லை?" கடவுள் கொன்னார் "இரண்டு படகுகள் அனுப்பினேனே, ஏன் ஏறிக்கொள்ளவில்லை?"வாய்ப்புகள் வழி தான் வருவார் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் களஞ்சியம்



## ஈரானிய கடலில் அழுகிய நிலையில் இராட்சத கடல் வாழ் உயிரினம்!

பாரசீக வளைகுடாவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இராட்சத கடல் வாழ் உயிரினம் தொடர்பில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஈரானிய கடற்படையினரே இதனை கண்டுபிடித்தனர்.

இந்த உயிரினத்தின் படங்கள் ஈரானிய இணையத்தளமொன்றில் வெளியாகியுள்ளது. பலர் இது ஒரு வகை திமிங்கிலமே எனத் தெரிவித்துள்ளனர். ஆராய்ச்சியாளர்களும் இதனையே தெரிவிக்கின்றனர். ஆனால் திமிங்கிலத்தின் எந்த இனத்தைச் சார்ந்தது என்பதை உறுதியாகக் கூற முடியாமல் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கினறனர்.கடலில் இத்தகைய மர்ம விலங்குகள் கண்டுபிடிக்கப்படுவதும், கரையொதுங்குவது இது முதன் முறையல்ல.

நியூசிலாந்து நாட்டின் பியுக்னா கடற்கரையொன்றில் இராட்சத கடல் வாழ் உயிரினமொன்று இறந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது.

## 25 விரல்களுடன் பிறந்த குழந்தை



இந்தியாவில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு தம்பதியினருக்கு 25 விரல்களுடன் அழகான ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. நல்ல சிவப்பு நிறத்தில் பிறந்த குழந்தையின் வலது கையில் 7 விரலும், இடது கையில் 6 விரலும், இரு கால்களிலும் தலா 6 விரலும் ஆக மொத்தம் 25 விரல்கள் இருப்பதைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## ஏப்ரலில் தூங்கியபெண் ஜூன் மாதம் கண்விழித்தார்!

லண்டனைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் கடந்த ஏப்ரல் மாதம் முதல்வாரத்தில் நித்திரைகொள்ளப்போனவர் கடந்த வாரம் தான் கண் விழித்தார். இரண்டு மாத காலம் அவர் அயர்ந்து தூங்கியதில் தன்னுடைய தேர்வுகளையும், பிறந்த நாளையும் தவறவிட்டு



விட்டார். ஸ்டேசி கம்போர்டு என்ற 15 வயது இளம் பெண் வெஸ்ட் மிட்லாண்டு மாகாணத்தில் உள்ள டெல்போர்டு பகுதியில் வசித்து வருகிறார். இவர் நரம்பு தொடர்பான நோயினால் பாதிக்கப்பட்டார்.

இதன் காரணமாக ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இரவில் நித்திரை கொள்ளச் சென்ற அவர் கண் விழிக்கவே இல்லை. இரண்டு மாதம் கழித்து ஜூன் முதல்வாரத்தில் திடீரென்று கண் விழித்தார். இந்த தூக்கம் தொடர்பான நோய்க்கு உலக அளவில் 1000 பேர் வரை பாதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்டேசியின் இரண்டு மாத நித்திரையினால் 9 பரீட்சைகளை தவறவிட்டு விட்டார். மேலும் தன்னுடைய பிறந்தநாளையும் கொண்டாட முடியாமல் போனதாக வருத்தத் துடன் தெரிவித்துள்ளார்.

## வாலுடன் பிறந்த அதிசய சிறுவன்



வாலுடன் பிறந்த அதிசய சிறுவன் அர்ஷத் அலி (வயது 12) பஞ்சாப் மாநிலம், பதேஹ்கர் மாவட்டத்தின் நபீபூர் என்ற கிராமத்தில் கடந்த 2001ம் ஆண்டில் பிறந்தான்.

இவர் பிறக்கும் போதே இடுப்பின் பின்பகுதியில்வால்போன்ற அமைப்பும், அதுமட்டுமில்லாமல் உள்ளங்காலில் தாமரை சின்னம் உள்ளிட்ட ஒன்பது தெய்வீக குறிகள் உள்ளன.

மருத்துவர்களிடம் இது குறித்து கேட்டதற்கு, அதனை அகற்றினால் அவனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கூறியுள்ளனர். எனவே வாலை அகற்றும் முடிவை தாத்தா கைவிட்டுவிட்டார். 7ம் வகுப்பு படிக்கும் இவன், வால் நீளமாக வளர்ந்துள்ளதால் சக மாணவர்களுடன் பழகவும், விளையாடவும் முடியாமல் மிகுந்த வருத்தத்துடன் உள்ளான்.

## பாரம் சுமக்கும் நாய்!



ஆஸ்திரேலியா சான் பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த ஜேக் என்ற நாய் ஒன்று அனைத்துப் பொருள்களையும் தலையில் சுமந்து எஜமானருக்கு வேலை செய்கிறதாம். இதன் தலையில் பிஸ்கட், புத்தகங்கள், மின்குமிழ், கடிகாரம், சமையல் பாத்திரம் என எதை வைத்தாலும் அதை கீழே விழுந்து விடாத படி சுமந்து எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்கிறது.

நடக்கும் போது தலையில் உள்ள பொருள் ஆடுவது இயல்பு ஆனால் அப்படி ஆடும் பொருள்களை கீழே விழுந்து விடாமல் சாமர்த்தியமாக கொண்டு செல்லுமாம் ஜேக்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் ஒரு டம்ளரில் தண்ணீர் வைத்து ஜேக்கின் தலையில் வைத்தால், ஒரு சொட்டு தண்ணீர் கூட சிந்தாமல் நடப்பதில் சாமர்த்தியசாலியான ஜேக்குக்கு முட்டையைக் கூட விழாமல் கொண்டு செல்லுமாம். இந்த ஜேக்கிற்கு போட்டியாக சீனாவைச் சேர்ந்த ஏப்ருத்திஸ் என்ற பூனையும் பொருள்களை தலையில் சுமந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## நடமாடும் நீச்சல் தடாகம்



ஜேர்மனின் எய்பன்ஸ்டொக் பகுதியில் வசிக்கும் 27 வயதான நபர் ஒருவர் தனக்கு சொந்தமான பழைய ஆறு காரை நடமாடும் நீச்சல் தடாகமாக மாற்றியுள்ளார்.

3 நண்பர்களுடன் சேர்ந்து நீச்சல் நடாகத்தை உருவாக்கியுள்ளார். நடமாடும் நீச்சல் தடாகத்தில் நகரை வலம் வருகிறார்.

இதனை அறிந்த பொலிசார் உருமாற்றம் செய்த வாகனங்களை வீதியில் செலுத்துவதற்கு அனுமதியளிப்பது குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

## ஜேர்மனில் 6Kg எடை கொண்ட குழந்தையைப் பெற்றாள் பெண்



ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இளம்பெண் சுகப் பிரசவத்தில் 6 கிலோ எடையுள்ள பெண் குழந்தையைப் பெற்றுள்ளார்.

அதிக எடை கொண்ட குழந்தையை பிரசவிக்க வேண்டும் என்றால் 'சிசேரியன்' அறுவைச் சிகிச்சையைத் தான் வைத்தியர்கள் செய்வார்கள். ஆனால், அறுவைச் சிகிச்சை செய்துக்கொள்ள விரும்பாத அந்த இளம்பெண் கடந்த சனிக்கிழமை இயல்பான முறையில் 13 1/2 பவுண்ட் (6 கிலோ 110 கிராம்) எடையுளள குழந்தையை பிரசவித்தார். இந்த குழந்தைக்கு ஜஸ்லீன் என பெயரிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக 2011ம் ஆண்டு பெர்லினில் 5.8 கிலோ எடையுடன் பிறந்த ஆண் குழந்தை தான் அதிக எடை கொண்டதாக கருதப்பட்டது.

அதற்கு முன்பாக 1879 ல் 10 கிலோ எடையில் ஒரு குழந்தை பிறந்து கின்னஸ் சாதனையைப் பிடித்தது. அந்த சாதனையை உலக அளவில் எந்த குழந்தையும் முறியடிக்கவில்லை. ஆனால் தற்போது பிறந்துள்ள ஜஸ்லீன் என்ற இந்த பெண் குழந்தை சதனையை முறியடித்துள்ளது.

## உணவு தரும் பறக்கும் தட்டு!





லண்டன் மாநகரில் "யோ சுசி (Yo Sushi)" என்ற ஜப்பானிய உணவகம், தனது வாடிக்கையாளர்களுக்கு தொலை தூரத்திலிருந்து ரிமோட் கன்ட்ரோல் மூலம் இயங்கும் பறக்கும் தட்டில் சுவையான பர்கர் மற்றும் பாயா உணவு வகைகளை பரிமாறுகின்றனர்.

இந்த பறக்கும் தட்டிற்குப் பெயர் "ஐ ட்ரே". இத்தட்டு மணிக்கு 25 கி.மீ வேகத்தில் சுற்றிப்பறந்து 50 மீட்டர் எல்லை வரையுள்ளவர்களிடம் செல்கிறது.

உணவு பரிமாறும் வேலையாட்கள, ஐபாட் எனப்படும் மொபைல் கருவி மூலம் பறக்கும் தட்டின் அசைவுகளை கண்காணித்து ஒழுங்குபடுத்துகின்றனர்.

சமையல் அறையிலுள்ள சமையற்காரர்கள், பறக்கும் தட்டில் பொருத்தப்பட்டுள்ள புகைப்படக் கருவியின் மூலம் உள்ளிருந்தவாறே வெளியே நடப்பவற்றைக் கண் காணித்து சுவையான உணவுகளை தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி:01



# பாரதியாரும் பாவையரும்.

கலாநிதி - அகளங்கன்

**பெ**ண்கள் கல்வி கற்க வேண்டும் என்ற கருத்திற்கு முரண்பாடான கருத்தை, இன்றைய, உலகில் யாராவது கொண்டிருப்பார்கள் என்று நான் கருதவில்லை.

எந்த மொழியை, எந்த நாட்டைச் சேர்ந்த பெண்களாக இருந்தாலும் அவர்கள் கல்வி கற்க வேண்டியது ஒரு கட்டாயக் கடமை. பெண் கல்வி எல்லா இடங்களிலும் வலியுறுத்தப்பட வேண்டியதே.

ஆனால் கல்வி கற்ற பெண்களின் நடத்தை பற்றிய கருத்திலே தான் பலருக்கிடையேயும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக.
(கல்வி :39)

என்றார் தமிழ் மறை தந்த வள்ளுவப் பெருந்தகை. குற்றங் குறைகள் சந்தேகங்கள் அற்றுப் போகும் படியாகக் கற்க வேண்டும்.

எதைக் கற்க வேண்டுமென்றால், கற்க வேண்டியவைகளைக் கற்க வேண்டும். அதன்பின் கற்றபடி நடப்பது தான் கற்றவர்களின் கடமை.

தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் கற்கும் கல்விக்கும் அவர்களது பண்பாட்டுக்கும் அதிகம் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை.

அதாவது அவர்கள் கற்பவை கற்கவில்லை. முதலில் அவர்கள் நடப்பதற்கேற்ற கல்வியைக் கற்க வேண்டும். பின்பு கற்றபடி நடக்க வேண்டும்.

அவர்களின் நடத்தை தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ப அமைய வேண்டும் என்பது என் போன்ற பலரினதும் விருப்பமாகும்.

அதாவது தமிழ்ப் பெண்கள் தமிழ்ப் பெண்களாகவே கலவி கற்று, தமிழ்ப் பெண்களாகவே வாழ்க்கை நடாத்த வேண்டும் என்பது என் கருத்து.

இக்கருத்து இந்துப் பண்பாட்டோடு ஒட்டியதாக ஏற்கெனவே சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் வலியுறுத்தப்பட்டு, அதை நடை முறைப்படுத்துவதற்காக, யாழ்ப்பாணத்தில் இராமநாதன பெண்கள் கல்லூரியும் நிறுவப்பட்டதை தமிழுலகம் இவ்வளவு விரைவில் மறந்திருக்க முடியாது.

இக் கருத்தை நான் வலியுறுத்துவதற்குக் காரணம் உண்டு. தமிழ்ப் பண்பாட்டை அதிகம் சீரழிப்பவர்கள் படித்த, உத்தியோகம் பார்க்கின்ற தமிழ்ப் பெண்களே எனப் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அந்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவோருக்குப் படித்த தமிழ்ப் பெண்கள், பாரதியைச் சாட்சிக் கிழுத்துத் தங்களைப் பாரதியின் புதுமைப் பெண்கள் எனத் தாமே பறைசாற்றிக் கொள்கிறார்கள்.

தங்களின் தவறான நடத்தைக்கு ஒரு மகாகவியைச் சாட்சிக்கு இழுப்பது மகத்தான குற்றம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

அதனால் பாரதியின் புதுமைப் பெண்கள் பற்றி இங்கே எழுதுகிறேன். பாரதியின் புதுமைப் பெண்களாகத் தங்களைக் கூறிக் கொண்டு, பண்பாட்டைச் சிதைப்பவர்களைக் காணும் நாளைய தலைமுறையின் நல்லிதயங்கள், பாரதியின் மேல் இங்கே வெறுப்புக் கொள்ளும்.

ஒரு மகாகவியை அடுத்த தலைமுறை இகழாமல் இருப்பதற்காக, அந்த மகா கவியின் புதுமைப் பெண்கள் பற்றிய கருத்தின் உண்மை நோக்கத்தையும், அக் கருத்தில் அவருக்கே இருந்த முரண்பாட்டையும் இங்கே சுட்டிக் காட்டுவேன்.

இக் கட்டுரை பலரைக் கோபப்படுத்தும். பலருக்கு என்மேல் வெறுப்பை ஏற்படுத்தும். உண்மைகள் சுடுவது தவிர்க்க முடியாததுதான்.

பாரதியாரின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு நான் எழுதிய இக் கட்டுரைக்கு எவரும் தாராளமாக மறுப்புத் தெரிவிக்கலாம்.

மறுப்புக்கு பாரதியின் பாடல்களையே ஆதாரம் காட்டுவது ஆரோக்கியமானது என்பதை ஆரம்பத்திலேயே கூறிக் கொள்கின்றேன்.

## பெண் விடுதலைக் கருத்து

முதலில் பாரதியாரின் பெண் விடுதலைக் கருத்துக்களை ஆராய்வோம். புதிய ஆத்திசூடியை யாத்த பாரதியார் அதிலே பல புதுமையான கருத்துக்களையும் புகுத்தத் தவறவில்லை.

ஔவையாரின் ஆத்தி சூடியிலே 'தை' என்ற எழுத்துக்குத் "தையல் சொற்கேளேல்" என்றே இருக்கிறது. இதற்குப் பல வகையான கருத்துப் பரிமாறல்கள் இன்னும் இடம் பெறுகின்றன.

'தையல்' என்றால் பெண். எனவே பெண்ணின் சொல்லைக் கேட்கக் கூடாது என்று ஔவையார் கூறியதாகக் கருதும் சிலர், ஔவையாரும் பெண்தானே, எனவே ஔவையாரின் அறிவுரைகளையும் கேட்கக் கூடாது தானே என்று கிண்டல் செய்வது இன்னும் குறையவில்லை.



சிலர் 'தையல்' என்பது பெண்களின் இளமைப்பருவம் என்றும், அத்தகைய இளம்பருவத்துப் பெண்களின் சொற்களைத் தான் கேட்கக் கூடாது என ஔவையார் கூறுகிறாரே தவிர, முழுப் பெண்களையும் அவர் 'தையல்' என்று கருதவில்லை என மறுப்பதும், எமது காதுகளில் இன்னும் ஒலிக்கின்றது.

ஆனால், பெண்களின் பருவத்தை ஏழாக வகுத்த தமிழர் அவற்றை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்றே குறிப்பிடுகின்றனர். எனவே 'தையல்' என்ற ஒரு பருவத்தை இங்கே காணவில்லை.

தையல் என்பது பொதுவாக பெண்களைக் குறிக்கும் ஒரு சொல் என்றே பாரதியார் கருதியிருக்கிறார். அதனால் ஔவையார் "தையல் சொற் கேளேல்" என்று கூறியது பெண்களை இழிவு செய்வதாகவே இருக்கிறது, எனப் பாரதியார் கருதியிருக்கிறார்.

இக் கருத்து பாரதியாருக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவிலலை. ஔவையார் பெண்களை இழிவு செய்கிறார் என்று ஆத்திரங் கொண்டு கூறுவது போல் இருக்கிறது. பாரதியாரின் புதிய ஆத்தி சூடியில் வரும் 'தை' என்ற எழுத்துக்கான வாக்கியம்.

"தையலை உயர்வு செய்" என்று அவர் கூறுவது, பெண் விடுதலை நோக்கில் பெண்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற அவரது கருத்தைப் பிரதி பலிப்பதாகக் கொள்ளக் கூடியது.

## மாதரை இழிவு செய்யும் மடமை.

அந்நிய ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த அகன்ற பாரத தேசத்தின் அடிமை விலங்கொடித்து, அல்லல் அறுத்துச், சுதந்திர வாழ்வை மக்கள் அடைய வேண்டும் என்ற ஆசையிலே விடுதலைக் கீத மிசைத்த பாரதியார், தமது 'விடுதலை' என்ற கவிதையிலே அந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை இன மக்களுக்கும் தனித்தனியே விடுதலை வரவேண்டும் என்று பாடுகிறார்.

அடிமைப்பட்ட இனங்களின் சமூக விடுதலையையும், பாரதத்தின் அரசியல் விடுதலையையும் ஒன்றிணைத்துப் பாடும் போது பாரதியார் பெண்களின் விடுதலை பற்றியும் பாடுகிறார்.

பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை.
(விடுதலை -1)

சாதிக் கொடுமையிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்ற கருத்தை இங்கே பாடியிருக்கிறார்.

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை; ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே.
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே.
(விடுதலை -2)

ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற சமூக ஏற்றத் தாழ்வுகளிலிருந்து விடுதலை பெற்று, எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும், என்றும் அதற்கு கல்வியும், செல்வமும் எல்லோரும் பெற வேண்டும் என்றும்; பின்பு மகிழ்ச்சியோடு சாதி வேற்றுமை, சமூக ஏற்றத் தாழ்வுகள் என்பவற்றை மறந்து கூட வேண்டும் என்றும் பாடுவதை இங்கே காணலாம்.

இழிவு கொண்ட மனித ரென்பது இந்தியாவில் இலலையே என்று அவர் பாடுவதிலிருந்து இந்திய சுதந்திரப் போராட்ட உணர்வுகளைக் கிளர்ந்தெளச் செய்யும் நோக்கில் இது பாடப்பட்டுள்ள தென்பது தெளிவாகத் தெரிகிறது.

"எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் இந் நாட்டு மன்னர்" என்று அவர் பாடிய பாடலும் இதனையே புலப்படுத்துகின்றது.

தொடரும்....



காலையில் புன்னகை கதிரவன்
கதிரவனின் புன்னகை பகல்

இரவின் புன்னகை நிலவு
நிலவின் புன்னகை பௌர்ணமி

மரங்களின் புன்னகை மலர்கள்
மலர்களின் புன்னகை வாசம்

கடலின் புன்னகை அலைகள்
அலைகளின் புன்னகை நுரைகள்

ஸ்வரங்களின் புன்னகை இசை
இசையின் புன்னகை காற்று

வானத்தின் புன்னகை வானவில்
வானவில்லின் புன்னகை வர்ணங்கள்

முகிலின் புன்னகை மழை
மழையின் புன்னகை முளை

கல்லின் புன்னகை சிலை
சிலையின் புன்னகை கலை

மலையின் புன்னகை அருவி
அருவியின் புன்னகை சாரல்

மொழியின் புன்னகை தமிழ்
தமிழின் புன்னகை இனிமை

தங்கத்தின் புன்னகை ஆபரணம்
ஆபரணத்தின் புன்னகை மாங்கல்யம்

இதயத்தின் புன்னகை காதல்
காதலின் புன்னகை திருமணம்

பெண்மையின் புன்னகை தாய்மை
தாய்மையின் புன்னகை மழலை

பெற்றோரின் புன்னகை பிள்ளைகள்
பிள்ளைகளின் புன்னகை பேராற்றல்

அடிமையின் புன்னகை சுதந்திரம்
சுதந்திரத்தின் புன்னகை தமிழர்கள்

வீரனின் புன்னகை மாறாத இலட்சியம்
இலட்சியத்தின் புன்னகை வெற்றி

ஊர்களின் புன்னகை ஒற்றுமை
ஒற்றுமையின் புன்னகை பண்ணாகம்

சொற்களின் புன்னகை வார்த்தைகள்
வார்த்தைகளின் புன்னகை கவிதை

பூமியின் புன்னகை பெண்கள்
பெண்களின் புன்னகை பொறுமை


ஆணின் புன்னகை உழைப்பு
உழைப்பின் புன்னகை ஊதியம்

ஏழையின் புன்னகை இறைவன்
இறைவனின் புன்னகை மனிதன்

மனிதனின் புன்னகை கருணை
கருணையின் புன்னகை கடவுள்

○ பண்ணாகம் பவளகாந்தன்

## சிரிக்க... சிந்திக்க...



◆ எதிர்பார்ப்பு இல்லை என்றால், ஏமாற்றமும் இல்லை.

-அலெக்ஸாண்டர் போப்

◆ நீ நினைப்பது சரி என்றால், வாதாடுவதில் என்ன பயன்? நீ நினைப்பது தவறு என்றால் வாதாடுவதில் என்ன பயன்?

-வில் டர்ஸ்ட்

◆ வாக்களிப்பவர்கள் எதையும் தீர்மானிப்பதில்லை. வாக்குகளை எண்பவர்கள் தான் எதையும் தீர்மானிக்கிறார்கள்

- ஜோசப் ஸ்டாலின்

◆ 'தனிமை' என்பது, உறவினர்களுக்கு நடுவில் பணவசதி இல்லாமல் வாடுவது.

-வில் டர்ஸ்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காந்திக்காக காத்திருக்காதே..


இரா. நடராசன்




நமது கண்ணீர்த்துளி அளவுக்கு ஆப்பிரிக்க கண்டத்தின் வரைபடத்தில் ஓர் நாடு உள்ளது. அது லிபெரியா. 1979 இல் இந்த குட்டி நாடு பற்றி சில தகவல்கள் வெளியாகின. நாடு புரட்சியை நோக்கி பீடுநடை போட்டது. விரைவில் ஆபிரிக்க கண்டத்தில் ஓர் சிவந்த தேசம்! உண்மையில் லிபெரியா 1847 இல் விடுவிக்கப்பட்ட. அமெரிக்க கலப்பின அடிமைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு. உருவாக்கப்பட்ட தேசம். ஐரோப்பிய அரசியல் ஜாம்ப வான்களுக்கு லிபெரியா கெட்ட கனவாக இருந்ததால் விரைவில் புரட்சி உடைந்த ஒரு உள்நாட்டுப் போராக பல்வேறு சிறு குழுக்களுக்கு இடையிலான ரத்த வெறிபிடித்த மோதலாக மாறியது... ஆயுதங்கள் உபயம்: அமெரிக்கா மற்றும் நேசநாடுகள், இலவச கறவைமாடு. டி.வி. மிக்ஸி ,கிரைண்டர், போன்று சத்தம் போடாமல் குழந்தைகளுக்கு கூட ஏ.கே 47 வழங்கி அசத்தினார்கள். இருபது வருடம் இலவசமாக... அதன் விளைவு 1.86.000 பேர் மரணம் லெமா ராபர்ட்டா போவி (Leymah Robert Gbowee) தான் எழுதி வெளியீட்டுள்ள மைட்றி பி அவர் பவர்ஸ் (Mighty be our powers) நூலின் தொடக்கத் திலேயே மேற்கண்ட விடயத்தைப் போட்டு உடைக்கிறார். போவியின் நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட நாளில். எப்போதோ என்னிடம் படித்து. இப்போது கல்லூரியில் படிக்கும் என் மாணவர் ஒருவரால் எஸ்.எம். எஸில் மைட்றி பி அவர் பவர்ஸ் நூலை வாசிக்கும்படி பரிந்துரை வந் தது. கைக்கு புத்தகம் கிடைத்து வெகுநாட்கள் அதை நான் சீண்டவில்லை. போவியோடு சேர்ந்து நோபல் பரிசு (அமைதிக்காக) அறிவிக்கப்பட்ட லிபெரியாவின் புதிய அதிபர் (ஆபிரிக்காவின் முதல் பெண் அதி பர்) லென் ஜான்சன் சிர்லீஃப் எழுதிய திஸ் சைல்ட் வில் பி கிரேட் (This child will be great) எனும் (560 பக்க) தடித்த புத்தகத்தை கல்லூரி ஒன்றின் உரைக்காக அவசரமாய் புரட்டியபோது அதில் அவர் போவியை கறுப்பு இனப்பெண்ணாய்ப் பிறந்துவிட்ட காந்தி; என வர்ணிப்பது கண்டு அதிர்ந்து "பவரை" (Mighty be our power) கையில் எடுத்தேன். முதல் அத்தியாயம் கொடுத்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் பதறிய படியே ஒரே இரவில் (இராவோடு ராவாக வாசித்து முடித்தேன். என் வாசிப்பு அனுபவங்களின் மீது ஆணையாக இப்படி ஒரு போராட்டம். இப்படி ஒரு சமூக அவலம்... இவ்வளவு நெஞ்சாழத்தோடு பதிவானதாக அறியப்பட்டது இல்லை. என் வாழ்நாள் முழுதும் எத்தனையோ இரவுகளை இந்த ஒரு புத்தகம் பேயாய் ஆட்டம் காண வைக்கப்போகிறது என அதை வாசிக்கத் தொடங்கும்போது நான் கற்பனை கூட செய்திருக்கவில்லை.




டோல்பர்ட்டின் ஊழல் ஆட்சிக்கு எதிராக சாமுவேல்டோ 1980 இல் ராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றும்போது போவிக்கு எட்டு வயது. டோல்பர்ட்டும் அவரது ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தவர்களும் மரண அணிவகுப்புகளில் சுட்டுக்கொல்லப்பட்டனர். சர்வதேச எதிர்க்குரல்களை சமாளிக்க 1985 இல் பொதுத்தேர்தல் என்கிற ஒன்றை நடத்தி தன்னை சாமுவேல்டோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபராக அறிவித்துக்கொள்ள 1986, 1988, 1989 என அடுத்தடுத்து இராணுவப் புரட்சி.. புதிய புதிய ஆயுதக் குழுக்கள்... புதிய புதிய உள்நாட்டுப் போர்கள், ஆயுத சந்தைகள், மரண ஓலங்கள், சார்லஸ் டெய்லர் 1989 இல் முதல் லிபெரியன் உள்நாட்டு யுத்தம் வழியே தனது அமெரிக்க ஆதரவுக் கொடுங்கோல் அரசை நிறுவும்போது போவிக்கு 17 வயது.

1986 வரை தொடர்ந்த அந்த ரத்த வெறியாட்டத்தை தனது நூலில் போவி வர்ணித்துச் சொல்கிறார். குழந்தைப் போர் வீரர்கள்; எங்கோ இருந்து கொட்டிய பணம் யாரிடமிருந்தோ குவிந்த ஆயுதங்கள்.. சாலைகளில் அழுகிய பிணங்கள், பாலியல் பலாத்காரம் என்பது ஆயுதப் போர்களின் கலாசாரமாகவே ஆகிப்போனதாக இரத்தமும் சதையுமாய் அவர் முன் வைக்கும் புத்தகத்தின் பகுதிகள் தம்மை அமில வார்த்தைகளால் எரியூட்டுபவை.

தனது வாழ்க்கைத் துணையான டேனியஸ் என்பவனுடனும் தன் குழந்தைகளுடனும் கானாவிற்கு அகதியாய் வெளியேறும் போவி பிச்சை எடுக்கிறார். திறந்த வெளியில் உடலை விற்று குழந்தைகளுக்கு உணவளிக்கும் அவலங்களின் அலறலால் தனது கதையை சொல்லிப் போகிறார். தனது தாயும், தந்தையும் பரிதவிக்கும் தனது சொந்த மண்ணிற்கு... மரணத்தை எதிர்கொண்டு குமட்டும் பிணவாடை வீசும் வீதி வழியே புகைக்கும் ஒரு யுனெஸ்கோ பேருந்தில் பிதுங்கும் பெண் குவியலில் ஒருவராய்க் குந்தைகளுடன் பிடிவாதமாய் கணவனைத் துறந்து நாடு திரும்புகிறார். தான் படித்த மருத்துவ தாதி வேலையில் "மணரோவிய லூதரன்" தேவாலய மருத்துவமனையில் நான்காம் நாள் இரவு சம்பளமேதும் இன்றி சேர்ந்து கொள்கிறார். கண் எதிரே நடக்கும் கொடுங்கோலன் சார்லஸ் டெய்லர் ஆட்சிகளும் அதற்கு எதிராய் களமிறங்கிய ஏழெட்டு ஆயுத இனக் குழுக்களுக்கும் இடையிலான போரினால் சிதிலமடைந்த நாட்களில் போவி தஞ்சமடைந்தது புத்தகங்களிடம் தான். மார்டின்லூதர், காந்தி, மண்டேலா, பிடல் காஸ்ட்ரோ என..

அவர் தேடித்தேடி வாசித்தவை மனித பதப்படுத்தலின் ஆதார புருஷர்களின் நேரடி அனுபவங்களாய் இருந்தன. எவ்வித அரசியல் புரிதலும் அற்ற வெற்று ஆயுதப் போராட்டங்களின் உண்மைத் தன்மையை அவரால் உணர முடிந்தது.

புழுதிப் புயலுக்கு நடுவே உக்கிரமான இரண்டாம் லிபெரிய உள்நாட்டு யுத்தம் தொடங்கிய அந்த நாளில் தென் ஆபிரிக்க அமைதிக் குழுவின் கூட்டம் ஒன்றில் பெண்களுக்கான வகுப்பு அவரை ஈர்த்தது. அடுத்தடுத்த அரசியல் வகுப்புக்களின்போது வாழ்க்கை தனக்களித்த பாடங்களின் உள் அர்த்தங்கள் அவருக்குப் பிடிபடத் தொடங்குகின்றன. யுத்தம் எந்த இனக்குழுவையும் வெல்ல வைக்கப்போவது இல்லை. யுத்தம் நாட்டின் அனைத்து தாய்மார்களையும் தோல்வியுற வைக்கிறது. தாய் பார்த்துக் கதறியபடியே வாழ்கிறாள். கண்முன்னே பிள்ளைகள் ஆயுத விளையாட்டில் துடித்துச் சாவதை அவர்கள் கண்முன் தான் கற்பழிக்கப்படுவதை. அவளது கண்முன் அவளது குழந்தைகளின் முலைக்காம்புகள் அறுபடுவதை.. எந்த நோக்கமும் அற்ற யுத்தம் எண்ணெய் வயல்களை சூறையாடி.. எங்கோ யாரோ கொழுக்கும் ஆயுதச்சந்தை கலாசாரத்தை அதன் இரக்கமற்ற நேரடி இரத்தம் உறிஞ்சும் யதார்த்தத்தை உணரத் தொடங்கினார் போவி.

ஞாயிறு தேவாலய சந்திப்புகள்.. வெள்ளிக்கிழமையின் பள்ளிவாசல் போவி செய்த வேலை அதுவரை வரலாற்றில் இடம்பெறாத வினோத அரசியல் நடவடிக்கை. தாய்.. தாய்... தாய்..அவர் ஒவ்வொருவராய் சந்தித்து தாய்களுக்கான அமைப்பை கட்டமைக்கத் தொடங்கி இருந்தார். ஒரே கோரிக்கை.. ஒற்றை முழக்கம். யுத்தத்தை நிறுத்து மகனே; கொல்வதை நிறுத்து கணவனே, அவர்கள் இரகசியமாக கூடத் தொடங்கினார்கள். எளிதாக இருக்கவில்லைதான். ஆனால் விரைவில் அவர்களது நெஞ்சழுத்தமும் பிடிவாதமும் வெல்லத் தொடங்கியது.

பலியும் துயரமும் மிக்க இந்தக் கதையின் நம்பிக்கைப் பக்கங்கள் அமரத்தவம் மிக்கவை. கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்து பலமுறை இருட்டில் வீட்டில் யாரும் பார்க்கா வண்ணம் விம்ம வைக்கும் வேகம் கொண்டவை. அவ்வளவு எளிதில் நின்று விடுமா யுத்தம்?. வரலாற்றில் அடங்காத கொலை இச்சைகள் கொண்ட கொடுங்கோலர்கள் கதை நாம் அறியாததா?, நூதனப் போராட்டங்கள் எட்டு மாத "செக்ஸ் ஸ்டிரைக்;" தான் உள்ளத்திலேயே நம்மை திகைக்க வைக்கிறது. அமெரிக்கா உட்பட ஆதிக்க நாடுகளின் பத்திரிகை செய்தி ஆவதே தங்களது போரின் முக்கிய அங்கம் என்பதை பின் நாட்களில்தான் உணர்ந்ததாய் போவி கூறுகிறார்.

கொடுங்கோலன் டெய்லர் தினமும் தன் அலுவலகம் போகும் பாதையில். ஒரு மைதானத்தில் தொடர்ந்து 46 நாட்கள் கூடிய வெள்ளை டி சர்ட் அணிந்த தாய்; போராளிகள்.. கானாவில் ஆயுத குழுக்களுக்கு இடையிலான பேச்சு வார்த்தையில் ஈடுபட அவனைப் பணியவைப்பதில் அடைந்தது முதல் வெற்றி.. கானா அமைதிப் பேச்சுவார்த்தை வாரங்கள் மாதங்களைக் கடந்த போது லிபெரிய பெண் குழுக்களுடன் அதே வெள்ளை டி சார்ட் படையுடன் பேச்சுவார்த்தை நடத்த நட்சத்திர ஓட்டலைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டு.. அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தாகவில்லையாயின்... நட்சத்திர ஓட்டலின் வாயிலில் தாய் - போராளிகள் உடுப்புக்களை கழற்றி பிரதான சாலையில் நிர்வாண மறியலில் ஈடுபடப்போவதாய் போராட்டத்தை அறிவிக்க 2003 இல் ஆகஸ்ட் 18 இல் ஆயுதக் குழுக்கள் அனைத்தும் அமைதி ஒப்பந்தத்தில் இணைந்தன. 2005 இல் எலன் ஜான்சன் சிர் சீஃப் ஆபிரிக்காவின் முதல் பெண் அதிபராய் வெற்றி காணும் வரை போவியும் அவரது தாய் - போராளிகளும் ஓயவில்லை.

சிர்லீஃபின் 'திஸ் சைல்ட் வில் பி கிரேட்' நூலினையம் பிறகு முழுமையாய் வாசித்த போது, அவர் அமெரிக்காவிலிருந்து விடுதலை பெற்று அங்கு குடியேறிய கறுப்பு அடிமைகளின் வழிவந்தவரல்ல... லிபெரிய மண்ணின் பழங்குடி இனக்குழுவைச் சேர்ந்தவர் என்பதை அறிந்தேன். உண்மையில் 1980 இல் எந்த அரசுக்கு எதிராக முதல் புரட்சி வெடித்ததோ அந்த அரசில் துணை அமைச்சராக இருந்தவர் வீட்டுக்காவலிலும் எட்டு முறை கொடுஞ்சிறையிலும் அடைக்கப்பட்டு நான்குமுறை நாடு கடத்தப்படும் அவலங்களுடன் மீண்டும் மீண்டும் யுத்தத்திற்கு எதிராக மக்களோடு இணைந்து போராடிய சிர்லீஃப் சிதைந்த லிபெரியாவை மறுகட்டுமானம் செய்ய 2005 முதல் நிகழ்த்திவரும் முயற்சி களை அவரது புத்தகங்கள் முன்வைக்கிறது.

அவர் பிறந்து சில நாட்களே ஆனபோது அவரது இல்லம் வந்த பெரியவர் ஒருவர் இந்தக் குழந்தை எதிர்காலத்தில் மாபெரும் சக்தியாக உருவெடுக்கும் (திஸ் சைல்ட் வில் பி கிரேட்) என கூறியதாய் சில்லீஃபின் தாய் அடிக்கடி கூறுகிறார். பலமுறை அவரும் அவரது சகோதரிகளும் சிரிக்கிறார்கள். சில்லீஃபின வாழ்க்கை வறுமையும், தோல்விகளும் மிக்கது. உடன் பள்ளியில் படித்த பெண்கள் கல்லூரி சென்று... வறுமை காரணமாக சில்லீஃப் எடுப்பு வேலைக்கு அனுப்பப்பட்டார். எனினும் இரண்டு நூல்களுமே சொல்வது ஒரு நாட்டின் கதையை மட்டுமே அல்ல.. இவை தாம் உண்மையான நம்பிக்கை நூல்கள்.

ஒரு இடத்தில் போவி சொல்கிறார் காயம் பட்டு இரத்தம் வழிந்த என் மார்பகத்தைப் பரிசோதித்த ஆங்கில (யுனெஸ்கோ) மருத்துவர் அதிர்ச்சியடைந்தார். இத்தனை சின்ன இடத்தில் இவ்வளவு வடுக்களா எனப் பார்க்கிறாயா?... இது மார்பகமல்ல?... எனது நாடு கண்ட யுத்தச்சுவடுகள் அவை.. எங்கள் வரலாறு எழுதிச் சென்ற ஆவணங்கள் அவை...

தனது வாழ்வின் ஒற்றைவரிச் செய்திபோல நோபல் பரிசு ஏற்புரையில் ஆபிரிக்கப் பெண்களைப் பார்த்து போவி அறைகூவுகிறார் "நீ காந்திக்காக காத்திருக்காதே... மார்ட்டின் லூதருக்காக காத்திருக்காதே... மண்டேலா வர காத்திருக்காதே.." எழுந்து நின்று பார்... நீ தான் அது என்பதை உணருவாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதல்கள், முரண்கள், முறுகல்களுக்கிடையே களை கட்டத் தொடங்கியுள்ள தேர்தல் களம்



இந்த நிமிடம் வரைக்கும் நடக்குமா? இல்லையாவென தெரிந்திராத வடக்கு மாகாணசபைக்கான வேட்பு மனுத்தாக்கல் முடிவுக்கு வந்துவிட்டது. கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல், பரவலாக அனைத்து தரப்பினரும் ஆர்வத்தை வழமை போன்று தூண்டுவதாகவே இருந்தது. பட்டியல் "ஆஹா" ரகமாக இல்லாத போதும் பரவாயில்லை இரகமாகவே இருந்தது அதிசயமே. எல்லாவற்றிற்கும் மேலாக எதிர்த்தரப்புக்கள் "தயா மாஸ்டர்" போன்றவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்ததினூடாக வாக்கு வங்கியை கெட்டிப்படுத்தி சென்றிருக்கிறார்கள்.

வட மாகாண சபைத் தேர்தல்- 2013



## கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பு....

முன்னதாக கட்சிகளுக்கிடையேயான பாகப்பிரிவினையில் சூடு பிடிக்கத் தொடங்கியிருந்த தேர்தல் களம், வெளிநடப்புகள், இழுத்துப் பிடிப்புகள் சமரசங்களென நீண்டிருந்தது. தத்தமது கட்சிக்கான இட ஒதுக்கீட்டிற்காகப் பல தலைவர்களும் வவுனியா–கொழும்பு–யாழ்ப்பாணமென சுற்றிச் சுழல் வேண்டியிருந்தது. சில தலைவர்கள் சொந்த கிராமங்களில் முடிவுக்காக காத்திருந்தார்கள். ஒருவாறாக சில மனக்கசப்புக்களுடன் பாகப்பிரிவினை முடிவுக்கு வந்து விட்ட போதும், இடம் கிடைக்காத கொதிப்பு பரவலாக பல இடங்களிலும் இருந்தது.

கட்சிகளின் சார்பினில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் தெரிவினில், தமிழரசுக் கட்சி நிரம்பவுமே நொந்து போயிருந்தது. வேட்பு மனு தாக்கல் செய்த திங்கட் கிழமை காலை வரையினில் இழுபறி தொடர்ந்திருந்தது. ஆசனம் கிடைக்கவில்லையென்பதால் கோபித்துக் கொண்டு, ராஜினாமாக் கடிதத்துடன் பொ.கனகசபாபதி வெளியேறினார். மாவை சேனாதிராசாவின் வலது கரங்களுள் ஒருவரான கனகசபாபதியின் வெளியேற்றத்தினிடையே, குலநாயகமும் ராஜினாமா சமிக்ஞைகளை வெளிப்படுத்தினார். இன்னும் பலர் முறுக்கிக் கொண்டு திரிந்தனர். இன்னும் சிலரோ போலிகளது பெயரில் ஊடக அறிக்கைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை கூட வெளியிட்டிருந்தனர்.

மாவை சேனாதிராசா தொடர்பாகவுள்ள விமர்சனங்களில், விரைந்து முடி வெடுக்கும் வலுவற்றவர் என்பது முக்கியமானது. அவ் வகையினில் வேட்பாளர் தெரிவு விவகாரத்தினில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியாது மாவை திணறிக் கொண்டிருந்தமை அப்பட்டமாகவே தெரிந்தது. எல்லோரிடையேயும் நல்ல பிள்ளை பெயர் எடுப்பதென்பது திறமையானதோர் முகாமை நிர்வாகி ஒருவரினால் முடியாததொன்றே. எனினும் தான் அவ்வாறான தீர்க்கமான முடிவை எடுப்பதற்கான பதிலை ஜனநாயக கட்டமைப்பினில் தெளிவு படுத்த தயாராக இருக்க வேண்டும்.

ஆனாலும் புதிதாக முளைத்துள்ள அரசியல்வாதிகளது கதிரைக்கனவு, மக்களிடையே தவறான அர்த்தங்களை தோற்றுவித்து விடக்கூடிய அபாயம் தொடர்ந்துமுள்ளது. அர்ப்பணிப்புக்களோ பிரச்சினைகள் பற்றிய போதிய புரிதல்களோவின்றி இளம் சமூகம் பரவலாக கதிரைகளிற்காக அலைந்தது. தீக்குளிக்கப் போவதாகக் கூட ஊடக அறிக்கைகள் பறந்தன. இங்கு இடமில்லையென்றால் மறுபுறத்தால் பங்காளிக் கட்சிகளிடம் பேரம் பேசுதல்களும் நடந்தன. ஆனாலும் ஒரு சிலரால் மட்டுமே அதில் வெல்லவும் முடிந்தது.

எனினும் பங்காளிக் கட்சிக்களினில் தமிழர் விடுதலைக் கூட்டணியிடையே எழுந்த சிறு முணு முணுப்புக்களை தவிர்த்து அங்கு மோதல்கள் இருந்திருக்கவில்லை. தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களிற்கு ஓரளவிற்கேனும் பொருத்தமானவர்களை தெரிவு செய்ய அவற்றினால் முடிந்தது. இதனால் அவர்கள் பேணி வந்திருந்த ஆதரவுப்புலத்திலும் சேதங்கள் ஏற்பட்டிருக்கவில்லை.

எது எவ்வாறாகினும் தமிழரசுக்கட்சி, புறந்தள்ளி வெளியே விட்டவர்களை, நட்புறவுடனேயும் அரவணைத்து தக்க வைக்க தவறியே விட்டது. அதன் எதிர் வலைகள், தேர்தலிற்கு முன்பதாக வெளித் தெரியுமென்றே நம்பப்படுகின்றது. பங்காளி கட்சிகளது அபரிமிதமான வளர்ச்சி மாற்று இல்லையென்பதால் கூட்டமைப்பிற்கு வாக்களிக்கும் மனோபாவம், அடுத்து வரும் தேர்தல்கள் வரையும் நிலைத்திருக்கப்போவதில்லை. இந்த உண்மையை புரிந்து கொள்ள தமிழரசுக் கட்சி தலைமை தவறி வருகின்றமை பின்னடைவுகளிற்கு வழிகோலப் போகின்றது.

எனினும் கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு பரவலாக, அனைத்து இடங்களையும் "கவர்" பண்ணுவதாகவே திட்டமிட்டு அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. எனினும் தீவகம், வலிகாமம் வடக்கிற்கான பிரதிநிதித்துவம் இன்மை, கூடியளவில் இளஞ் சமூகத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமை, கைவிடப்பட்ட சாதியத்திற்கு புத்துயிர் ஊட்டும் வகையினில் வேட்பாளர் தெரிவினில், முக்கியத்துவமென பல குறைகள் இருக்கின்ற போதும் "ஆஹா" இராகமில்லா விடினும், பரவாயில்லை இராகமாகவே வேட்பாளர் பட்டியல் இருக்கின்றது.

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு...

ஏற்கெனவே கைவசம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினால் பேணப்பட்டு வரும் வாக்கு வங்கிக்கு அப்பால் வாக்குகளைத் திரட்டக் கூடியவராக புலிகளது முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்டர் அவதானிக்கப்பட்டார். குறிப்பாக முன்னாள் போராளிகளுக்காக, அவர்களது குடும்பங்களிற்காக குரல் கொடுக்கப்போவதாக அடிக்கடி தயா மாஸ்டர் கூறிக்கொண்டிருந்தார். அவ்வகையினில் சிவில் பாதுகாப்பு குழுவென இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள முன்னாள் போராளிகளது வாக்குகள் மற்றும் அவர்களது குடும்பங்களது வாக்குகளென பெரும் கனவுகள் அவரிடமிருந்தது. ஆனால் அரசியல் சாணக்கியத்தின் மூலமாக, அவரது அரசியல் எதிர்காலமென்பது முற்றாக சூனிய மாக்கப்பட்டுள்ளது. மீளெழுவதற்கு கூட வக்கற்று அவர் முடக்கபட்டு விட்டாரென்பதே உண்மை.

வடக்கின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முதலமைச்சர் வேட்பாளர் யாரென்பதே சர்ச்சைகளின் மையமாக இருந்திருக்கின்றது. கொழும்பினில் மூத்த தமிழ் பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்து உரையாடுகையினில் தனது 20 வருட கால முதலமைச்சர் கனவு பற்றி அவர் பிரஸ்தாபித்திருந்தார். ஆனால் துரதிஷ்டவசமாக அவருக்கு அச்சந்தர்ப்பம் கிட்டியிருக்கவில்லை. எவ்வாறாயினும் அக்கதிரையினில் அமர்வதற்கான கனவு அவரிடமிருப்பதாக ஆதரவாளர்கள் தரப்பினில் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் முதலமைச்சர் கனவுடன் டக்ளஸ் தேவானந்தா திரிந்த காலப்பகுதியினில் அதனை ஏற்றுக் கொள்ள தயாமாஸ்டர் மறுத்து வந்தமையே சர்ச்சைகளின் ஆரம்பமெனக் கூறப்படுகின்றது.

டக்ளஸ் தேவானந்தாவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரென்பதை ஏற்றுக் கொள்ள ஊடக மாநாடுகளிலும் கூட மறுதலித்து தயாமாஸ்டர் கருத்துகளை முன்வைத்து பேசி வந்திருந்தார்.

வெற்றிலையா இல்லை வீணையினில் தனித்துப் போட்டியிடுவதா? எனக் கேள்விகளுடன் திரிந்த ஈழமக்கள் ஜனநாயக கட்சி, பேரம் பேசலில் சிக்குண்டு தூக்கி வீசப்பட்டவர்களுள் ஒருவரே தயாமாஸ்டராவார். அவரற்ற தேர்தலில் கொஞ்ச நஞ்சமேனும் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் போராளி களது ஆதரவு இனி நிச்சயம் கிட்டப்போவதில்லை.

மறுபுறத்தே சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான அங்கஜன், போட்டி அரசியலாளராக வளர்க்கப்பட்டு வந்திருந்த நிலையினில் அதற்கும் ஆப்பு வைக்கப்பட்டிருப்பதும் அரசியல் சாணக்கியமே. தற்போது சுதந்திரக் கட்சியின் சார்பினில் போட்டியிடப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ள ரெமீடியஸ், பொன்னம்பலம், சுபியானென பலரும் தீவிர விசுவாசிகளேயென் பதும் அனைவருக்கும் நன்கு தெரிந்ததே.

இவர்களிற்கு அப்பால் முன்னர் விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்ததாக விமர்சிக்கப்பட்ட சுந்தரம் டிவகலால உள்ளிட்ட ஒரு சிலரை தவிர வழமை போன்றே தனது ஆள், அம்பு படையணிகளுடன் டக்ளஸ் தேர்தல் களம் புகுந்துள்ளார். உயர் மட்டங்களிடையே உக்கிரமடைந்திருப்பதாக பேசப்படும் உட்கட்சி மோதல்கள் மத்தியினில் பலமான கூட்டமைப்பை மீண்டும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.




திட்டமிட்டு, தயக்கம் இன்றி, எதைச் செய்ய பயப்படுகிறீர்களோ, அதைச் செய்யுங்கள்! 'நான் பயப்படுகின்ற விஷயத்தையே நான் செய்கிறேன்' என்று திரும்பத் திரும்ப உங்களுக்கு நீங்களே உணர்த்திக் கொள்ளுங்கள். அதையும் பயந்து கொண்டு செய்யாதீர்கள். துணிச்சலுடன் செய்யுங்கள். இதைச் செய்யும் போது முதலில் பயமாகத்தான் இருக்கும். பரவாயில்லை. பயப்படுவதையே செய்யுங்கள். பயத்தைப் பார்த்து சிரியுங்கள். பயத்தை கேலி செய்யுங்கள். பயத்தை உதையுங்கள். மிதியுங்கள். பயப்படுவதையே செய்து கொண்டு இருக்கிறேன் என்கிற உணர்ச்சியை மட்டும் பழக்காதீர்கள். எப்படியும் செய்து கொண்டே இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியவன்
Advertising unit




புதியவனோடு பயணிக்க
அழையுங்கள்.

மன்னார் – 023 222 3545
யாழ்ப்பாணம் – 071 679 2692
கிளிநொச்சி – 077 724 2401
வவுனியா – 077 744 6094
முல்லைத்தீவு – 077 349 5801

எங்கள் தேடல் !
உங்களின் வாழ்க்கை.

புதியவன்
இல #87 பிரதான வீதி
மன்னார்
Mail :-putheyavan2013@gmail.com
www.putheyavan.com


## மனித சிறுநீரிலிருந்து பற்கள் தயாரிப்பு.




மனித சிறுநீரில் இருந்து பற்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர் சீன ஆராய்ச்சியாளர்கள்.சீனாவின் குவாங் சுவோ பயோமெடிசின் மற்றும் ஹெல்த் டீத் நிறுவனத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் செயற்கை பற்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.இதன் ஒருபகுதியாக மனித சிறுநீரிலிருந்து வெளியேறும் செல்கள் சேகரிக்கப்பட்டு, பரிசோதனை கூடத்தில் பரிசோதிக்கப்பட்டது.அந்த செல்கள் ரீஜெனரேஷன் முறையில் ஸ்டெம் செல்களாக மாற்றம் செய்யப்பட்டன.இந்த ஸ்டெம் செல்களுடன் எலிகளின் உடல்களில் இருந்து எடுக்கப்பட்ட பல்வேறு பொருள்கள் ஆகியவற்றை சேர்த்து செயற்கைப் பற்களை உருவாக்கும் சோதனை நடத்தப்பட்டது.

இந்த பரிசோதனையில் 3 வார காலத்தில் செயற்கை பற்கள் உருவானது.மேலும் பற்களுக்குத் தேவையான டென்டல் பல்ப், டென்டின் , எனாமல் ஸ்பேஸ், எனாமல் ஆர்கன் உள்ளிட்டவை தேவையான அளவு இருந்ததும் தெரிய வந்தது.எனினும் இயற்கையான பற்களைப் போன்று இதில் கடினத்தன்மை இல்லை என்றும், இந்த சோதனையில் எதிர்பார்த்த வெற்றி கிடைத்துள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.மேலும் இந்த முறையில் பற்களில் கடினத்தன்மையை ஏற்படுத்த ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

## இணையத்தில் நொடிப்பொழுதில் பல வேலைகள்!

நாம் தினமும் பயன்படுத்தும் இணையத்தில் நொடிப்பொழுதில் பல தகவல்கள் பரிமாறிக்கொண்டிருக்கின்றன.அதன்படி. 1 நிமிடத்தில் 2 மில்லியன் தேடல்கள் கூகுளில் நிகழ்கிறது. 72 மணித்தியால வீடியோக்கள் யுடியூப்பில் தரவேற்றம் செய்யப்படுகின்றன.70 டொமைன்கள் பதியப்படுவதுடன், 571 இணையதத்ளங்களும் புதிதாக உருவாக்கப்படுகின்றன.





சமூகவலைதளமான பேஸ்புக்கில் 1.8 மில்லியன்லைக் (likes)களும், டிவிட்டரில் 278.000 டிவிட்களும் பதிவாகின்றன. அதேபோல 204 மில்லியன் மின்னஞ்சல்கள் ஒரு நிமிடத்தில் அனுப்பப்படுகின்றன. இன்னும் பல இணையசேவைகள் ஒரு நிமிடத்தில் வியக்கத்தக்க வகையில் நிகழ்கின்றன. உதாரணமாக கடந்த வருடத்தை விட இந்த வருடம் 36 மில்லியன் மின்னஞ்சல்கள் கூடுதலாக அனுப்பப்படுகின்றன.


# உடன் அழையுங்கள்
Jaffna's No1
DIAL SMART
Call Taxi





Other Services
Room Services & Van Services
(Ac.Non Ac Services)






181 MAIN STREET
NELLIADY.
0773 600 630

km அடிப்படையில் கட்டணம்
குறைந்த கட்டணம்! நிறைவான பயணம்!!


இப்பத்திரிகை #87, பிரதான வீதி,மன்னாரில் அமைந்துள்ள [illegible] 02.08.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org